நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

பெப். 05 - 11, 2009

ரூபா 30.00

வாரமலர் தினமுரசு 800

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

வேட்டுக்களால் கலங்குகிறது முல்லை; முகர்ஜியின் விஜயம் வெற்று வேட்டு?

சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் பிரபாகாரனின் அடுத்த அதிரடி முடிவு!

மத்திய மாகாணத்தின் அடுத்த தமிழ்க் கல்வி அமைச்சர் யார்?

மூன்றாவது கண்

இலங்கையில் மது,சிகரட்டால் வருடாந்தம் 40,000 பேர் பலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம்

உயிரோடு கலந்த சிவசோதி

ஆன்மாக்கள் பிறவி எடுக்கின்றபோது முற்பிறப்பில் அவை செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பனவாக இருக்கும்(பிறவியெடுக்கும்) என்பது ஐதீகம்.

அதற்கிணங்க, 'மனிதராகப் பிறவி எடுத்த ஆன்மாக்கள் பூலோக வாழ்க்கையில் தாம் செய்து கொண்ட நற்காரியங்களால் மீண்டும் சிவசோதியுடன் கலக்கின்றன என்னும் தத்துவத்தை, அடிப்படையாகக் கொண்டியங்குவதுதான் சைவம்'. அந்தக் கருத்தைப் பல ஞானிகள் கூறி வைத்ததுபோல் திருமூலர் சுவாமிகளும் ஈண்டு கூறியிருப்பதை இங்கு கவனிப்போமாக.

"அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர் பெற்று உருகச் செய்த அவ்வுரு
அப்பினில் கூடிய தொன்றாகு மாறுபோல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே".

கடல் நீரில் உப்புக் கலந்திருப்பதுபோல் பஞ்ச பூதங்களின் உத வியோடு உடலில் கலந்திருக்கும் உயிரானது, மனித உடலில் கலந்து நிற்கிறது. அது உடலைவிட்டுப் பிரிந்து மீண்டும் சிவசோதி யுடன் கலக்கும் என்பதாம்.

என். எஸ். ராஜா, தம்பலகமம்.

இறைவன் எம்மோடு இருப்பார்

சகோதர சகோதரிகளே, இறுதியாக நான் உங்களுக்குச் சொல்வது மகிழ்ச்சியாயிருங்கள். உங்கள் நடத்தையைச் சீர்படுத்திக்கொள்ளுங்கள். என் அறிவுரைக்குச் செவி சாயுங்கள். மன ஒற்றுமை கொண்டிருங்கள். அமைதியுடன் வாழுங்கள். அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்.

(2கொரி 13அதி.11)

அன்புச் சகோதரர்களே! இவ்வுலகில் நாம் வாழ்வதோ கொஞ்சக் காலம். இறைவனின் கட்டளைகளுக்கு அடிபணிந்து அதன்படி நாம் நடக்கும்போது எமது வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். மற்றவர்களின் வாழ்க்கையையும் மகிழ்ச்சியடையச் செய்வதோடு மட்டுமல்ல, இறைவன் தனது ஆலயமாகிய எம் இதயத்தில் குடிகொண்டு நிலையாக ஆட்சி புரிவார். கவலை,துன்பம் என்றுமே எம்மை அணுகா. பிறகு நாம் ஏன் கவலைப்பட வேண்டும். கடவுளின் கட்டளைக்கு அடி பணிந்தும் அவரது அறிவுரைக்கு செவிசாய்த்தும் நடப்போமே!

- ஜோசப், அருள்சாமி, திகனை.

மறுமைக்காக முயற்சி செய்யுங்கள்

எவர் இவ்வுலக வாழ்க்கையையும்,அதன் அலங்காரத்தையும் விரும்புகிறார்களோ அவர்களுக்கு அவர்களின் முயற்சியின் பல னைச் சிறிதும் குறைவில்லாமல் உலகிலேயே கொடுத்துவிடுவோம். மறுமையில் அவர்களுக்கு நரகத்தைத் தவிர வேறில்லை. அவர்கள் உலகத்தில் செய்த (நல்ல காரியங்கள்) அனைத்தும் அழிந்துவிட்டன. ஏனென்றால் அவர்கள் செய்தவை அனைத்தும் வீணானவையே!

(ஹூத்.15,16)

''அவர்கள் இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் மறுமையுடன் ஒப்பிடும் போது(உலக வாழ்க்கையும் இதன் இன்பங்களும்) மிகவும் அற்புதமானதே''

அர்ரஸ்த்(13,16)

இந்தப் பரிசுத்த ஆயத்துக்கள் அனைத்தினுடைய நோக்கம் என்னவென்றால் எவர் மறுமைக்கு முன் இவ்வுலக வாழ்க்கைக்கு முதலிடம் கொடுப்பாரோ அவர் பெரும் நட்டமடைந்தவராவார் என்பதுதான்.

-ஹஸீனா ஏ.அஸீஸ், கல்முனை -05.

கவிதைப் போட்டி இல.797



பாராட்டுக்குரியது எச்சரிக்கை!

உன்னதத் தலைவர்களை
வரிசையாகச் சாய்த்த
நயவஞ்சகம்
தானும் புனிதமென்று
மாயக் கோலம் பூண...
அடுத்த தலைமைத்துவம்
ஏமாறுமா?
அறிவு உள்ளது...
யோசிக்கக் கடவது!

-ஆர். இளங்கோவன், கொழும்பு-14.

கவிதைப் போட்டி இல.800

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 10.02.2009

கவிதைப் போட்டி இல. 800
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.

புதைகுழிப் பொக்கிஷம்!

கபால பைரவன்
களிநடம் புரியும்
கலையரங்கமோ
இதுவென
வியந்துவிடாதீர்கள்.
கம்போடியாவில்
காருண்ய சீலன்
பொல்பொட்டின்
ஆட்சிக் காலத்தில்
நிகழ்த்திய
புதைகுழிப்
பொக்கிஷங்களில்
இதுவும் ஒன்றாகும்.

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

விளம்பரம்

அண்டை நாடுகளின்
ஆயுத உற்பத்திகள்
அதிகரித்ததனால்
சண்டை நாடுகளில்
மண்டை ஓடுகள்
முற்றிலும் இலவசம்!

-எம்.ரீ.எம்.சைலாஸ், கம்மல்துறை.

அவசரம் அவசியம்

சுயநலப் பிசாசை
வெளியேற்றி இந்த
மண்டை ஓடுகளால் மதிற்
சுவர் எழுப்புங்கள்.
மறுபடி அது
நுழையாதிருக்கட்டும்.
அதற்குப் பலியான நமது
உடன் பிறப்புக்களின்
மண்டை ஓடுகளோடு
மனித நேயத்தின் மண்டை
ஓடும் கிடக்கிறது
தேடிக் கண்டுபிடியுங்கள்,
அதை நாம்
மறுபடி
உயிர்பித்தாகவேண்டும்.

-உயிர்ப்பித்தன், கொழும்பு.

தெரு!

இனி
தீவின் தெருக்களெல்லாம்
மண்டையோட்டினால்
இடப்படலாம்.
கற்களை விட
மண்டையோடுகள்
மலிவாகக் கிடைப்பதால்!

-வீரா, ஏறாவூர்.

தீவிரவாதத்தின் பரிசு!

நாளும் பொழுதும்
தீவிரவாதம்
தலைவிரித்துத்
தாண்டவமாடுவதால்
பனையின் கனியென
உருளும் தலைகளின்
எண்ணிக்கையும்
உயர்ந்து கொண்டே
செல்கின்றன.

-ஏ.எம்.அல்-அப்ஸர், ஏறாவூர்- 2.

சண்டையோடும் மண்டையோடும்!

மண்ணுக்காக
மக்கள் சிலர் எப்போதும்
சண்டையோடு
முடிவில் மிஞ்சப்
போவது
மண்டையோடு.

நாட்டில் அனைவரும்
வாழ்ந்தால்
ஒற்றுமையோடு
நிச்சயமாய் உலகில்
உயரும் நம் தாய்
நாடு!

-சோலைக்குயில் வஸனி, கல்முனை-07.

சான்று!

'ஆயுத' களத்திலே
அறுவடை ஒன்றுமில்லை
'புகழ்' பூத்த தமிழினம்
பூண்டோடு அழிந்தது.
பூமியுமில்லை, புகழுமில்லை
தமிழன் வாழ்ந்த சான்று
தலை மண்டையோடு மிச்சம்.

-பாலா, மட்டக்களப்பு.

சரித்திரம்

அதிகார வெறியால்
மண்டையோடுகளின் மேல்
ஆட்டம் போட விரும்பிய
அத்தனை பேருமே
இறுதியில்
மண்டையோடுகளாய்ப்
போனதுதான்...
சரித்திரம்...!

-அ.சந்தியாகோ, கண்டி.

உங்கள் பக்கம்

வாக்களிப்பதற்கு விதிமுறை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

பெப்ரவரி 14 இல் நடைபெறவுள்ள மா காண சபைத் தேர்தலில் வெளிமாவட்டங்களில் தொழில்புரியும் மலையகத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்கத் தொழில்தருநர்கள் விடுமுறை வழங்குவார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது. 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது வடபகுதி மக்களின் வாக்களிக்கும் உரி மையைத் புலிகள் தடைசெய்தது போன்று 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு நகரில் தொழில்புரியும் மலையகத்தவர்களுக்கு முதலாளிகள் வாக்களிக்க விடுமுறை தராது, வாக்களிக்கும் உரிமையை மறைமுகமாகப் பறித்தது பற்றி இதுவரை எந்தவொரு மலையகத் தலைவர்களும் பேசவில்லை. புதுவருட (சித்திரை) வர்த்தக காலத்தினால் ஊழியர்களுக்கு விடுமுறை தர வர்த்தகர்கள் முன்வரவில்லை.

ஜனநாயக நாட்டில் இச்செயல் முற்றிலும் ஜனநாயகத்துக்கு முரணானது. எமது நாட்டின் அரசியல் யாப்புக்கும், மனித உரிமைக்கும் எதிரான செயலாகும். வாக்குரிமை பெற்றவனின் சுயவிருப்புக்கு எதிரான மிகவும் கேவலமான செயலுமாகும்.

மலையகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருநாகல் போன்ற மாவட்டங்களில் கடைகள், அச்சகங்கள், ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் எனப் பல்வேறு வகைப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வெளிமாவட்டங்களில் தொழில்புரியும் மலையகத்தைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்களிக்க வசதியாக பெப். 13, 14, 15 ஆம் திகதிகளில் தொழில் அமைச்சு மூலமாக விடுமுறை (15 ஆம் திகதி ஞாயிறு விடுமுறை) பெற்றுத்தர மலையக அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். அத்துடன் வாக்களிக்க விடுமுறை தர மறுப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கவேண்டும்.

மலையகத்தைச் சேர்ந்த வெளிமாவட்டத்தில் தொழில்புரிவோருக்கு வாக்களிக்க அனுமதி தர முதலாளிமார் முன்வரவில்லையானால் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் பெற்றுத்தந்த வாக்குரிமை கேலிக்கூத்தாகிவிடும்.

-கே.பி.பி.புஷ்பராஜா, சிலாபம்.

வாசகர் சாலை

அன்பின் முரசே உனக்கு எனது கனிவான வணக்கங்கள்!

உனது 800 ஆவது முரசைப் பார்க்கத் துடிக்கும் உன் தொடர் வாசகி நான். உனது படைப்புக்கள் அனைத்தும் சுவையானவை. அதிலும் நீ சுமந்துவரும் மதியூகி, அதிரடி, இன்னொருவர் பார்வை, தேன்கிண்ணம், பாப்பா பகுதி, செய்திப் பகுதி என்பனவற்றைப் பார்த்ததும் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றன. தெரியாத சொற்களைக் கூட இந்த ஆக்கங்கள் சுமந்து வருவதின் மூலம் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு களமாக அமைந்துள்ளது.

மக்கள் மனங்களில் நீங்காத இடத்தினை வாரா வாரம் பிடித்துச் செல்லும் உனது படைப்புக்கள் மென்மேலும் அதிகரிக்க எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-லோகேஸ்வரி, கதிர்காமம்.

தேன் மழை பொழியும் முரசே!

நீ சுமந்துவரும் தேன் கிண்ணம் பிரமாதம். அதிலும் கவிக்குயிலன், முகிலன் அன்ஸார் ஆகியோரின் கவிதைகளை வாசிக்கும்போது இளம் சமுதாயத்தினராகிய எமது உள்ளங்களில் காதலின் சுவாரஷ்யத்தை ஏற்படுத்துகின்றது. கவிதைகள் என்றால் இது தான் கவிதைகள் என வாசிக்கும்போதே நினைக்கத் தோன்றுகிறது. அதிலும் தேன்கிண்ணம் பகுதி அமைக்கப்படும் விதம், கவர்ச்சிகரமான படங்கள் ரசிக்கும்படியாக உள்ளது. முரசே, அரைப் பக்கமாக நீ சுமந்து வரும் தேன்கிண்ணத்தை முழுப் பக்கமாக மாற்றமாட்டாயா?..... **-எஸ்.எச்.ரம்லான் கொழும்பு-14**

வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முரசே!

உனது 800ஆவது படைப்பைப் பார்ப்பதற்கு எமது உள்ளங்கள் காத்துக் கிடக்கின்றன. நீ சுமந்துவரும் அனைத்துப் படைப்புக்களும் அற்புதத்திலும் அற்புதம். உனது 800 ஆவது முரசு மேலும் பல புதிய படைப்புக்களுடன் எம்மை வந்து சேருமென நம்புகின்றோம். உன் பணி மென்மேலும் வளர்ச்சி பெற எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

-எஸ்.ஷுபா, மொரட்டுவை.

அரசியலை அள்ளிவரும் முரசுக்கு எனது வணக்கங்கள்!

ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நீ என் கையில் கிடைத்தவுடன் முத லில் நான் பார்ப்பது உனது செய்திப் பகுதியைத்தான். பக்கச்சார்பற்ற முறையில் நீ சுமந்துவரும் செய்திப் பகுதி அனைவரும் விரும்பிப் படிக்கும் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

உனது பணி மென்மேலும் விருத்தியடைய எனது வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகட்டும்.

-செல்வி நிலா, கோண்டாவில்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: -011 --2360903
தொலை நகல் (Fax):-011 - 2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வன்னியில் தடுத்து வைத்திருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் வெளியேற அனுமதிக்கவும்

● தமிழ் மக்கள் சந்தித்த அவலங்கள் போதும், போதும்; இனியும் மக்களை வதைக்காதே

புலிகளை எதிர்த்து யாழ் நகரில் மாபெரும் மக்கள் பேரணி!

சுமார் 25 ஆயிரம் பேர் கலந்து கொண்டனரென்று வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கணிப்பு

(எஸ்.ராஜ்குமார்)

இலங்கையின் இரண்டரை தசாப்த காலத்துக்கும் மேற்பட்ட யுத்த வரலாற்றில் முதற் தடவையாகப் புலிகள் இயக்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் பேரணியொன்று நடத்தப்பட்டது. மனிதக் கேடயங்களாகப் புலிகள் தடுத்து வைத்திருக்கும் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை விடுவிக்கக்கோரி இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு வெகுஜன அமைப்புக்களை ஒன்றிணைத்து, தேச மக்கள் எழுச்சிப் பேரவை என்ற அமைப்பின் யாழ். மாவட்டக் கிளை இதனை ஒழுங்கு செய்திருந்தது. இந்தப் பேரணி பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காகக் கொழும்பிலிருந்து சுமார் இருபதுக்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வருகை தந்திருந்தனர். கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனரென்று வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். ஐந்து வலயங்களிலிருந்து புறப்பட்ட மக்கள் கூட்டம், யாழ். செயலக முன்றலில் சங்கமித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அனுப்பி வைப்பதற்கான மகஜரை யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் கையளித்தது. மக்கள் வெள்ளம் யாழ். செயலகத்துக்கு முன்னால் திரண்டிருக்க, தேச மக்கள் எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் உள்ளே சென்று மகஜரைக் கையளித்தனர். ஒலிபெருக்கி பூட்டிய முச்சக்கர வண்டிகள் மற்றும் வாகனங்களிலிருந்து எழுப்பட்ட கோஷங்களும் மக்கள் எழுப்பிய கோஷங்களும் விண்ணைப் பிளக்க, யாழ்.அரசாங்க அதிபரிடம் முதலாவது மகஜர் கையளிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்ட பேரணி, கோவில் வீதியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரைக் கையளித்தது. (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

நல்லூர் ஆலய முன்றலில் திரண்ட மக்கள் கூட்டம்

மக்கள் எழுச்சி பற்றிய செய்திகள் யாழ். பத்திரிகைகளில் இருட்டடிப்பு

''கடந்த காலங்களில் ஆயுத கலாசாரத்துக்கு அடிபணிந்து தங்கள் கடமையைச் செய்வதற்குப் பின்நின்ற பத்திரிகைகள் இன்றும் தொடர்ந்து மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்காது செயற்படுவது வேதனைக்குரியது'' என்று தேச மக்கள் எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டக் கிளை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வன்னி மக்களை மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைக்காமல் அவர்கள் சுதந்திரமாக வெளியேறுவதற்கு அனுமதிக்குமாறு கோரி மேற்படி பேரவை கடந்த முதலாம் திகதி மாபெரும் மக்கள் பேரணியொன்றினை நடத்தியது. யாழ்ப்பாண வரலாற்றிலேயே மிகவும் முக்கியம் வாய்ந்த இந்தச் செய்தியை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று தமிழ்த் தினசரிகளும் இருட்டடிப்புச் செய்திருந்தன. பேரவையின் அறிக்கை வருமாறு:-

வன்னி வாழ் மக்கள் படும் துன்பங்களைப் பொறுக்க முடியாது. அவர்களின் உறவுகளோடு மக்களை நேசிக்கின்ற பலரும் தவித்து நிற்கின்றார்கள். மக்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கப் பலராலும் முடியும். ஆனால் மக்களைத் தடுத்து வைத்திருக்கிற புலிகளை நிர்ப்பந்திக்க யாராலும் முடியவில்லை. இந்நிலையில் எமது மக்களை மீட்க நாம்தான் முன்வர வேண்டும் என்ற நிலையிலேயே பொதுமக்களின் பிரதிநிதிகளாக நாம் முன்வந்து பேரணியை ஏற்பாடு செய்தோம். குறைந்த கால அவகாசத்தில், போதியளவு

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

வன்னி மக்களை விடுவிக்கக்கோரி யாழ்.மக்களின் எழுச்சிக் குரல்

வன்னி மக்களை விடுவிக்கக் கோரி புலிகளுக்கு எதிரான தேச மக்கள் எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டக் கிளை ஒழுங்கு செய்திருந்த பேரணியில் ஒன்று திரளுமாறு மக்களுக்கு விடுத்த துண்டுப் பிரசுரம் வருமாறு:

யாழ். குடாநாட்டு மக்களே!

மண்ணையும், மக்களையும் மீட்போம் என்று வெற்று வீரம் பேசிய புலிகள் தம்மிடமிருந்த பலத்தைப் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்களின்' அரசியல் உரிமைகளுக்காக இதுவரை என்ன செய்தார்கள், எதைத்தான் சாதித்தார்கள், எங்களுக்கு பேரழிவுகளை மட்டுமே இவர்கள் உருவாக்கிவிட்டிருக்கிறார்கள், நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம், அமைதியையும், அரசியல் தீர்வையும் விரும்புகின்றோம். தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக யுத்தத்தைத் தொடங்கிய புலிகள், இன்று தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக வன்னி வாழ் உறவுகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து புலிகள் எமது உறவுகளைச் சுதந்திரமாக வெளியேறவிடாது தடுத்து வைத்திருக்கிறார்கள். இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வன்னியில் புலிகளின் பிடிக்குள் சிக்குண்டுத் தவிக்கும் எமது உறவுகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கு 48 மணி நேர கால அவகாசத்தைக் கொடுத்திருந்தார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி வருவோருக்கான பாதுகாப்பும், அமைதியும், சுதந்திரமும், உரிமையும் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர்

விடுதலைப் போராட்டமென்ற சுலோகத்தைக் கொண்டிருக்கும் புலிகள் இயக்கம் சொல்லொணாத் துயரங்களைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் விருப்புகளுக்கு எதிராக அவர்கள் யுத்தம் நடத்திவருகின்றனர்.

தமது யுத்த இயக்கத்துக்குச் சிறுவர்கள் உட்படத் தமிழ் இளைஞர்களை வலுக்கட்டாயமாகச் சேர்த்துக் கொள்வதை மட்டுமல்ல, அப்பாவி மக்களையும் அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். வன்னிக் காடுகளுக்குள் சிக்கியிருக்கும் எமது சக பிரஜைகளின் நடமாடும் சுதந்திரத்தையும் அவர்கள் மறுதலித்து வருகின்றனர்.

நீங்கள், வன்னியில் சிக்கியிருக்கும் மக்கள், பாதுகாப்பு வலயங்களுக்குள் வருவதற்கு 48 மணித்தியால அவகாசம் கொடுத்து வெளியிட்ட அறிவித்தல் வரவேற்புக்குரியது. புலிகள் இயக்கம் கூறுவதைப் போன்று, அது ஒரு விடுதலை இயக்கமென்றால், இந்த யுத்த நிறுத்த காலத்தில் இந்த மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குள் வருவதற்கு அனுமதித்திருக்க வேண்டும். இதற்குப் பதிலாகப் பாதுகாப்பான வலயங்களுக்குள் மக்களை வரவிடாமல் தடுப்பதன் மூலம், தமது உண்மையான குணாம்சத்தைப் புலிகள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.



எமது மக்களின் பெறுமதி மிக்க உயிர்களை இனிமேலும் புலிகள் ஆபத்தான நிலைக்குள் வைத்திருப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது. யாழ்ப்பாண மக்களாகிய நாம், வன்னிக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை மீட்பதற்காகப் புலிகளின் அராஜகத்துக்கெதிராக இன்று எழுந்துள்ளோம். எமது மக்கள் மீது கை வைக்காதே, தனி நபர்களின் உரிமைகளுக்கு மதிப்பளி, அவர்களைச் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதி என்று ஐக்கியப்பட்ட குரலில் நாம் புலிகள் இயக்கத்தைக் குறிப்பாகப் பிரபாகரனைக் கோருகிறோம். புலிகள் இயக்கம் அனைவருக்கும் துன்ப துயரங்களையே ஏற்படுத்தியுள்ளது. எமக்குச் சமாதானமே தேவை. கௌரவமான சமாதானம் எமக்குத் தேவை. நீங்கள் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி - மூனுக்கு மகஜர்

வன்னிக் காடுகளில் சிக்கியிருக்கும் மக்கள், பாதுகாப்பான வலயங்களுக்குள் வருவதற்கு இலங்கை அரசாங்கம் அறிவித்த 48 மணித்தியால கால அவகாசத்துக்குள் வரவிடாமல் தடுத்த புலிகளின் தொடர்ச்சியான அராஜகத்துக்கு எதிராக யாழ்ப்பாண மக்களாகிய நாம் இன்று எழுந்துள்ளோம். வன்னிப் பிரதேசத்தில் இடம்பெறும் யுத்தத்துக்குள் சிக்கியுள்ள மக்களின் நலன்கள் குறித்து நீங்கள் தொடர்ச்சியாகக் காட்டிய அக்கறையையும் பாதுகாப்பாக மக்கள் வெளியேறுவதை சாத்தியமாக்கும்படி நீங்கள் விடுத்த வேண்டுகோளையும் நாம் நன்கு அறிவோம். எனினும் தமது யுத்த முயற்சியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காகப் புலிகள் இயக்கம் அப்பாவி மக்களைத் தொடர்ந்தும் மனிதக் கேடயமாகத் தடுத்து வைத்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு...

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோக் பிரசாத் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட மகஜரின் பூரண வாசகம் :-

யாழ்ப்பாண மக்களாகிய நாம், நீங்கள் அண்மையில் செய்து கொண்ட இருதய சத்திர சிகிச்சையிலிருந்து விரைவாகச் சுகம் பெற வேண்டுமென்று விரும்புகின்றோம்.

வன்னிக் காடுகளுக்குள் சிக்கியிருக்கும் மக்கள், பாதுகாப்பான வலயங்களுக்குள் வருவதற்கு இலங்கை அரசாங்கம் அறிவித்த 48 மணி நேர கால அவகாசத்துக்குள் வரவிடாமல் தடுத்த புலிகளின் தொடர்ச்சியான அராஜகத்துக்கு எதிராக நாம் இன்று எழுந்துள்ளோம். விடுதலைப் போராட்டமென்ற சுலோகத்தைக் கொண்டிருக்கும் புலிகள் இயக்கம், சொல்லொணாத் துரயங்களைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் விருப்புகளுக்கு எதிராக அவர்கள் யுத்தம் நடத்தி வருகின்றனர். தமது யுத்த இயந்திரத்துக்குச் சிறுவர்கள் உட்படத் தமிழ் இளைஞர்களை வலுக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்வதை மட்டுமல்ல, அப்பாவி மக்களையும் அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். வன்னிக் காடுகளுக்குள் சிக்கியிருக்கும் எமது சக பிரஜைகளின் நடமாடும் சுதந்திரத்தையும் அவர்கள் மறுத்து வருகின்றனர்.



அங்கு சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பு வலயங்களுக்குள் வருவதற்கு எங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த 48 மணித்தியாலக் கால அவகாச அறிவிப்பு வரவேற்கப்படக் கூடிய நடவடிக்கையாகும். உங்கள் அரசாங்கமும் இதனைப் பாராட்டியுள்ளது. புலிகள் இயக்கம் கூறுவதைப் போன்று, அது ஒரு விடுதலை இயக்கமென்றால், இந்த யுத்த நிறுத்த காலத்தில் இந்த மக்கள் பாதுகாப்பான பகுதிக்குள் வருவதற்கு அனுமதிக்க வேண்டும். இதற்குப் பதிலாகப் பாதுகாப்பான வலயங்களுக்குள் மக்களை வர விடாமல் தடுப்பதன் மூலம், தமது

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

புலிகளுக்காகக் கவலைப்பட மாட்டார் சம்பந்தன் எம்.பி.

''புலிகள் இயக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. அதன் வெற்றியைப் பற்றியோ அல்லது தோல்வியைப் பற்றியோ நாம் கவலைப்படப் போவதில்லை. அந்த இயக்கத்தோடு எமக்கு எந்தவிதத் தொடர்புமில்லை'' என்று தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். கடந்த 25 ஆம் திகதி வெளிவந்த 'லங்கா தீப' ஞாயிறு வாரப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் புலிகள் இயக்கத்துக்காக வக்காலத்து வாங்கி வந்தவர் சம்பந்தன். புலிகளினால் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பினருக்காகப் பெருந்தொகையில் கள்ள வாக்குகள் போடப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சர்வதேச அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):–011 2-360920
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk
murasu@live.com

முரசம்

முரசின் பயணத்திற்கு வாசகர்களே வழிகாட்டிகள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

எமது வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் கோடானு கோடி நன்றிகள் உரித்தாகட்டும். தினமுரசு தனது எண்ணூறாவது இதழ் விரித்து முகம் உயர்த்தி நிற்கிறது. இந்த மாபெரும் வெற்றிப் பயணத்தில் முரசின் அத்திவாரமாக இருந்து கைப்பிடித்து வழிகாட்டியவர்கள் உருக்குக்கு நிகரான வாசகர்களேயன்றி வேறொருவருமில்லை.

முரசின் நீண்ட பயணத்தில் எதிர்கொண்ட இடையூறுகள், எதிர்ப்புகள், உயிர்ப் பலிகள், அச்சுறுத்தல்கள் என்பன கொஞ்சமல்ல. அதையும் தாண்டி முரசு தமிழ் மக்களின் ஜனரஞ்சக அடையாளமாக எழுந்து நிற்கின்றது.

ஓரிரு ஊடகங்கள் மட்டுமே இருந்த காலத்தில் உதயமாகி, இன்று குறுந் தகவல்களில் ஒரு நொடிப் பொழுதில் செய்திகளை அறிந்துகொள்ளக்கூடியளவு தகவல் தொழில்நுட்பம் பெரு வளர்ச்சி கண்டு வரும் நிலையிலும், முரசின் மீதான நம்பிக்கையோடு பின் தொடரும் வாசகர்களை முரசு ஒருபோதும் ஏமாற்றியதில்லை; ஏமாற்றப் போவதுமில்லை.

புலிப் பயங்கரவாதம் முரசை முடக்கிப் போட கொலை செய்து பார்த்தது, எரித்துப் பார்த்தது, குண்டுவைத்தது, மிரட்டியது, விற்பனையைத் தடுத்தது, தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளுக்குள் தடை விதித்தது.

இருந்தபோதும் முரசின் பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. முரசு, வாசகர்களின் கரம் சென்றடைவதில் தாமதங்களும், திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. இவற்றை எதிர்கொள்ள விநியோக மார்க்கத்தில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனினும் சில இடங்களில் விநியோகம் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

முரசு மீது சேறு பூசும் தீய எண்ணத்தோடு சேறு பூசும் தீய நோக்கமானது விமர்சனமெனும் பெயரில் முன்வைக்கப்பட்டிருந்தது. அதேவேளை எமது அன்பு வாசகர்கள் சிலரும் சில குறைபாடுகளை முன்வைத்தனர்.

கருத்துக்களைக் கூறவும், கேட்கவும், அறிந்து கொள்ளவும் தடுத்த புலிகள், ஊடகங்களையும், மௌனிகளாக்கினர். அல்லது தமக்குத் தாளம் போடப் பணித்தனர். அதற்கு தலையசைக்காத முரசு, வியாபார நோக்கத்தையும் தாண்டிப் பயணிக்கும் உறுதியை வரித்துக்கொண்டதை வாசகர்கள் அறிவார்கள். எமது மக்களின் உரிமைகளுக்கு எதிராக நீட்டப்பட்டிருந்த பயங்கரவாதத்தின் சுடுகுழல்கள் இல்லாது போகின்ற நாளைய பொழுதிலேயே கருத்துச் சுதந்திரத்துக்காக முரசு கடந்துவந்த இடர்களுக்கு அர்த்தம் புரியும்.

உறுதிமிக்க வாசகர்களின் அன்பும், ஆசீர்வாதமும் ஆலம் விழுதாய் நாளுக்கு நாள் வியாபித்துக்கொண்டிருப்பதாலேயே முரசால் கரடு முரடான பாதையிலும் இத்தகைய நீண்ட பயணத்தையும் தொடர முடிந்தது. எனவே எதிர்காலத்திலும் எமது வாசகர்களின் ஒத்துழைப்பும், ஆக்கபூர்வமான பங்களிப்பும் அவசியமாகும்.

தினமுரசின் வெற்றிப் பயணத்தின் உரிமைக்குப் பங்காளிகளான வாசகர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறிக் கொள்கிறோம். உங்களுக்கான கைமாறு முரசை மேலும் சூடு - சுவை - சுவாரஷ்யத்துடன் உங்களின் கரங்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான். அந்த எதிர்பார்ப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு நாம் உழைப்போம். மகிழ்ச்சி பொங்கி வழியும் வெற்றி நாளில், தினமுரசை தினமும் முரசாகக் கொண்டு வாருங்கள் என்று அன்பு வேண்டுகோள் விடுத்து, ஆயிரக்கணக்கான கடிதங்களை அனுப்பியிருக்கும் அன்புக்குரியவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்துக்கொண்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சி செய்தியையும் தெரியப்படுத்திக் கொள்வதில் தினமுரசு நிர்வாகத்தினர் பெருமிதமடைகின்றோம்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

வேட்டுக்களால் கலங்குகிறது முல்லை; முகர்ஜியின் விஜயம் வெற்று வேட்டு?

நரன்

புலிகள் இயக்கம் தமிழீழ இராஜ்யம் அமைப்பதற்காகக் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடத்திவந்த போராட்டம் முல்லைத்தீவுக் காடுகளுக்குள் முடக்கப்பட்டுவிட்டது. வெறும் 300 இற்கும் குறைவான சதுர கிலோமீற்றர்கள் காட்டுப் பகுதிக்குள் ஆயிரம் அல்லது இரண்டாயிரத்துக்கும் குறைவான போராளிகளுடன் புலிகள் இறுதிப் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் மரணப் பிடிவாதமாகப் போராட்டம் நடத்தியே தீருவோம் என்று புலிகள் இயக்கத்தின் மிச்ச சொச்சங்கள் இன்னமும் நின்று பிடிக்கின்றன. சும்மாவல்ல, சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்துக்கொண்டு புலிகள் இறுதி யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். முல்லைத்தீவின்



முல்லைத்தீவில் ஷெல் வீச்சினால் காயமுற்ற ஒருவர்...

மேற்குப் பகுதியில் அரசாங்கம் பாதுகாப்பு வலயமொன்றினை உருவாக்கி, யுத்த சூனியப் பகுதிக்குள் மக்கள் வருவதற்கு 48 மணி நேர கால அவகாசமும் வழங்கியிருந்தது. ஆனாலும் மக்கள் வெளியேறுவதற்குப் புலிகள் அனுமதிக்கவில்லை. ''எங்கள் மக்களை எதிரிகளிடம் கையளிக்க மாட்டோம்'' என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வீரவசனம் பேசிக்கொண்டிருக்கிறார். அதாவது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தமிழ் மக்கள் வருவதற்கு அனுமதிக்க மாட்டோமென்ற புலிகளின் நிலைப்பாட்டினை அவர் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

போதாக்குறைக்குத் தஞ்சம் தேடிக் குவிந்திருக்கும் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் இருந்துகொண்டு படையினர் மீது புலிகள் ஆட்டிலறித் தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். ''மக்களுக்குள் பதுங்கியிருந்துகொண்டு தாக்கினால், படையினர் பதில் தாக்குதல்கள் நடத்துவார்கள். அப்போது மக்கள் பாதிக்கப்பட வேண்டும்'' என்பதே புலிகளின் நோக்கு. மக்கள் பாதிக்கப்பட்டால், அதனை உலக நாடுகளில் பிரசாரப்படுத்திச் சர்வதேசத்தின் ஆதரவைத் தம் பக்கம் திரட்டலாம் என்பது புலிகளின் கணக்கு. ''சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கின்றது'' என்ற பிரசாரத்தை உலகமயப்படுத்தி, உடனடி யுத்த நிறுத்தத்துக்குச் சர்வதேச அழுத்தத்தைத் தேடுவதே புலிகளின் உத்தியாகும்.

யுத்த சூனியப் பகுதிகளுக்குள்ளும் புலிகள் யுத்தத்தை இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இதனால்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

பெருந்தொகையான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதே உண்மை. சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று வன்னித் தகவல்கள் கூறுகின்றன. சுமார் 400 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் புலிச் சார்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவை வெறும் பிரசார உத்திகள் என்று அரச சார்பு அதிகாரிகள் மறுப்புத் தெரிவிக்கின்றனர். என்னதான் இருந்தாலும், வேட்டுக்களால் வன்னி அதிர்கிறது என்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது. அவலங்களால் வன்னி அதிர்ந்துகொண்டிருக்கிறது. வன்னியின் அவலங்கள் உலகமெங்கும் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. முல்லைத்தீவு, வவுனியா ஆஸ்பத்திரிகள் காயப்பட்டவர்களால் நிறைந்துள்ளன.

வன்னி யுத்த வலயப் பகுதிகளுக்குள் சிக்கியுள்ள அப்பாவி மக்களின் அவலங்களை நீக்குவதற்கு இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. புலிகளும் அவர்களது சார்பு சக்திகளும் கோருவது போன்று யுத்தத்தை நிறுத்துவது ஒன்று. அல்லது அரசாங்கமும் அரசாங்க சார்பு சக்திகளும் கூறுவதுபோன்று புலிகளின் யுத்த முயற்சிகளை முற்றுமுழுதாக முறியடிப்பது மற்றொன்று. இரண்டுமே எதிரெதிர் நிலைப்பாடுகள். ஏதாவது ஒருதரப்பு விட்டுக் கொடுத்தாலொழிய எந்தவொரு இணக்கப்பாட்டினையும் எட்ட முடியாது. இன்னமும் நாட்டைப் பிரிப்பதுதான் புலிகளின் கோஷமென்றால், அதற்காகத் தான் புலிகள் யுத்தம் நடத்துகிறார்கள் என்றால் அரசாங்கமோ அல்லது சர்வதேச சக்திகளோ அதற்கு இணக்கம் தெரிவிக்கப்போவதில்லை. உலகெங்கும் வாழும் எட்டுக் கோடித் தமிழ் மக்களுக்காக வன்னிக் காடுகளுக்குள் தமிழீழம் அமைக்கப் போகிறோமென்று கூறி இறுதி யுத்தத்தைப் பிரபாகரனே தொடுத்ததால், அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தாது என்பது வெள்ளிடைமலை. தோற்கடிக்கப்படும்பொழுது யுத்த நிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் கோருவது புலிகளின் பாரம்பரிய நடைமுறை. பின்னர் தமக்குச் சாதகமான நிலை ஏற்படும்பொழுது தாக்குதல்களை ஆரம்பிப்பது புலிகளின் வழக்கம் என்பதால் இறுதித் தாக்குதலை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது. எனவேதான் அரசின் நிலைப்பாட்டுக்குச் சாதகமான சமிக்ஞைகள் சர்வதேச ரீதியிலும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் வளர்ச்சி பெற்று வருகின்றன.

எந்தத் தமிழ் மக்களுக்காகப் போராடுகின்றோமென்று புலிகள் கதையளக்கிறார்களோ அதே தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்துக்கொண்டு நடத்தும் யுத்தம், இன்று அவர்களுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. ஈழத் தமிழர் சார்பாகத் தமிழகத்தில் எழுந்த பேரலை இன்று திசைமாறிச் செல்கிறது. இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி, யுத்தத்தை நிறுத்து என்று இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு மூன்று மாதங்களுக்கு முன்னர் கேட்டவர்கள், ''இலங்கைப் பிரச்சினையில் இந்தியா அளவோடுதான் தலையிட முடியும்'' என்று இன்று சொல்லும் அளவுக்கு நிலைமை மாற்றம் பெற்றிருக்கிறது. ''இந்தியாவின் இறைமை இந்திய எல்லைகளைத் தாண்டிச் செல்ல முடியாது'' என்று பிரணாப் முகர்ஜி எப்போதோ கூறிவிட்டார்.

''இலங்கை அரசாங்கம் பெற்றுவரும் இராணுவ வெற்றிகள், வடபகுதி உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும்

சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கான அரசியல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்துள்ளன'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் முகர்ஜி கொழும்பில் வைத்துக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்.

இலங்கைக்கு வந்து சென்ற இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், ஜப்பானின் சமாதானத் தூதுவர் யசூசி அகாஸி, இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அனைவருமே புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டினை எடுக்கவில்லை. யுத்தத்தை நிறுத்து என்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்கவில்லை. இந்தியா, அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுமே புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டினை எடுத்துள்ளன. சர்வதேச அழுத்தம் புலிகளுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கெட்டித்தனமாக யுத்தத்தையும், சர்வதேச அபிப்பிராயத்தையும் கையாண்டுள்ளார் என்றே கூறவேண்டும். இதுகாலவரை நடைபெற்ற யுத்தங்கள் புலிகளைச் சமாதான மேசைக்குக் கூட்டி வரும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டன. புலிகள் என்றுமே சமாதான மேசைக்கு வரப்போவதில்லை என்ற திடமான நம்பிக்கையோடு புலிகளை அழித்தொழிக்கும் உத்தியோடுதான் இந்த இறுதி யுத்தத்தை இலங்கை அரசு நடத்திவருகின்றது. தமிழகத்தில் புலிச்சார்பு சக்திகள் கையாண்ட தந்திரோபாயங்களுக்குள் இலங்கை அரசு சிக்கவில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று எழுந்த கூக்குரல்கள் எல்லாம் இன்று புலிச்சார்பு வட்டங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழக முதல்வர் கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோரை வன்னிக்கு வந்து உண்மை நிலையைப் பாருங்கள் என்று ஜனாதிபதி விடுத்த அழைப்பு, புலிகளின் அடாவடித்தனங்களைத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்குச் சார்பாக எழுந்த அலை, இன்று இரண்டுபட்டு நிற்கின்றது. புலிகள் இயக்கத்துக்காகப் போராடும் ஒரு கூட்டம். புலிகளுக்காக அல்ல, ஈழத் தமிழர்களுக்கே எமது ஆதரவு என்று கூறும் மற்றொரு பிரிவு. இரண்டாவது தரப்பினரின் கைகளே இன்று தமிழகத்தில் உயர்ந்துள்ளன. இதன் தாக்கங்கள் இன்று இந்திய மத்திய அரசு மட்டத்திலும் தெரிகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

மனந் திறந்து பேசும் மனச்சாட்சியின் சிறைக் கைதி!

இளவயதில் ஹிட்லரின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் மார்ட்டின் நீமொல்லர் என்ற ஜெர்மனியப் பாதிரியார். ஹிட்லரின் நாஸி இனவெறி ஜெர்மனியில் காலூன்றத் தொடங்கியதும் யூதர்களை மட்டுமல்ல, மாற்றுக் கருத்துக்கொண்ட அனைவரையும் ஹிட்லர் அழிக்கத் தொடங்கினான். பாதிரியார் நீமொல்லர் வெளிப்படையாகவே ஹிட்லரைக் கண்டிக்கத் தொடங்கினார். விளைவு; ஜெர்மனியின் சாச்சென்கௌசன் மற்றும் டச்சௌ தடுப்பு முகாம்களில் பாதிரியார் சிறை வைக்கப்பட்டார். 1937 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த இந்தப் பாதிரியார், கொல்லப்படக்கூடிய சூழ்நிலையையும் எதிர்நோக்கினார். சிறை வைக்கப்பட்டிருந்தாலும் மனச்சாட்சியின் சிறைக்கைதியாகத் திகழ்ந்த இந்த பாதிரியார் எழுதிய கவிதையைப் பிரபாகரனின் கொடூர நுகத்தடியில் சிக்கி உயிர் துறந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் காணிக்கையாகச் சமர்ப்பிக்க முடியும்.

அந்தக் கவிதை இதோ:

முதலில் அவர்கள் யூதர்களைத் தேடி வந்தனர். நான் அவர்களுக்கு எதிராக எதுவுமே பேசவில்லை. ஏனென்றால் நான் யூதனல்லன். பிறகு அவர்கள் கம்யூனிஸ்டுக்களைத் தேடி வந்தனர். நான் எதுவுமே பேசவில்லை. ஏன் என்றால் நான் கம்யூனிஸ்ட் அல்லன். பின்னர் தொழிற்சங்கவாதிகளைத் தேடி வந்தனர். நான் எதுவுமே பேசவில்லை. ஏனென்றால் நான் தொழிற்சங்கவாதியல்லன். பிறகு அவர்கள் என்னைத் தேடி வந்தனர். அப்போது எனக்காகப் பேசுவதற்கு எவருமே இருக்கவில்லை.

–மார்ட்டின் நீமொல்லர் பாதிரியார்.

ஊரிலிருந்து....

ஐக்கிய நாட்டு பொதுச் செயலாளர், ஐரோப்பிய ஒன்றியம், இந்திய - தமிழக அரசுகள், யாழ். ஆயர் என இன்னோரன்னர் விடுத்த கோரிக்கைகளும் புலிகளைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகப் போய்விட்டது. தாம் உயிர்வாழும் வரை தமது பிடியில் உள்ள மக்களை மனிதக் கேடயங்களாக வைத்திருக்க புலிகள் முடிவெடுத்து விட்டது உறுதியாகியுள்ளது. இந்த வேளையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன?
பொறுத்தது போதும் பொங்கியெழ ஊர் மக்களில் இருந்து, புலிப்பிடிக்குள் உள்ள மக்கள் வரை முன்வர வேண்டும். மிகுதி ஆண்டவன் விட்ட வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் பிரபாக(ர)ரனின் அடுத்த அதிரடி முடிவு!

61ஆவது இலங்கையின் சுதந்திர தினத்திற்கான தயாரிப்பு வேலைகள் மிக வும் ஆர்ப்பாட்டமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தில் தோல்வி கண்டிருக்கும் புலிகள் சுதந்திர தின வைபவ வேளையில் நாசகாரச் செயல்களில் ஈடுபடலாம் என்கின்ற பாதுகாப்புக் கவலை கள் அதிகரித்துள்ளதால் தலைநகரின் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. கடந்த சுதந்திர தின வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளின் பயங்கரவாதச் செயற்பாட்டுக்குக் கடுமையான நடவடிக்கையின் மூலம் பதிலளிக்கத் தயங்கப்போவதில்லை என்ற அதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார். தற்போதைய நிலையில் புலிகள் விடயத்தில் ஜனாதிபதி தீர்க்கமான முடிவொன்றை எடுத்துள்ளார். ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு எந்தளவில் துரித கதியில் தீர்வொன்றைக் காணப் போகிறார் என்பதே எதிர்பார்ப்பாகவுள்ளது. ஆகவே இலங்கையின் 60ஆவது சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதி ஆற்றவிருக்கும் உரை கடந்த காலங்களை விடவும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது.

வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலிகளுக்கெதிரான யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாக இலங்கை இராணுவத் தரப்பு கூறுகின்றது. அதாவது 200 சதுர கிலோ மீற்றருக்குள் புலிகளை முடக்கியிருப்பதே இராணுவத்தின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்திருக்கின்றது. இந்த வேளையில் புலிப் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வெல்லப்படவேண்டியதென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லையென்று தேசிய மற்றும் சர்வ தேசியத்தினரின் ஒரே முடிவாக இருக்கின்றது. இருந்த போதிலும், தற்போதைய இறுதி யுத்தத்தில் புலிகளால் பலாத்காரமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமற்ற நிலையே பெரும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. புதுக்குடியிருப்பை முழுமையாகக் கைப்பற்றி புலிகளுக்கு அழிவைக் கொடுக்கும் இராணுவ நடவடிக்கைகள் சுருங்கிப் போகின்ற அதேவேளை, குறுகிய நிலப்பரப்பிற்குள் பொதுமக்களும் அகப்பட்டுள்ளதால் அந்தப் பிரதேசத்தில் வீழ்ந்து வெடிக்கப்போகும் ஒவ்வொரு வெடிகுண்டும் ஏதோ ஒரு வகையில் பொதுமக்களைத் தாக்கக்கூடும் என்ற அபாயம் நிலவுகிறது. வன்னியைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைகள் வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட போது வவுனியா மக்கள், மன்னார் மக்கள், கிளிநொச்சி மக்கள், பின்னர் முல்லைத்தீவு மக்கள் ஆகிய மாவட்ட மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லவிடாது புலிகள் தடுத்தனர். தாம் இறுதி யுத்தம் நடாத்தி மக்களைக் காப்போமென்றும், அத்தகையதொரு யுத்தம் இலங்கை இராணுவத்திற்கு சாவு காலமாக அமையுமென்றும் புலிகள் கூறி அந்த மக்களைத் தாம் ஓடுகின்ற இடங்களுக்கெல்லாம் பலாத்காரமாக இழுத்துச் சென்றனர். இப்போது புலிகளின் ஓட்டம் முடிவுகட்டத்தை எட்டியிருக்கிறது. இனி அவர்களுக்கு எங்கே ஓடுவதென்பது தெரியாத நிலையில் இழுத்துச் சென்ற மக்களைத் தமக்குக் கவசமாக நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் பெரும் மனிதப் பேரவலம் இடம்பெறக்கூடிய அபாயம் நிலவுகிறது. மக்களைத் தாம் தடுத்து வைத்திருக்கவில்லையென்றும், அவர்கள் விரும்பினால் வெளியேறலாமென்றும் புலிகள் கூறி-னாலும், மக்களுக்கான ஒரு அறிவீப்பாக புலிகள் அதனைக் கூறவில்லை. ஐக்கிய நாடுகள் சபை உட்பட மனிதாபிமான அர்வலர்களின் கண்டனங்களைச் சமாளிப்பதற்காகவே மேற்குறிப்பிட்ட கருத்தைக் கூறுகின்றனர். இந்த மக்களின் பெயரால் தமது முடிவு தடுக்கப்படுமென்கின்ற இறுதிக் கட்ட நம்பிக்கையில் புலிகள் இருக்கின்றனர். அதற்காக

எத்தனை பொதுமக்கள் இறக்கவேண்டியேற்பட்டாலும் அதற்காகக் கவலைப்படும் நிலையில் புலிகள் இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை மனிதப் பேரவலம் தடுக்கப்பட வேண்டும் என எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்குச் செவி சாய்க்கவே வேண்டும்.

படையினரால் கைப்பற்றப்பட்ட புலிகளின் ஒருதொகுதி ஆயுதங்களையும், நீர்மூழ்கிக் கப்பலொன்றையும் படத்தில் காணலாம்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பெப்ரவரி 1,2 ஆம் திகதிகளை வன்னியில் அகப்பட்டிருக்கும் மக்களை வெளி-யேற புலிகள் விடவேண்டும் என்கின்ற கால அவ-காசமாக அறிவித்திருந்தார். எனினும் புலிகள் அரசின் அறிவித்தலை நிராகரித்துவிட்டனர். தாம் எதிர்கொள்ளும் அபாயத்தையும், நாட்டு நடப்பையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பற்ற மக்களாக வன்னியில் வாழும் மக்கள் இருக்கின்றனர். ஜனவரி மாதம் வரையான காலப் பகுதியில் மட்டும் சுமார் 457 பொதுமக்கள் பலியாகியிருக்கலாமென்றும், 1,700க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கலாமென்றும் அறியமுடிகின்றது. இறுதிக் கிரியைகளைச் சடங்கு சம்பிரதாயங்களோடு செய்து முடிப்பதில் அக்கறை கொண்ட தமிழ் மக்கள், அநாதைப் பிணங்களாக அழுகிப்போகும் நிலையேற்பட்டுள்ளதாக வன்னியிலிருந்து கிடைக்கின்ற தகவல்கள் அதிர்ச்சி தருகின்றன. இவை எவையும் புலிகளுக்கு அக்கறைக்குரிய விடயங்களாக இருக்கவில்லை என்பதை உணரமுடிகிறது. அழிவு யுத்தத்தை நடத்தும் புலிகளுக்கு ஒவ்வொரு நாளும் மரணம் பழகிப்போனதொன்றாக இருக்கலாம். அத்தகைய துக்கச் சுமையை அப்பாவி மக்கள் மீது பலாத்காரமாகச் சுமத்துகின்ற புலிகளின் தந்திரோபாயம் எத்தகைய போர் யுத்திகளுக்குள் உள்ளடங்கியது என்பது தெரியவில்லை.

விஸ்வமடுப் பகுதியிலும், புதுக்குடியிருப்புப் பகுதியிலும் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள், சீருடைகள், தளபாடங்கள் என்பவற்றை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள அதேவேளை, பிரபா-கரன் மறைந்திருந்திருக்கலாம் என நம்பப்படுகின்ற நிலக்கீழ் வீடுகளையும் படையினர் கைப்பற்றியுள்ளனர். கடந்த காலத்தின் பொருட்களை இராணுவத்தினரிடம் விட்டுவிட்டுக் கூடாதென எடுத்துச் சென்ற புலிகள், இப்போது மட்டும் விட்டுவிட்டுச் சென்றிருப்பது இனியும் அவர்கள் எடுத்துச் செல்ல இடமில்லை என்பதைக் காட்டுகின்றது. எனவே இத்தருணத்தில் புலிகள் அதிரடியான முடிவொன்றுக்கு வரவேண்டிய இறுதிக் கட்டத்தில் இருக்கின்றனர். சதாம் ஹூ சைனைப் போல் குழிகளுக்குள் இருந்து முடியைப் பிடித்து இழுக்கும் வரை இருந்துவிடுவதா, அல்லது படையி-னரோடு மோதி மடிந்துவிடுவதா என்பதைப் புலிகள் தீர்மானிக்க வேண்டும். போராடுவது என தீர்மானித்தால் கட்டாயமான திடீர் ஊடறுப்புத் தாக்குதலொன்றை நடாத்தி படையினரை நிலைகுலையச் செய்யவேண்டும். சுற்றிவளைத்து நிற்கும் படையினரை ஊடறுத்து புதிய வழியொன்றைத் திறந்தேயாக வேண்டும். விமானம் மூலம் தப்பிச் செல்லவோ, கடல் மார்க்கமாகச் செல்லவோ இனி வாய்ப்பேதுமில்லை. இந்த நிலையில் பிரபாகரனை இலங்கையிலிருந்து காப்பாற்றிவிடுவதற்கு இலங்கைக்கு வெளியே இருக்கும் புலி ஆதரவுச் சக்திகளும், பிராந்திய எதிர்ச் சக்திகளும் கடுமையாக முயற்சிக்கின்றன.

பிரபாகரனைப் பொறுத்தவரை பொதுமக்களின் குறிப்பிட்ட தொகையினர் தங்களது பிடியில் இருக்கின்ற வரை அதைச் சிந்திப்பதற்கான ஒரு கால அவ-காசமாகவே கருதுவதாகத் தெரியவருகின்றது. கடந்த வாரத்தில் மர்ம விமானம் பறந்ததாகக் கூறப்படுகின்ற சம்பவத்தையும், வன்னியிலிருந்து பிரபாகரன் உள்ளிட்ட முக்கிய நபர்கள் நாட்டின் வேறொரு பகுதிக்கு செல்வதற்கான முயற்சியாகப் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. சுற்றி நிலைகொண்டிருக்கும் படை யினரின் தாக்குதல்கள் புலிகள் தற்போது பதுங்கியிருக்கும் மையப் பகுதியை இலக்கு வைக்கக்கூடிய நிலை தோன்றியிருப்பதால் இதுநாள் வரை பிரபாகரன் தயாரிப்புச் செய்திருந்த தனது இறுதித் தாக்குதல் அணியைக் களத்தில் இறக்குவதற்கான நேரம் வந்திருக்கின்றது. கைவிடவேண்டிய அல்லது தம்மாலேயே அழிக்கப்படவேண்டிய அத்தனை வளங்களையும் பிரயோகிப்பதென பிரபாகரன் திட்டமிட்டுள்ளார். இவ்வாறானதொரு முயற்சியாகவே கடந்த 31 ஆம் திகதி 58ஆவது படைப் பிரிவினருக்கு எதிராக அதிரடி ஊடுருவல் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டனர். சுமார் 45 பேரடங்கிய புலிகளின் அந்த அணியினர் படையினருக்கு எதிராகக் கடும் தாக்குதலைத் தொடுத்தபோதும், படையினரால் அது முறியடிக்கப்பட்டது. ஏனெனில் அத்தகையதொரு தாக்குதல் படையினரால் எவ்வேளையிலும் எதிர்பார்க்கப்படக் கூடியதாகையால் அவர்களும் தயா ராகவே இருக்கின்றனர்.

அலசுவது - மதியுகி -

படையினர் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அதேவேளை, முன்னகர்வுத் தாக்குதல்களையும் நடாத்திவருவதால் புலிகளின் தளபதிகள் சண்டையை வழிநடத்திய காலம் முடிவுக்கு வந்துவிட்டது. களத்தில் நிற்கும் புலிகளுடன் தாமே தொடர்புகொண்டு கட்டளைகளை வழங்கவேண்டிய நிலை பிரபாகரனுக்கு ஏற்பட்டுள்ளது. அது சண்டையிடும் புலிகளுக்குப் புதிய தெம்பையும், தனது பாதுகாப்பை உறுதி செய்ய பிரபாகரன் தேவையையும் உறுதிப்படுத்தும். இந்த வேளையிலும் தந்திரோபாயங்களின் பெயரால் களமாடும் புலிகளோடு தொடர்புபடாமல் பிரபாகரன் பதுங்கியிருப்பது எதிர்மாறான விளைவையே புலிகளுக்குக் கொடுக்கும் என நம்பலாம்.

வாசகர்களுக்கு....

முன்பக்கத்தில்
''சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் பிரபாகாரனின் அடுத்த அதிரடி முடிவு!'
என்ற தலைப்பில் பிரபாகரன் என்பது பிரபாகாரன் என இன்னொரு அர்த்தத்தில் பிரசுரமாகியிருக்கின்ற தவறைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதிரடி அய்யாத்துரை

இலங்கையில யுத்த நிறுத்தம் வேணுமெண்டு இந்தியாவில தீக்குளிப்பு நடக்குதெண்டால் இலங்கைத் தமிழர் மேலை கடந்த காலத்திலையில்லாத அளவுக்கு கரிசனை வந்துட்டுதோ எண்டு ஆரும் பிழையாய் நினைச்சுப் போடாதேயுங்கோ. சிறுத்தைகள் திருமாவளவன் உண்ணாவிரதம் இருந்ததே கட்சி ஆதரவு மாணவர்களைக் களத்தில இறக்கத்தான் எண்டது பிறகு தானுங்கோ தெரிஞ்சிருக்குது. திருமா போட்டது நாடகம். மாணவர்கள் அகப்பட்டது நம்பிக்கைத் துரோகமுங்கோ. தென்னிந்தியாவில அவையின்ர பொலிரிக்ஸுக்கு ஆதரவு தெரிவிச்சு தீக்குளிக்கிற கேசுகளே காசுக்குத்தான் எண்டு ஊருக்கே தெரி யும். உதில திருமாவின்ர உசுப்பிற்கு உருவேறி தீக்குளிச்சதுகளின்ர கதைகளுக்குப் பின்னாலை என்ன விளையாடியிருக்குதெண்டு ஆருக்குங்கோ தெரியும். கூட இருக்கிறவனை எதிர்த்தரப்பிற்குப் பகையாக்கி ஏதோ ஒருவகையில அவனைப் பலியெடுத்துப் பிறகு அவனின்ர பொடியைத் தூக்கிக்கொண்டு ஊர்வலம் போறதும் உரக்கக் கத்துறதும் பயங்கரவாதத் தூண்டுதலில இலங்கையில நடந்த காட்சிகள். அதே விளையாட்டைத்தான் பயங்கரவாதத்திற்கு ஆதரவானவையும் இப்ப தென்னிந்தியாவில அரங்கேற்றினமுங்கோ. ரெண்டெழுத்தாரோடை எந்த வகையில தொடர் பானாலும் அது செத்த வீட்டுக் கதையோட தான் முடியுமெண்டது தென்னிந்தியாவில இப்ப தானுங்கோ தெரியுது. ஆரு உசுப் பேத்தியிருந்தாலும் காசு கண்டம் விட்டு கண்டம் பாஞ்சிருந்தாலும் செத்துப்போனதென்னவோ ஒரு ஏழைக் குடும்பத்தின் பிள்ளை எண்டது மட்டும் உண்மையுங்கோ.....

ஊடக நண்பரொருவர் ஊர்ல இருக்கிற சொத்துக்களை விக்கிற முயற்சியில ரொம்பத் தீவிரமாயிருந்தாருங்கோ. ஊர்ல எண்டு நான் சொன்னது தலைநகர்ல தானுங்கோ. அடுக்கு மாடி வீடு ஒன்றை அந்தக் காலத்தில வாங்குறதுக்கு பொலிரிக்ஸ் ஐயாமா ரைப் புகழ்ந்து செய்தியெழுதித் தனக்கும் புகழ் சேர்த்த அந்த ஊடக நண்பரின்ர வாழ்க்கை வண்டி நல்லாத்தானே ஓடிச்சிது. இப்ப ஏன் வீடு விக்கத் திரியிறார் எண்டு விசாரிச்சனுங்கோ. தேசிய ஊடகச் சேவையில தான் இருந்ததாலையும் ரெண்டெழுத்தாருக்குப் பிடிச்ச மாதிரி அல்லது அவையின்ர பகை வராமல் நெளிவு சுழிவுகளோடை ஊடகப் பணி செய்தவராம். இப்ப அவையின்ர கதை முடியப்போற நேரத்தில தன்ர கதையும் முடியும் எண்ட பயத்தில குடும்பத்தோடை போறதுக்கு விசா கேட்டிருக்குறாராமுங்கோ. நிராகரிப்பு இல்லாட்டிலும் பரிசீலனையில விஷயம் இருக்குறதாலை தனக்குச் சாதகமா முடிவெடுப்பாங்கள் எண்டு நம்பிக் கொண்டுதான் சொத்துக்களை விக்கிறாராம் எண்டு சொல்லி மனுஷன் சண்டை முடியிறதுக்கிடையில குடும்பத்தோடை நாட்டை விட்டு போயிட வேண்டுமெண்டதில ரொம்ப அக்கறையாயிருக்குறாருங்கோ. தனியத்தான் போறியளோ, மற்ற ஊடக நண்பர்கள் என்ன செய்யப் போயினமாம் எண்டு கேட்டதுக்கு இண்டைக்கு இருக்கிற ஊடகக்காறரில அரைவாசிப்பேருக்கும் மேற்பட்டவை குடியுரிமை கிடைக்கிற நாடுகளுக்கு அப்பிளிக்கேஷன் போட்டு விசாவுக்கு ட்ரை பண்ணிக்கொண்டுதான் இருக்கினம் எண்டும் சொல்லுறாருங்கோ.

நாட்டுப் பிரச்சினையாலை தலைநகருக்கு வந்து தங்கியிருக்கிற எங்கடை சனம் புதுவகை யான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்குதுங்கோ. போனவாரம் தெரிஞ்ச ஊர் நண்பரொருவர் பொலிஸ் ஸ்டேசனுக்குப் போறன் எண்டு போனார். என்ன விஷயம் எண்டு போய்ப் பார்த்ததில அதிர்ச்சிதான் மிச்சமாயிருந்ததுங்கோ. வாடகைக்கு இருந்த வீட்டு உரிமையாளரோடை ஏதோ வாய்த் தர்க்கம் பட்டவராம். அவன் உடன கொட்டியா எண்டு போன் பண்ணிப் போட்டானாம். வந்தவையும் விசாரிச்சுப் போட்டு ஸ்டேசனுக்கு வாங்கோ எண்டிச்சினமாம். உங்க போனால் ஊர்ப்பதிவு, பொலிஸ் பதிவு, கைரேகை அடையாளம் எண்டெல்லாம் பல கட்ட விசாரணை நடந்திச்சாம். நண்பருக்கு ரொம்ப மனசுடைஞ்சு போட்டுதுங்கோ. அவர் ஊர்ல இருந்தால் பெடியளை ரெண்டெழுத்தார் பிடிச்சிடுவினம் எண்டு ரெண்டு மகன்மாரை யும் சின்ன வயசிலையே வெளிநாட்டுக்கு அனுப்பின மனுஷன். அப்பிடியானவரை ரெண்டெழுத்தாரோடை தொடர்புபடுத்தி நடந்த விசாரணைகள் அவருக்குப் பிடிக்கவில்லையுங்கோ. பாத்தியளோ தலை நகர்ல எங்கட சனம் எவனெவனுக்கெல்லாம் பயப்பிட வேண்டிக்கிடக்கெண்டு நண்பர் ரொம்பவும் பீல் பண்ணுறாருங்கோ. எங்கட சனம் உப்பிடி அவமானப்பட வேண்டுமெண்டு தானே ரெண்டெழுத்தார் விரும்பிச்சினம்.

வன்னியில இருக்கிற சனம் பாதுகாப்பாக வெளியேற அதிகாரமானவர் அறிவிச்ச நாற்பத்தியெட்டு மணி நேர அவகாசம் அவை யளச் சரியாகப் போய்ச் சேரவில்லையெண்டு உங்கயிருந்து டாக்குத்தர் ஒருவர் வெளிநாட்டுச் செய்திச் சேவையொண்டுக்குச் சொன்னவருங்கோ. அவரெப்பிடி உதை அறிஞ்சுகொண்டவர் எண்டதை அந்தச் செய்திச் சேவையும் கேக்கவில்லை. டாக்குத்தரும் சொல்லவில்லை. உதென்ன விளையாட்டோ தெரியவில்லையுங்கோ. டாக்குத்தருக்குத் தெரிஞ்சிருந்தால் அவர் தன்னும் சனங்களுக்குச் சொல்லியிருக்கலாம். முடியாதெண்டால் டாக்குத்தரையும் ரெண்டெழுத்தாரின்ர சுடுகுழல் கட்டுப்பாட்டில தான் வைச்சிருக்குதெண்டல்லோ அர்த்தமுங்கோ. அதிகாரமானவரின் அறிவித்தலுக்கு ரெண்டெழுத்தார் உடன மறுப்புத் தெரிவிச்சிச்சினம். அப்பிடியெண்டால் ரெண்டெழுத்தாருக்குத் தெரிஞ்ச மெசேஜ் சனங்களுக்குத் தெரியேல்லையெண்டால் ரெண்டெழுத்தாருக்கு சனங்கள் மேல அக்கறை இருந்திருந்தால் அவையாச்சும் சனத்துக்குச் சொல்லியிருக்கலாமெல்லோ. உதைப்பற்றியும் அந்தச் செய்திச் சேவை யும் கேக்கவில்லை. டாக்குத்தரும் சொல்லவில்லையுங்கோ. உது எப்பிடி இருக்குதெண்டால் கேக்குற மாதிரிக் கேக்குறம். சொல்லுற மாதிரிச் சொல்லுங்கோ எண்ட மாதிரியெல்லோ இருக்குதெண்டு நான் சொல்லவில்லையுங்கோ. வாத்தியார் சொல்லுறாருங்கோ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இராசி பலன்கள் - 2009



இந்து ஆண்டு குரு பகவான் 20.12.2009 முடிய மகர ராசியில் சஞ்சாரம் செய்கிறார். மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் 1.5.2008 முதல் 30.7.2009 வரை அதி சாரமாகக் கும்ப இராசிக்குச் செல்கிறார். சிம்ம இராசியில் சஞ்சாரம் செய்யும் சனி பகவான் 09.09.2009 இல் கன்னி இராசிக்கு மாறுதல் ஆகிறார். மகரத்தில் சஞ்சரிக்கும் ராகு கடகத்தில் சஞ்சரிக்கும் கேது 17.11.2009இல் மாறுதலாகி தனுசிற்கு ராகுவும், மிதுனத்திற்கு கேதுவும் செல்கின்றனர். கிரக நிலைகளின் அடிப்படையில் பலன்களை விளக்கி வாசகர்கள் பயன்பெறும் வகையில் இந்தப் புத்தாண்டு இராசி பலன்களை எழுதியுள்ளேன். வாசகர்கள் இதனைப் படித்துப் பரிகாரங்களைப் பயன்படுத்தி விதியை மதியால் வென்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

(ஜோதிட மாமணி முருகுபாலமுருகன் B.com., B.L)

(விருச்சிக ராசி தொடர்ச்சி)

செப்டம்பர் மாதம் வரை எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

உத்தியோக நிலை:உத்தியோக நிலையில் உயர் அதிகாரிகளிடம் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகும். எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல் அதிகரிக்கும். வேலைப்பளு கூடுவதால் உடல்நிலையில் சோர்வு உண்டாகி அடிக்கடி விடுப்பு எடுக்க நேரிடும். வருமானம் குறையும். புதிய வேலை தேடுபவர்களுக்குத் தகுந்த வாய்ப்புக்கள் அமையாமல் சோதனைக்குள்ளாவார்கள்.

தொழில் வியாபாரம்: செய்யும் தொழில் வியாபாரத்தில் பெரிய அளவில் இலாபம் இருக்காது. போட்ட முதலே முடக்கமாகும். கூட்டுத் தொழிலிலும் கூட்டாளிகளும் சாதகமாக அமையமாட்டார்கள். கொடுக்கல் வாங்கலிலும் வீண் விரயங்கள் உண்டாகும். புதிய முயற்சிகளில் தடைகள் ஏற்படும். கமிஷன் ஏஜென்சி காண்டிராக்ட் போன்றவற்றில் எதிர்பாராத்த இலாபம் கிடைக்காது.

பெண்களுக்கு:- குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உண்டாகும். வயிற்றுக் கோளாறு,மாதவிடாய்க் கோளாறுகள் உண்டாகும். சிலருக்குப் புத்திர பாக்கியம் அமைய நிறையச் செலவு செய்ய வேண்டியிருக்கும். பூர்வீகச் சொத்துக்களால் வீண் அலைச்சல் ஏற்படும். சகோதரர்களிடையே ஒற்றுமைக் குறைவு உண்டாகும். சுபகாரிய முயற்சிகளில் தடை உண்டாகும். மன நிம்மதியற்ற நிலை ஏற்படும்.

மாணவர்களுக்கு : கல்வியில் கடின முயற்சிகளை மேற்கொண்டால் மட்டுமே அனுகூலப் பலனை அடைய முடியும். கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை, உடல் நிலைப் பாதிப்புக்கள், தேவையற்ற பொழுதுபோக்குகள் எனச் சாதகமற்ற பலன்கள் உண்டாகும். ஆசிரியர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். நல்ல நண்பர்கள் பிரிந்து செல்வார்கள் எதிலும் கவனம் தேவை.

கலைஞர்களுக்கு: தொழில் துறையில், படவாய்ப்புக்களைக் கை நழுவ விடுவீர்கள். போட்டி, பொறாமைகள் உருவாகும். கையில் இருக்கும் வாய்ப்புக்களையும் சரிவர முடித்துக் கொடுக்க முடியாமல் தடைகள் உண்டாகும். வர வேண்டிய பாக்கித் தொகைகள் தாமதப்படும். பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு : விவசாயிகளுக்கு விளைச்சலில் பாதிப்பு உண்டாகும். புழு பூச்சி தொல்லைகளால் விளைபொருட்கள் பாதிப்படையும். சந்தையில் எதிர்பார்த்த அளவிற்கு இலாபம் உண்டாகாது. அரசாங்கத்தில் எதிர்பார்த்த உதவிகளுக்குத் தடைகள் ஏற்படும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு:- அரசியல்வாதிகளின் பெயர் புகழ் குறையக் கூடிய காலமாகும். மறைமுக எதிர்ப்புக்கள் உண்டாகும். தேவையற்ற வீண் பழிகளையும் சுமக்க நேரிடும். பேச்சில் சற்று நிதானத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் நல்லது. வருவாய்கள் தடைப்படும்.

தனு

(மூலம், பூராடம், உத்திராடம்1)

எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் வெளிப்படையாகப் பேசக் கூடிய கள்ளங் கபடம் இல்லாத உள்ளம் கொண்ட உங்களுக்கு ராசியாதிபதி குரு பகவான் தனஸ்தானமான 2ஆம் வீட்டில் 9.12.2008முதல் 20.12.2009 முடிய சாதகமான சஞ்சாரம் செய்வதால் உங்களுக்கு நீண்ட நாட்களாக இருந்த நெருக்கடிகள் எல்லாம் விலகி எல்லா வகையிலும் ஏற்றங்கள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த போட்டி பொறாமைகள் விலகி எல்லா வகையிலும் ஏற்றங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாகத் தடைப்பட்டு வந்த பதவி உயர்வு இந்த ஆண்டு கிடைக்கும். அதுமட்டுமன்றி நீண்ட நாட்களாகத் தடைப்பட்டு வந்த மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். சிலருக்கு வாரிசு யோகம் உண்டாகும். சனி பகவான் உங்கள் ராசிக்குப் பாக்கியஸ்தானமான 9ஆம் வீட்டில் 9.9.2009 முடியவும் அதன் பிறகு 10ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய உள்ளார். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கைகள் கிடைக்கப் பெற்று மனதில் பூரிப்பு உண்டாகும். சர்பக்கிரகமான ராகு பகவான் உங்கள் ராசிக்குக் குடும்ப ஸ்தானமான 2ஆம் வீட்டிலும் கேது பகவான் அஷ்டம ஸ்தானமான 8ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் கணவன்-மனைவியிடையே தேவையற்ற சண்டை சச்சரவுகள் ஏற்படலாம்.

உடல்நிலை : உடல்நிலை சுமாராக அமையும். சிறுசிறு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொலை தூர பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். என்றாலும் சற்றுக் சுறுசுறுப்பாகவும், செயல்பட முடியும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஜல தொடர்புடைய பாதிப்பு, உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் எதையும் சமாளிக்கக் கூடிய வலிமையும் உண்டாகும்.

குடும்பம், குழந்தை: குடும்பத்தில் தேவையற்ற கருத்து வேறுபாடுகள் உண்டாகும். பேச்சைக் குறைப்பதால் வீண் வாக்குவாதங்கள் குறையும். உற்றார் உறவினர்களிடையே ஒற்றுமை சுமாராக அமையும். தன வரவு சிறப்பாக இருக்கும். வண்டி வாகனம் வாங்கக் கூடிய யோகம் உண்டாகும். எதிலும் சற்றுக் கவனமுடன் செயல்படுவது உத்தமம்.

உத்தியோக நிலை: உத்தியோகத்தில் கடந்த காலங்களில் இருந்த பிரச்சினைகள் விலகும். உடன் இருப்பவர்களிடம் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. எதிர்பார்த்த உயர்வுகள் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவுகள் சிறப்பாக அமையும். உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்புக்களால் எதையும் எளிதில் செய்து முடித்து அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுவீர்கள்.

தொழில் வியாபாரம்: செய்யும் தொழில் வியாபாரத்தில் மிகவும் முன்னேற்றமான பலன் உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கடந்த காலங்களில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகி நல்ல அபிவிருத்தி உண்டாகும். புதிய கூட்டாளிகளின் சேர்க்கை பல வழிகளில் உயர்வை உண்டாக்கும். கமிஷன்,ஏஜென்சி,காண்டிராக்ட் போன்றவற்றால் எதிர்பாராத இலாபம் உண்டாகும்.

பெண்களுக்கு: உடல்நலனில் சிறு பாதிப்புக்கள் உண்டாகும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். பொருளாதார நிலை மிகச் சிறப்பாக அமையும். நினைத்த காரியம் நிறை வேறும். சுபகாரிய முயற்சிகளில் அனுகூலப் பலன் உண்டாகும்.

மாணவர்களுக்கு: கல்வியில் நல்ல மேன்மைகளும் ஏற்றமும் இருந்தாலும் கவனக் குறைவும், ஞாபக மறதியும் உண்டாகும். குடும்ப சூழ்நிலையில் உள்ள பிரச்சினைகளால் கல்வியில் மந்தநிலை உண்டாகும். தேவையற்ற விஷயங்களில் கவனத்தைச் சிதற விடாமல் படிப்பில் ஆர்வம் செலுத்துவதால் நல்ல மதிப்பெண்களைப் பெற்று விடுவீர்கள்.

கலைஞர்களுக்கு: பல சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்த உங்களின் எண்ணம் நிறைவேறும். உங்களுக்குச் சிறப்பான வாய்ப்புக்கள் அமையும். என்றாலும் தேவையற்ற விஷயங்களில் பேசுவதையும், தலையிட்டு செய்வதையும் தவிர்ப்பது உத்தமம்.

விவசாயிகளுக்கு: விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலால் பொருளாதார நிலை உயரும். பெரிய அளவில் விவசாயப் பணிகளை மேற்கொண்டு இலாபம் அடைவீர்கள். வங்கிக் கடன்களையும் குறித்த நேரத்தில் செலுத்த முடியும். அலைச்சல்கள் அதிகரிக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு: கடந்த காலங்களில் பதவிக்கு இருந்து வந்த நெருக்கடிகள் குறையும். மற்றவர்கள் பாராட்டும்படியான சேவைகளைச் செய்வீர்கள். உடன் இருப்பவர்களிடமும் மேடை பேச்சுக்களிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

மகரம்

(உத்திராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2)

நண்பர்களானாலும், விரோதிகள் ஆனாலும் சகஜமாகப் பழகக் கூடிய பண்பு கொண்ட உங்களுக்கு ராசியாதிபதி சனி பகவான் அஷ்டம ஸ்தானமான 8ஆம் வீட்டில் 9.9.2009 முடியச் சஞ்சாரம் செய்கிறார். இதுமட்டுமன்றி குருபகவானும் 2009ஆம் ஆண்டு முழுவதும் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்கிறார். உங்களுக்கு உடல் ஆரோக்கிய ரீதியாகக் கூட கடுமையான நெருக்கடிகள் ஏற்படக் கூடிய காலமாகும். கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் வீண் பிரச்சினை ஏற்படலாம். அஷ்டம சனி நடைபெறுவதால் பெரிய முதலீடுகளில் எந்தச் செயலையும் இந்த ஆண்டு தவிர்ப்பது நல்லது. குரு பகவான் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பதால் சுபகாரியங்கள் நடைபெற இடையூறுகள் இருக்கும் என்றாலும் 1.5.2009 முதல் 30.07.2009முடிய குரு அதிசாரமாக தனஸ்தானத்திற்குச் செல்லும் காலத்தில் ஓரளவுக்குச் சாதகமான பலன்கள் நடைபெறும். ராகு பகவான் ஜென்ம ராசியிலும் கேது 7ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்வதால் உங்களுக்குக் குடும்ப வாழ்வில் தேவையற்ற கருத்து வேறுபாடுகள் ஏற்படும். குறிப்பாக மே, ஜூன் மாதங்களுக்கு ஏற்றமிகு பலன்கள் உண்டாகும்.

(தொடரும்)

நெத்தியடி

48 மணி நேரத்திற்குள் சிவிலியன்களை வெளியேறப் புலிகள் அனுமதிக்க வேண்டும்.

ஜனாதிபதி.

சிங்கள மக்கள் கொல்லப்படுவது ஒரு காலகட்டத்திலும், தமிழ் மக்கள் கொல்லப்படுவது இன்னொரு காலகட்டத்திலும், புலிகளின் தந்திரோபாயத்தின் தேவையாக இருக்கும்போது இது சாத்தியமாகுமா?
மக்கள்.

தண்ணீருக்கு அடியில் செல்லக்கூடிய புலிகளின் 35 அடி நீளமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

செய்தி.

இன்னொரு நீர் மூழ்கியில் பங்கருக்குள்ளிருந்து அதி வல்லமை பெற்ற புலித் தலைவர் கடலில் பாய்ந்து சென்று விட்டாரோ?
மக்கள்.

பல மாதங்களாகத் தொடரும் போர், அடுத்தடுத்து இடம்பெயர்வு, கடும் மழை மற்றும் வெள்ளம் என்றவாறு வன்னி மக்களின் ஆபத்தான நிலைமை கவலைக்குரியது.

நவநீதபிள்ளை, ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர்.

புலிகளின் இரும்புச் சங்கிலியை உடைத்து மக்களை வெளியேற்றும் சக்தி யாரிடம் இருக்கிறது?
மக்கள்.

'ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுங்கள்' எனக் கோஷம் எழுப்பியவாறு தமிழக இளைஞன் தீக்குளித்துத் தற்கொலை.

தமிழகச் செய்தி.

புலிகளிடமிருந்து ஈழத் தமிழரைக் காப்பாற்றுவதற்குப் புலிகளின் மொழியிலேயே பேசுகிறார்கள் போலிருக்கிறது.
மக்கள்.

வன்னி நிலப்பரப்பில், தாக்குதலில் படுகாயமடைந்த நோயாளர்களுக்கான போக்குவரத்துக்கான ஒழுங்குகளுக்கு ஐ.நா. உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

பி.பி.சி.க்கு பேட்டி கொடுக்க பயிற்சியளித்த நோயாளர்களை மட்டும் அனுப்பாமல் எல்லோரையும் அனுப்பி வைத்தால் உங்களுக்கு நாங்கள் நன்றி சொல்வோம்!
மக்கள்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்கள் மீளவும் சேவையாற்ற விரும்பினால் யாழ்.பிராந்தியப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம்.

யாழ்.பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

உங்கள் கனவு நனவாக அவசர காலச் சட்டம்தான் தேவை!
மக்கள்.

பெற்றோலின் விலையை லீற்றர் நூறு ரூபாவாக்குவதற்கு அரசுத் தரப்பு மறுத்ததையடுத்து இவ்விடயத்தை ஒட்டிய தனது சகல கட்டளைகளையும் உயர் நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது.

செய்தி.

நீதிமன்றக் கட்டளையை நிறைவேற்றுவது யார்?
மக்கள்.

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை ஜனாதிபதி சந்திப்பு ஒரு போலி நாடகம்.

டாக்டர் ராமதாஸ்.

நீங்கள் காணும் கனவெல்லாம் உண்மையென்றும் மற்றவர்களின் செயல் எல்லாம் போலி என்பதும் உங்கள் எண்ணமா?
மக்கள்.

வன்னிப் பேரவலத்தை நிறுத்தக் கோரி யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு யாழ். மரியன்னை பேராலயத்தில் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது.

செய்தி.

வன்னிப் பேரவலத்திற்கு ஆண்டவன் தான் காரணம் என்கிறார்களோ இவர்கள்?
மக்கள்.

மக்களின் பாவனைக்கு ஏற்றதல்ல என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உறுதிப்படுத்தப்பட்டு, கொட்டப்பட்டிருந்த உருளைக்கிழங்குகளை மக்கள் எடுத்துச் செல்வதால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம்!

செய்தி.

பழுதான உருளைக்கிழங்கை பொது சுகாதார பரிசோதகர்களால்தான் கண்டுபிடிக்க முடியுமோ?
மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மக்களை விடுவிக்கக்கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் பேரணி

வன்னி யுத்த வலயப் பகுதிக்குள் சுமார் இரண்டரை இலட்சம் தமிழ் மக்களை வெளியேற விடாமல் புலிகள் தடுத்து வைத்திருப்பதைக் கண்டித்து, யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் பேரணி கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. யாழ்.மாவட்ட தேச மக்கள் எழுச்சிப் பேரவை இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தது. சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். ஐந்து வலயங்களிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட மக்கள் கூட்டம் யாழ். கச்சேரி முன்றலில் சங்கமித்து நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் முடிவுக்கு வந்தது.

வன்னி மக்களை மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்திருக்கும் புலிகளின் அடாவடித் தனங்களைக் கண்டித்தும், அம் மக்களைப் பாதுகாப்பாக விடுவிப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கக் கோரியும் மகஜர்கள் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், ஐ.நா. செயலாளர் நாயகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி, அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன. ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கென மகஜர் யாழ். அரசாங்க அதிபர் கே. கணேஷிடம் கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் மேலே தரப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்த சுமார் 25 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் வட மாகாணத்துக்கான விஷேட செயலணிக் குழுவின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வன்னி மக்களின் அவலங்கள் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்து விளக்குகையில் எடுக்கப்பட்ட படம்.

அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தில் யாழ். அலுவலகத்திலுள்ள வதிவிடப் பிரதிஒநிதியிடம் மகஜர் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகவும், மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கிய புலிகளைக் கண்டித்தும் மக்கள் திரள் எழுப்பிய கோஷங்கள் விண்ணைப் பிளக்க, ஊர்வலமாக வந்த மக்கள் பிரதிநிதிகள் இந்த மகஜரைக் கையளித்தனர். மகஜர்கள் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்ட பின்னர் மக்கள் பேரணி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலைச் சென்றடைவதற்கு முன்னதாக கோயில் வீதியிலுள்ள அலுவலகத்தில் மக்களால் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப் போராட்டத்தின் இரத்த சாட்சியங்கள் என்ற இத்தொடர் இத்துடன் 100ஆவது வாரத்தை எட்டியிருக்கிறது. இதுவரை இத்தொடருக்காக வந்து குவிந்த வாழ்த்துக்களுக்கு நன்றி!

இத்தொடரின் உண்மைத் தன்மைகள் குறித்து அனைத்து வாசகர்களும் வழங்கிய பாராட்டுதல்களோடு சாட்சியம் தொடர்கிறது.

ஈழப் போராட்ட அமைப்புகளில் ஈரோஸ் அமைப்பு மட்டுமே ஆரம்பங்களில் இருந்து மலையக மக்கள் குறித்தும் அக்கறை காட்டி வந்திருந்த அமைப்பு! ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபகராக இருந்தவர் தோழர் இரட்ணசபாபதி அவர்கள்.

தோழர் இரட்ணசபாபதி அவர்கள் ஒரு மாதிரி ஈழ வரைபடத்தை உருவாக்கியிருந்தார். அது அகன்றதொரு ஈழ தேசத்தைக் கொண்ட வரைபடமாக இருந்தது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதாக அது இருந்தது.

நாம் ஈழவர்! நமது மொழி தமிழ்! நம் நாடு ஈழம்! என்பதே ஈரோஸ் அமைப்பின் கோட்பாடாக இருந்து வந்தது. தமிழ் ஈழம் என்ற சொற்பதத்தை ஈரோஸ் அமைப்பு ஏற்றிருக்கவில்லை. தென்னாபிரிக்க விடுதலை அமைப்போ அன்றி பாலஸ்தீன விடுதலை அமைப்போ தமது இயக்கங்களின் பெயரில் மொழியை அடையாளப்படுத்தியிருக்கவில்லை. அது போலவே ஈழ விடுதலைப் போராட்ட அமைப்பும் மொழி என்ற அடையாளத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என ஈரோஸ் அமைப்பு விரும்பியிருந்தது. ஆகவேதான் தமிழ் பேசும் மக்களுக்கான வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசத்தை ஈழம் என்று கருதிக்கொண்டு ஈழப்புரட்சி அமைப்பு என்று ஈரோஸ் தன்னை அடையாளப்படுத்தியிருந்தது.

இதனால் கணிசமான முஸ்லீம் இளைஞர்களும் அதில் இணைந்து கொள்ள வாய்ப்பிருந்தது. மலையகத்தையும் ஈழ வரைபடத்தில் இணைத்துக்கொண்டு மலையக மக்கள் மத்தியிலும் அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் ஈரோஸ் அமைப்பின் மீது மலையக இளைஞர்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது.

இதனால் மலையகத்தைச் சேர்ந்த பல இளைஞர்களும் ஈரோஸ் அமைப்பில் இணைந்துகொண்டனர். முதன் முதலாக மலையக இளைஞர்களையும் இணைத்துக் கொண்ட அமைப்பு ஈரோஸ் அமைப்புத்தான்.

ஈரோஸ் அமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களும் அதே கோட்பாட்டுடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற பெயரில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பை உருவாக்கியிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் இருந்தும் புளொட் அமைப்பில் இருந்தும் பிரிந்து சென்றவர்கள் ஒரு கூட்டு முன்னணியை ஆரம்பித்திருந்தனர். அதற்குப் பெயர் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி என்ற ஈ.என்.டி.எல்.எவ். என்ற அமைப்பு. இந்த அமைப்பிற்குப் பெயரிட்டுக்கொண்டவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே. ஈரோஸ் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா.

ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பில் இருந்து பின்னர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏன் வீலகிச் சென்றார் என்பதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். ஈ.என்.டி.எல்.எவ்.

மலையகத்தையும் ஈழ வரைபடத்தில் இணைத்துக்கொண்டு மலையக மக்கள் மத்தியிலும் அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் ஈரோஸ் அமைப்பின் மீது மலையக இளைஞர்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. இதனால் மலையகத்தைச் சேர்ந்த பல இளைஞர்களும் ஈரோஸ் அமைப்பில் இணைந்துகொண்டனர். முதன் முதலாக மலையக இளைஞர்களையும் இணைத்துக் கொண்ட அமைப்பு ஈரோஸ் அமைப்புத்தான்.

அமைப்பில் இருந்து பிரிந்து சென்றிருந்த டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அணியினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற ஈ.பி.டி.பி. அமைப்பை உருவாக்கியிருந்தனர்.

ஆகவே ஈழப்போராட்ட அமைப்புகளில் ஈழம்வாதிகள், தமிழீழவாதிகள் என இரு வேறு சித்தாந்தங்களைக் கொண்ட அணியினரும் இருந்து வருகின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் தோழர் பத்மநாபாவுடன் தோழர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

ஈரோஸ் அமைப்பிற்கு அடுத்த படியாக அதிலிருந்து பிரிந்து சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினரே மலையக இளைஞர்களையும் தமது அமைப்பில் இணைத்துக்கொண்டிருந்தனர்.

அதில் ஒருவர்தான் பெஞ்சமின் என்ற மலையகத்தைச் சேர்ந்த இளைஞர். இவர் ஒரு டாக்டர் என்பதை முன்பே தெரிவித்திருந்தேன்.

டாக்டர் பெஞ்சமின், டக்ளஸ் தேவானந்தா அவர்களோடு கொள்கை ரீதியாக மிகவும் நெருக்கமாக இருந்த ஒருவர். 84, 85 ஆம் ஆண்டுகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர், தாம் பயன்படுத்தி வந்திருந்த பீக்கப் வாகனங்களில் ஒரு மாற்றத்தை உருவாக்கியிருந்தனர்.

யாழ். கோட்டை முகாமில் இருந்து ஒருமுறை படையினர் வெளியேற முற்பட்ட போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பிரதம தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது பரிவாரங்களோடு பீக்கப் வாகனத்தில் யாழ். மருத்துவமனைக்கு அருகாமையில் வந்திறங்கினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளிகள் ஏனைய அமைப்பு போராளிகளுடன் இணைந்து கோட்டை முகாமை நோக்கி தாக்குதல்களை நடத்தி, படையினரை வெளியே வர முடியாது தடுத்து விட்டனர்.

தனது இயக்கப் போராளிகளை ஊக்கப்படுத்திவிட்டு தனது பீக்கப் வாகனத்தில் ஏறினார் டக்ளஸ் தேவானந்தா. அப்போது அங்கு பொது மக்கள் பலரும் திரண்டு நின்று டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வானகத்தை அதிசயமாகப் பார்த்து நின்றனர்.

அவரது வானகத்தின் இலக்கத் தகட்டில் சிங்கள சீறீக்குப் பதிலாக 'ஈ' என்ற தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்தது. அது குறித்து அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் விளக்கம் கேட்டார்கள்.

வாகனத்தை வீட்டு இறங்கினார் டாக்டர் பெஞ்சமின். டக்ளஸ் தேவானந்தா தன்னிடமிருந்த தொலைத்தொடர்பு கருவி மூலம் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்.

தேடனார்

சிங்கள சீறீயை அழித்து அதற்கு பதிலாக ஈ. என்ற தமிழ்ப் பெயரைத் தாம் மாற்றியமைக்கு விளக்கம் கொடுத்தார் டாக்டர் பெஞ்சமின்.

சீறீலங்கா அரசு சிங்களத்தில் சீறீ என்ற எழுத்தை வாகனங்களுக்குப் பயன்படுத்தி வருகின்றது. நாம் ஈழம் கோருகின்றோம். எமது நாடு ஈழம். ஆகவே எமது வாகனத்தின் இலக்கத் தகட்டில் நாம் 'ஈ' என்ற தமிழ் எழுத்தை பயன்படுத்தி வருகின்றோம் என்றார் டாக்டர் பெஞ்சமின்.

(சாட்சிகள் தொடரும்)

புரட்சித் தலைவர் 112 பிடல் காஸ்ட்ரோ

அது எரிபொருள் எண்ணெய்க்காக அந்நியச் செலவாணியைச் சம்பாதிக்க வேண்டிய நாடாகவே நீடிக்கிறது. இருந்தும் எழுத்தறிவின்மையை ஒழித்தது என்பதும் உலகிலேயே மக்களின் விகிதாசாரத்தில் அதிக அளவில் டாக்டர்களையும், விஞ்ஞானிகளையும் கொண்ட நாடாக வளர்ந்திருப்பதை உலகம் ஒப்பியுள்ளது.

கியூபா மக்களின் மனப்பக்குவத்தை விளக்க ஒரு நிகழ்ச்சி உதவக் கூடும். ஒலிம்பிக் குத்துச் சண்டைப் போட்டிகளில் நடந்த மூன்று ஒலிம்பிக் போட்டிகளிலும் கியூபா நாட்டு வீரர் ஒருவர் தங்கப் பதக்கம் வென்று வருகிறார். அவரிடம் "உலகில் பல நாடுகளில் நடக்கும் குத்துச் சண்டைப் போட்டிகளில் நீங்கள் கலந்துகொண்டால் கோடி கோடியாக டாலரைக் குவிக்கலாம். ஏன் நீங்கள் அமெரிக்கா போகக் கூடாது?" எனக் கேட்டபோது, அவர் கூறிய பதில் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "பணத்துக்காக நடத்தப்படும் போட்டிகளில்

கலந்து கொள்வோர் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளக் கூடாது என ஒரு விதி இருக்கிறது. எனவே, நான் அதில் பணத்துக்காகக் கலந்துகொண்டால், கியூபா சார்பில் ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள இயலாது. தங்கப் பதக்கம் பெறும்போது, கியூபா என உலகின் முன் அறிவிக்கப்படுவதும், எங்கள் நாட்டுத் தேசிய கீதம் இசைக்கப்படுவதும் நின்றுபோய்விடும்..... அதை இழக்க உடன்படமாட்டேன்" என்றார். நிருபர்கள், "அந்தக் கௌரவத்தை இழந்தாலும், நீங்கள் கோடி கோடியாக டாலரைச் சம்பாதித்தால், உங்கள் நாட்டின் பொருளாதாரமே மேம்படும் என்ற போது, "அப்படி ஒரு வழி இருப்பது எனக்குத் தெரியாது. எங்கள் நாட்டு 'மக்கள்' சொன்னால், அதையும் செய்வேன்" என்றார்.... நிருபர்கள் அவருக்கு மலர்ச் செண்டுகள் கொடுத்து வாழ்த்தினர்.....

அவரைப்போலவே, இன்னொரு மருத்துவர் படை பற்றியும் நாம் தெரிந்துகொள்வது அவசியம்.... கியூபாவிலிருந்து ஆபிரிக்க நாடுகள் பலவற்றில், குக்கிராமங்களிலும், மலை வாழ் பழங்குடி மக்கள் மத்தியிலும் 40

மாவீரன் சே குவேராவின் பங்கு கியூபாவின் விடுதலையிலும், முன்னேற்றத்திலும் முத்திரைப் பதிவு பெற்றவை. இன்று புரட்சி மைதானத்தில் அவரது உருவச்சிலை கம்பீரமாக நிற்கிறது. சே குவேரா சர்வதேச மனிதன் என்பதை, வாழ்விலும், போராட்டத்திலும் சாவிலும் நிரூபித்து விட்டார்..... பிடலுக்குக் கிடைத்த வைரவாள் அவர்.... ஒன்றரைக் கோடிக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட சிறிய நாடுதான் கியூபா. அது உலகப் பெரும் வல்லரசைக் கண்டு அஞ்சாமல், பணியாமல், நிமிர்ந்து நடை போடுவது ஆய்வாளர்களைத் திகைக்க வைக்கிறது.

ஆண்டுகளாகச் சேவை செய்து வருகின்றனர். இவர்களுக்கான மாத ஊதியம் பிற நாடுகளுடன் ஒப்பீடும்போது, உயிர் வாழக் கொடுக்கும் பணம்தான்..... "subsistence allowance" இருந்தும் முகம் சுளிக்கவில்லை. கிராமங்களுக்குப் போக மறுக்கவில்லை. பளபளக்கும் அமெரிக்காவை நோக்கியும் ஓடவில்லை. இந்த மருத்துவப் படை, உடல் நோய் தீர்க்கும் மருத்துவர்களாக மட்டுமல்லாது, சமுதாய நோய் தீர்க்கும் சேவைப் படையாகப் பணியாற்றிப் புகழ் பெற்றுள்ளது. இவர்களில் யாரும் புலம்பெயர்ந்து ஓடாதது சிந்திக்க வேண்டியது. (இதே போல இந்திய விஞ்ஞானிகள் பலர், தங்கக்கட்டிகளைக் காட்டி மறுத்து, இந்த அழைத்தும் போக மண்ணில், மக்களுக்காகப் பாடுபடுவோம் என இருப்போரும் உண்டு)

அதேபோல கரும்பு வெட்ட பிரதமரும், மந்திரிகளும் காடுகளில் பல நாட்கள் வேலை செய்ததை எங்காவது கண்டதுண்டா? அதுதான் கியூபா.....

விடுதலைக்குப் போராடிய பல நாடுகளுக்கு கியூபா உதவியது. நேரடியாக பல புரட்சியாளர்கள் போய் பங்கெடுத்தனர். இதைப் பல நாடுகள் கண்டித்தன..... புரட்சியை ஏற்றுமதி செய்ய முடியாது என்பதைப் பிடலும் ஒப்புக்கொண்டு அந்த முறையைக் கைவிட்டார். அல்ஜியர்ஸின் விடுதலைக்குக் கியூபா செய்த உதவிதான் பெரிது. ஆபிரிக்க நாட்டின் ஒருங்கிணைப்புத் தலைமை, பிற நாடுகள் தலையிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட பிறகு இது கைவிடப்பட்டது.

சே குவேரா, காங்கோ புறப்படும் முன்னர் கியூபா குடியுரிமையை கைவிடுவதாகவும் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாகவும் எல்லாப் பொறுப்புக்களையும் துறந்துவிட்டு, 'மனிதன்' என்ற

முறையில் எஞ்சியிருக்கும் கடமைகளை நிறைவேற்றப் போவதாக அறிவித்து விட்டுத்தான், பொலிவியாவுக்கும் போனார். வருந்தத்தக்க முறையில் பொலிவியாவில் கொல்லப்பட்டார்.

தருவது தா.பாண்டியன்

மாவீரன் சே குவேராவின் பங்கு கியூபாவின் விடுதலையிலும், முன்னேற்றத்திலும் முத்திரைப் பதிவு பெற்றவை. இன்று புரட்சி மைதானத்தில் அவரது உருவச்சிலை கம்பீரமாக நிற்கிறது. சே குவேரா சர்வதேச மனிதன் என்பதை, வாழ்விலும், போராட்டத்திலும் சாவிலும் நிரூபித்து விட்டார்..... பிடலுக்குக் கிடைத்த வைரவாள் அவர்....

ஒன்றரைக் கோடிக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட சிறிய நாடுதான் கியூபா. அது உலகப் பெரும் வல்லரசைக் கண்டு அஞ்சாமல், பணியாமல், நிமிர்ந்து நடை போடுவது ஆய்வாளர்களைத் திகைக்க வைக்கிறது.

(அசத்துவோம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாணத்தின் அடுத்த தமிழ்க் கல்வி அமைச்சர் யார்?

நடைபெறவுள்ள மத்திய மாகாண சபைத் தேர்தலின் வாக்குப் பதிவிற்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கேற்ப குறித்த பிரதேசத்தில் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகளும் சூடு பிடித்துக் காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் என்றுமே பலமான வாக்கு வங்கியைக்கொண்டிருக்கும் ஐ.தே.கட்சியானது, எப்படியாயினும் தமது வெற்றிக் கணக்கை ஆரம்பிப்பதற்கான பிள்ளையார் சுழியை மத்திய மாகாண சபையில் போட வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளது. அதேபோன்று மறுபுறத்தில் பொதுஜன மக்கள் முன்னணி. குறித்த கட்சி, கடந்த ஜனாதிபதி தேர்தலில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளினால் தோல்வியடைந்திருந்தது. அந்தக் கறையைப் போக்கி மத்திய மாகாணத்தில் தமது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் இக்கட்சி உறுதியாக உள்ளதாகவே தெரிகின்றது. இந்தத் தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான கால எல்லையை அரசாங்கம் தீர்மானிக்கவுள்ளது, என சில வட்டாரங்களில் ஊகங்கள் வெளியிடப்படுகின்றன. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது பாரிய வாக்கு வித்தியாசத்தில் தன்னைத் தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்திய மலையகத்தின் இரு பெரும் கட்சிகளையும் இம்முறை தனது கட்டுப்பாட்டில் பொதுஜன முன்னணி வைத்துள்ளது. அத்துடன் இதர மலையகக் கட்சிகளிலும் பெரும்பாலானவை பொதுஜன முன்னணியின் சின்னத்திலேலே போட்டியிடுகின்றன.

அற்ப விடயங்களுக்காக தங்களிடையே முட்டி மோதுகின்ற, கடித்துக் குதறுகின்ற மலையகத்தின் பெரும்பாலான கட்சிகளை ஒரே சின்னத்தின் கீழ் கொண்டுவந்ததின் மூலம் மத்திய மாகாண சபையில் பொதுஜன முன்னணியினர் தமது வெற்றி வாய்ப்பை அதிகரித்துக்கொண்டுள்ளனர். மலையக சமூகத்தின் கணிசமான வாக்குகள் ஐ.தே.க. செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படுவது போன்று மலையகக் கட்சிகளின் வாக்கு வங்கியின் உதவியுடன் பொதுஜன முன்னணியினர் மீண்டும் சபையைக் கைப்பற்றி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் மத்திய மாகாண சபையின் தமிழ் கல்வி அமைச்சர் பதவி யாருக்கு வழங்கப்படும் என்பதே தற்போது மலையகத்தின் பெறுமதி மிக்க கேள்வியாக மாறிவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்கு முன்னாள் தமிழ்க் கல்வியமைச்சர் வீ.இராதாகிருஷ்ணனுக்கும், தற்போதைய தமிழ்க் கல்வியமைச்சர் எஸ். அருள்சாமிக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முதன்மை வேட்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் அப்போது பொதுஜன முன்னணி ஆட்சியமைத்தபோது தமிழ் கல்வியமைச்சராகப் பதவியேற்றார். எனினும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இ.தொ.கா. ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்த போது, அமைச்சுப் பதவியை தியாகம் செய்ய வேண்டிய நிலை இராதாகிருஷ்ணனுக்கு ஏற்பட்டது.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் மலையக

அதிக வாக்குகளைப் பெறுபருக்கு அமைச்சர் பதவி என்கின்ற அளவுகோலை ஜனாதிபதி பயன்படுத்துவாராயின், முன்னாள் தமிழ் கல்வி அமைச்சருக்கே அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னணி சார்பாகப் போட்டியிட்டு மத்திய மாகாண சபைக்குத் தெரிவானவர் எஸ்.அருள்சாமி. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிக்க மலையக மக்கள் முன்னணியினர் முடிவெடுத்தபோது கட்சியின் தீர்மானத்திற்குக் கட்டுப்படாது தற்போதைய ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்திய எஸ். அருள்சாமி உள்ளிட்ட ஒரு பகுதியினர் அவருக்குத் தமது ஆதரவை நல்கினர். இவர்களினால் குறித்த தேர்தலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியாது போன போதிலும் வெற்றிடமாய் இருந்த தமிழ் கல்வி அமைச்சப் பதவியையும் பெற்றுக்கொண்டனர்.

தற்போது தங்களுக்குள் முறைத்துக்கொண்டாலும், இராதாகிருஷ்ணன், அருள்சாமி ஆகிய இருவரும் ஓர் அணியில் இருக்கின்றனர். இருவருமே குறித்த அமைச்சுப் பதவி தமக்கே வழங்கப்படும் என அதீத நம்பிக்கை வெளியிட்டு வருகின்றனர். மலையக மக்களின் விகிதாசாரத்திற்கு மீறிய வகையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளதால், விருப்பு வாக்குகள் சின்னாபின்னமாக்கப்பட்டு பெறக்கூடிய ஆசனங்களின் எண்ணிக்கை வீச்சியடையும் என்று புத்திஜீவிகள் மனவருத்தப்படுகின்றபோதும், இவர்கள் இருவருமே மீண்டும் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்படுதின்ற சூழலில் இந்த போட்டியின் சுவாரஸ்யம் அதிகரித்துள்ளது.

கடந்த முறை அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வீ.இராதாகிருஷ்ணனுக்கு இ.தொ.கா. வாக்கு வங்கிக்கு அப்பால் தனிப்பட்ட முறையிலும் பாரிய வாக்கு வங்கி ஒன்று நுவரெலியாவில் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். அவர் மக்களை அணுகும் பாங்கு பெரும்பான்மை சமூகத்தவர் மட்டத்திலும் ஓர் ஆதரவு தளத்தைக் கொடுத்துள்ளதாக நம்பப்படுகின்றது. அத்துடன் 2007 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 3,179 ஆசிரியர் நியமனம் உட்பட தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல வேலைத் திட்டங்கள் தனது காலப் பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும் அதன் பலன்களே தற்போது பெறப்பட்டு வருவதாகவும் வீ.இராதாகிருஷ்ணன் கூறுகின்றார். இக்கருத்தை மலையகத்தின் புத்திஜீவிகளும் ஏற்றுக்கொள்கின்றனர்.

மறுபுறத்தில் எஸ்.அருள்சாமி அவர்களை எடுத்துக்கொண்டால் நீண்ட தொழிற்சங்க அனுபவத்தை கொண்டிருக்கும் இவர், மலையக மக்கள் முன்னணியின் சார்பாக மத்திய மாகாண சபைக்குத் தெரிவாகி தமிழ் கல்வி அமைச்சராகப் பதவியேற்ற பின்னரே மலையகத்தில் பிரகாசிக்க ஆரம்பித்தார். 2007 ஆம் ஆண்டு தான் பதவிக்கு வரும்போது 50 வீதமாக இருந்த மலையகத்தின் கல்வி வளர்ச்சியில் தற்போது 60 வீதத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறும் அருள்சாமி அவர்கள், 2015 ஆம் ஆண்டளவில் 500 மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்புவதே தன்னுடைய இலக்கு என்றும் உறுதியளிக்கின்றார். குறுகிய காலத்தில் இவர் மேற்கொண்ட சுறுசுறுப்பான செயற்பாடுகள் மலையக கல்வித்துறையில் ஓரளவு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகவே தெரிகின்றது.

ஆசிரியர் நியமனங்கள் பெற்றுக்கொடுத்ததில் இருந்து இந்திய அரசுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருவது வரை பல்வேறு விடயங்களில் இவர் தனது கவனத்தைச் செலுத்திவருவதாகவே தெரிகின்றது. இதனால் குறுகிய காலத்தில் இவரது செல்வாக்கும் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சியடைந்துள்ளமை மறுப்பதற்கில்லை.

சுமார் 50,000 வாக்குகளைக் குறிவைத்து களத்தில் நிற்கும் அருள்சாமி, கணிசமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது.

இந்நிலையில், யாருக்கு அமைச்சுப் பதவி வழங்குவது என்பது ஜனாதிபதியின் கைகளிலேயே தங்கியுள்ளது. இவ்வாறானதொரு சூழல் கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டு, முதலமைச்சர் பதவி

ராஜா

யாருக்கு என்ற கேள்வி எழுந்தபோது அதிக ஆசனங்களைப் பெறுபவர்களுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என வெளிப்படையாக கூறிய போதிலும், பல்வேறு விடயங்களில் ஆராய்ந்த ஜனாதிபதி இறுதியாக சிவனேசதுரை சந்திரகாந்தனை முதலமைச்சராக்கியிருந்தார். அவ்வாறான பாரிய அரசியல் சிக்கல் இங்கு காணப்படுகின்ற போதிலும், பொதுத் தேர்தல் எதிர்பார்க்கப்படும் சூழலில் இ.தொ.கா. மனவருத்தம் அடைய ஜனாதிபதி விரும்பமாட்டார் என்ற நிலையில் அதிக வாக்குகளைப் பெறுபருக்கு அமைச்சர் பதவி என்கின்ற அளவுகோலை ஜனாதிபதி பயன்படுத்துவாராயின், முன்னாள் தமிழ் கல்வி அமைச்சருக்கே அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

தலவாக்கலைக்கு மாற்றத்தைக் கொடுக்கப் போகும் கொத்மலைத் திட்டம்!

மேலே கொத்மலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது மலையகக் கட்சிகளின் அனுசரணையுடன் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்களும், கூக்குரல்களும் எழுப்பப்பட்டிருந்தது. கொத்மலைத் திட்டம் அமைக்கப்படுவதினால் தலவாக்கலை நகருக்கு ஆபத்து ஏற்படும் என்றும், அங்கு வாழுகின்ற மக்கள் நிர்க்கதியாக்கப்படுவார்கள் என்றும் போராட்டத்தை முன்னெடுத்தவர்களினால் சொல்லப்பட்டது. இவ்வாறு சிந்தித்தவர்கள் எல்லோரும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சிந்தித்தமையால் இந்தத் திட்டமானது தலவாக்கலைக்கும், அதன் சுற்றுப் புறங்களுக்கும்

ஏற்படுத்தவுள்ள நன்மைகளை அப்பிரதேச மக்களுக்குத் தெரியப்படுத்த தவறியிருந்தனர் என்றே சொல்லவேண்டும்.

உண்மையில் ஒழுங்கான முறையில் மேல்கொத்மலை நீர் மின்சாரத் திட்டமானது மலையக மக்களினால் கையாளப்படுமாயின், அப்பகுதியில் பல்வேறு நன்மை பயக்கும் விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதே யதார்த்தமாகும். இதன் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் காலப் பகுதியில் நூற்றுக்கணக்கான கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன், இத்திட்டம் உருவாகும் பகுதிகளில் வாழ்ந்து வந்த லயன் குடியிருப்பாளர்களுக்கும் புதிய வீடுகள் ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் இக்கட்டுமானப் பணிகளுக்காக ஏராளமானோர் வருகை தருவதால்

தலவாக்கலை நகரத்தின் வியாபார நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதோடு பொருளாதாரமும் மேம்படும். அத்துடன் இப்பிரதேசங்களில் வாழ்கின்ற தகைமை வாய்ந்த கட்டிடத் தொழிலாளர்கள், உள்நாட்டு உத்தியோகத்தர்கள், உணவகப் பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் ஒரு வேலைவாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய சூழலை உருவாக்கும்.

எதிர்காலங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்போது நீண்ட கால அடிப்படையில் தலவாக்கலை நகரமும், அதை அண்டிய பிரதேச மக்களும் பல்வேறு நன்மைகளைப் பெறுவார்களென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நீர்த்தேக்கமானது சர்வதேச தரத்தில் அமைக்கப்படுவதால் இதன் செயற்பாடுகளைக் கண்டறிவதற்காக ஏராளமான உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், நுவரெலியாவுக்கு அடுத்த படியாக தலவாக்கலை நகரம் சுற்றுலாப் பயணிகளின் பிரதான

மையமாக மலையகத்தில் மாற்றமடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். அவ்வாறு ஏற்படும்போது உல்லாசத்துறையின் முதலீட்டாளர்களின் வருகையும் தானாகவே அமைந்துவிடும். இதன் மூலம் தலவாக்கலை நகரம் பிரசித்தம் பெறுவதுடன், அங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கை தரத்திலும் மாற்றம் ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு பல்வேறு நன்மைகள் இருக்கின்ற போதிலும், ஆரம்பத்தில் இத்திட்டத்தை எதிர்த்தவர்கள் கூறிய தைப்போன்று, சில எதிர்விளைவுகளையும் எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதை முற்றுமுழுதாக மறுத்துவிடவும் முடியாது. எனினும் காலத்தின் தேவைக்கேற்ப நன்மை, தீமைகளைச் சீரற் தூக்கிப் பார்த்து பாதிப்புக்களிலிருந்து நிவாரணம் பெறுவதற்குத் தேவையான மாற்று வழிகளை ஆராய்ந்து கண்டு பிடிப்பது புத்திசாலித்தனமானதாக இருக்கும். அதைவிடுத்து ஒரேயடியாக நிராகரிப்போமாயின் கிடைக்கவிருக்கும் வரப்பிரசாதங்களை நிராகரிக்கும் புத்திசாதுரியமற்ற முடிவாகவே அது அமையும்.



ஸ்ரீ

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் தை மாதம் 27ம் நாள் (09.02.2009)

திங்கட்கிழமை பூரணை திதியும், ஆயில்யம் நட்சத்திரமும், மீன லக்கினமும், சித்தயோகமும்

கூடிய காலை 9.35 மணிமுதல் 11.00 மணி வரையுள்ள

சுபமுகூர்த்தத்தில்

திரு. திருமதி. மகாலிங்கம் தம்பதிகளின்
திருநிறைச்செல்வன்
துஷ்யந்
அவர்களுக்கும்

திரு. திருமதி. பன்னீர்செல்வம் தம்பதிகளின்
திருநிறைச்செல்வி
சொரூபாகாந்தி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு கொழும்பு - 13

இல. 146, கதிரேசன் வீதியில் அமைந்துள்ள **"வீரமயிலன் மண்டபத்தில்"** திருமாங்கல்யதாரணம்

செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்

வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும்

விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு

அன்புடன் அழைக்கின்றோம்.

இன்னுகனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி. மகாலிங்கம்
மருதானை வீதி,
ஹந்தனை,
வத்தளை.

திரு. திருமதி. பன்னீர்செல்வம்
மலைந்த மாவத்தை,
ஹாலவெலிய,
நுவரெலிய

(இது வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணியல் மார்பகத் தாள் – ஐவர்
பூவை, திரௌபதி புகழ்க் கதையை
மாணியல் தமிழ்ப்பாட் டால் – நான்
வகுத்திடக் கலைமகள் வாழ்த்துக வே!

– சுப்பிரமணிய பாரதியார்


பாப்பா முரசு

என் உயிர்த் தம்பி

பள்ளி இடைவேளை விட்டதும் மாணவர்கள் குருவிகளாகவெளியே பறந்து வந்தனர். சாலை ஓரம் இருந்த புளிய மரத்தில் நாலைந்து குரங்குகளும், குட்டிகளும் இருந்தன. அவை மரங்களில் தாவிக்கொண்டும், ஊஞ்சலாடிக்கொண்டும் இருந்தன.

அதை மாணவர்கள் பார்த்துக் கத்தி, கைதட்டி ஆரவாரம் செய்தனர். மணி அடிக்கவே, மாணவர்கள் கலைந்து சென்றனர். மணிகண்டன் மட்டும் போகா மல் அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மதியம் சாப்பிடும்போது மாணவர்கள் அருகே வந்தது ஒரு குரங்குக் குட்டி. பலர் பயந்து ஓடி விட்டனர். மணிகண்டன் மட்டும் அந்தக் குரங்குக் குட்டிக்குச் சோறு வைத்தான். முதலில் அது பயந்தாலும், பின்னர் சாப்பிட்டது. அதைக் கண்டு மற்றக் குரங்குகளும் அவனருகே வந்தன. அவற்றுக்கும் அவன் சோறு வைத்தான்.

தொடர்ந்து தினமும் அந்தக் குரங்குகளுக்குச் சாப்பாடு கொண்டு வந்து வைக்கத் தொடங்கினான். இதனால் அவை அவனிடம் நெருங்கிப் பழகின.

குரங்குகள் வகுப்பறைக்குள்ளும் வந்தன. பிள்ளைகளின் புத்தகங்கள், பைகளை எடுத்துக் கொண்டு போய் ஆட்டம் காட்டின. படிப்பைக் கவனிக்காமல் மாணவர்களும் ஜன்னல் வழியாகக் குரங்குகளையே வேடிக்கை பார்த்தனர்.

குரங்குகளின் தொல்லை தாங்காமல் தலைமை ஆசிரியர் அவற்றைப் பிடித்துக்கொண்டு போய் பக்கத்து மலையில் விட பணியாளர்களுக்குச் சொல்லிவிட்டார்.



திங்கட்கிழமை பள்ளிக்கு வந்த மணிகண்டன் குரங்குகள் காணாமல் போனதைக் கண்டு துடித்துப் போனான். அழுது தீர்த்துவிட்டான்.

அக்குரங்குகளுக்கு இராமன், லட்சுமணன், நக்கீரன், மாதவி, அனுமன் என்று பெயர் வைத்து மகிழ்ந்த அவன் அவை இல்லாமல் போனதால் சோகத்தில் ஆழ்ந்தான். அவை பக்கத்து மலையில் இருப்பதைக் கண்டு ஆறுதல் அடைந்தான்.

ஞாயிற்றுக்கிழமை கிரிக்கெட் விளையாடப் போவதாகச் சொல்லி மணிகண்டனும் அவன் ஐந்தாம் வகுப்புத் தோழன் பாலாஜியும் குரங்குகள் இருக்கும் மலைக்குப் புறப்பட்டனர். போகும்போது குரங்குகளுக்குத் தேவையான பழங்கள், தின்பண்டங்களை வாங்கி ஒரு பையில் எடுத்துக்கொண்டனர்.

அருவி மேலுள்ள மரங்களில் இந்தக் குரங்குகள் மற்றக் குரங்குகளோடு இருப்பதைக் கண்டு மணிகண்டன் ஆரவாரம் செய்து கத்தினான். அவனைக் கண்ட அந்தக் குரங்குகள் மரங்களை விட்டு அவனருகே ஓடி வந்தன. அவற்றின் முகத்தில் பிரிவின் வேதனையை அவன் கண்டான்.

நக்கீரன் என்ற பெயர் வைத்த குரங்கு நொண்டி நடப்பதைக் கண்டான். அந்தக் குரங்கு புளியமரத்தில் இருந்த போது ஒரு வழிப்போக்கன் கல்லால் அடித்துக் காலை உடைத்துவிட்டான். மணிகண்டன் அதன் காலுக்கு மருந்து வைத்துக் கட்டுப் போட்டான். கால் குணமாகியும் அதனால் நொண்டித்தான் நடக்க முடிந்தது.

பாப்பா முரசு சிறுகதை

அந்த நக்கீரன் குரங்கிற்குத் தான் கொண்டு வந்த பழங்களைக் கொடுத்து அருகில் அமர வைத்துக் கொண்டான். மற்றக் குரங்குகளுக்கும் மணிகண்டனும், பாலாஜியும் பழங்களையும், தின்பண்டங்களையும் கொடுத்துச் சாப்பிட வைத்தனர்.

அவை சாப்பிடுவதை ஒரு தாயைப் போல மணிகண்டன் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான். மாலை நேரம் நெருங்குவதைக் கண்ட பாலாஜி, ''நேரம் ஆகுது, புறப்படலாம்'' என்றான்.

''எனக்கு என் தம்பிகளையும், தங்கைகளையும் விட்டு வர மனம் வரல'' என்று விக்கினான் மணிகண்டன்.

அப்போது நாகபாம்பு ஒன்று மணிகண்டனைப் பின்பக்கமாகத் தீண்ட வருவதைக் கண்ட நக்கீரன் தாவி வந்து அதைப் பிடித்து அருவியில் எறிந்தது. ஆனால் நக்கீரனைப் பாம்பு கடித்துவிட்டதால் அது துடிதுடித்துச் செத்தது.

''என்னைக் காப்பாத்த உன் உயிரைத் தியாகம் பண்ணிட்டியே? உன் உயிரைப் பலி கொடுக்கவா நான் வந்தேன்?'' என்று கதறி அழுதான் மணிகண்டன்.

பாலாஜி அவனைச் சமாதானப்படுத்தி நக்கீரனைப் பள்ளம் தோண்டி அடக்கம் செய்தான்.

''வாராவாரம் உங்களை வந்து பார்க்கிறேன். தம்பி இறக்கல, என் இதயத்தில வாழுறான்!'' என்று கண்ணீர் மல்க பாலாஜியோடு வீட்டை நோக்கி நடந்தான் மணிகண்டன்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.02.2009

வர்ணம் தீட்டும் போட்டி இல.782

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 780

பரிசுக்குரியவர்: வீ. அருந்தவராசா, புகையிரத வீதி, மல்லாகம்.

பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வன் பத்மநாதன் கோகிலலேஷ், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.
2. செல்வி டா. டினேஷ்கா, விஷ்ணுகோவில் வீதி, காரைதீவு.10.
3. கருணாகரன் உமாசங்கரி, கூழாவடி மட்டக்களப்பு.
4. எம்.எ.எவ். சிப்கா, அல்- அமீன் வீதி, புதிய காத்தான்குடி.06.
5. க.சகீலாபேகம், ஓடாவியார் வீதி, ஏறாவூர்.03.
6. R. டினோராகல், சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.
7. உமர் ஷுக்ரி, வேத்தாவ ரோட், கலகெதர மடிகே.
8. V. பிரவீன், கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை.

ஆத்திசூடி

உய்யார் பெரியார்ப் பிழைத் தொழுகுவார்

பெரியோர்களிடத்துத் தவறாய் நடந்து கொள்பவர்கள் வாழ்வில் உய்வடைய மாட்டார்கள்.

-திருவள்ளுவர்

பாப்பா பாட்டு

தமிழ் பேசு தங்கப் பாப்பா!

மம்மி என்று சொல்லாதே
அம்மா என்றே சொல்லுவோம்!
டாடி என்று சொல்லாதே
அப்பா என்றே சொல்லுவோம்!
அங்கிள் என்று சொல்லாதே
மாமா என்றே சொல்லுவோம்!
ஆன்ட்டி என்று சொல்லாதே
அத்தை என்றே சொல்லுவோம்!
தமிழே நமக்கு உயிர்மூச்சு
தாய்மொழியே நம் பேச்சு!

உணர்வில் கலந்த
உயிர்மொழியாம்
உன்னதம் புரியும்
செம்மொழியாம்!
பிறமொழி கற்பதில் தவறில்லை
அதில்
நம்மொழி போலச் சிறப்பில்லை!
ஓடி ஆடும் குழந்தைகளே
ஓங்கி உரைப்போம்
தமிழ் வாழ்க!

தெரிந்து கொள்ளுங்கள்

வித்தியாசமான யோசனை

ஜப்பானியப் பொம்மைத் தயாரிப்பாளர்களான டகாராவும், டாமியும் 2005ஆம் ஆண்டு ஜனவரியில் சில வித்தியாசமான அவரை விதைகளை உருவாக்கினர். அவை முளைக்கும்போது அவற்றின் மொட்டு இலைகளில் 'அதிர்ஷ்டம் உண்டாகட்டும்', 'உங்களை விரும்புகிறேன்' என்ற வாக்கியங்கள் பிரெஞ்சு, ஜப்பானிய மொழிகளில் வெளிப்பட்டன. அந்த அவரை விதைகளில் லேசர் கதிர்களைக் கொண்டு அந்த வார்த்தைகள் பொறிக்கப்பட்டன. அவ்விதைகள் சிறிய மண் பைகளில் வைத்து விற்கப்பட்டன. அவை முளைத்தபோது வெளிப்பட்ட வாசகங்களைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர்.

கடலுக்கு அடியில்...

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, கடலுக்குள் மூழ்குபவர்கள் 'டைவிங் பெல்' என்ற உபகரணத்தைப் பயன்படுத்திக் கடலுக்கடியில் சுவாசித்தனர். அது கப்பலிலிருந்து கடலுக்குள் இறக்கப்பட்டது. கீழ்ப்பக்கம் திறந்ததாக இருக்கும் இந்த 'டைவிங் பெல்'லுக்கு மேலிலிருந்து இணைக்கப்பட்ட குழாய் மூலம் காற்று வரும். காற்றழுத்தம் காரணமாக அந்த உபகரணத்துக்குள் தண்ணீர் புகாது. 'டைவிங் பெல்'லைத் தொடர்ந்து, கடலுக்குள் நீந்தும் வீரருடன் இணைந்து தண்ணீர் மட்டத்துக்கு மேல் நீண்டிருக்கும் வளைந்த குழாய், கடலடி நீச்சலாடை போன்றவை வந்தன.

ஆனால், கடலடி நீச்சல் உபகரணங்களிலேயே சிறந்ததான ''அக்வாலங்'' 1943ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதைப் பிரெஞ்சுக் கடற்படை அதிகாரியான ஜாக்வஸ் வெஸ் கஸ்டியோ, பொறியியலாளரான எமிலி காக்னன் ஆகியோர் உருவாக்கினர். இந்த அக்வாலங் ஓர் அடக்கமான கடலடி நீச்சல் உபகரணமாகும். இதில், அழுத்தப்பட்ட காற்று அடைக்கப்பட்ட உருளைகள், ''வால்வு''டன் கூடிய வாயில் பொருத்தக்கூடிய பகுதி ஆகியவை அமைந்திருக்கும். இதில் உள்ள வால்வு தானாக உருளையின் காற்று அழுத்தத்தைச் சரி செய்து, நீச்சல் வீரருக்குத் தேவையானபோது காற்றை அளிக்கிறது. எனவே நீச்சல் வீரரின் நுரையீரல் காற்றழுத்தமும், கடல்நீரின் அழுத்தமும் சமமாக இருக்கும்.

முந்தைய சுவாச உபகரணங்களைப் போலில்லாமல் ''அக்வாலங்'' எடை



குறைவானதாகவும், வசதியானதாகவும் இருக்கிறது. எனவே நீச்சல்வீரர் தண்ணீருக்குள் சுதந்திரமாக நீந்த முடியும். முதல் முறையாக 1946ஆம் ஆண்டில் ''அக்வாலங்'' விற்பனை செய்யப்பட்டது. தற்போது கடலுக்குள் நீந்துபவர்களின் ஓர் அங்கமாகவே ''அக்வாலங்'' மாறிவிட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கில் உலகெங்கிலும் விற்பனை ஆகிறது.

இதை அணிந்து பொழுதுபோக்காகக் கடலுக்குள் நீந்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

விடுகதை

1.குனிந்த கிழவிக்கு அவள் கூனெல்லாம் பல்லு. அது என்ன?

2.குத்துக் குருவிக்கு முழம் வால்; இது என்ன?

3.கூடவேதான் வரும்; உதவியே செய்யாது. இது என்ன?

4.கை இல்லாமல் இவன் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான்; இவன் யார்?

5.கைகளில் கரணம் போடுவார் இந்தக் கணக்குப்பிள்ளை; இவர் யார்?

6.கையிலே அடங்கும்; நல்ல பிள்ளை கதை நூறு சொல்லும் செல்லப்பிள்ளை. யார் இந்தப் பிள்ளை?

7.கைகள் இரண்டையும் ஆடவைக்கும் கந்தல் எல்லாம் கூட்டிவைக்கும்; இது என்ன?

8.கையில் தவழும் இது; பையினில் உறங்கும், இது என்ன?

9.கைகளும் கால்களும் இல்லாதவன்; முகட்டையும் தாண்டிச் சென்றிடுவான். இவன் யார்?

10.கையில் இருந்தால் தடி; பிழிந்து சுவைத்தால் ருசி; இது என்ன?

விடுகதை விடைகள்

1. கருக்கரிவாள்.
2. அகப்பை
3. நிழல்
4. படகு
5. படி
6. புத்தகம்
7. ஊசி
8. பணம்
9. புலக
10. கருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

மாதிரி வினாத்தாள் -II (1 மணி 15 நிமிடம்)

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

பின்வரும் பகுதியை வாசிக்கவும்.

மரமொன்றை நாட்டுவீராயின்
நாடு அழகு பெறும் மண் வளமுறும்
மரங்களின் நிழல் குளிர்மை தரும்
மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்
இனிய் பழங்கள் எம் பசி தீர்க்கும்.

01. மேலே கூறப்பட்டதற்கமைய மரங்களினால் நாம் பெறும் இரு நன்மைகளை எழுதுக.
i. .....
ii. .....

02. பின்வரும் சொற்களின் எதிர்க் கருத்துடைய சொற்களை மேலே தரப்பட்டுள்ள பகுதியிலிருந்து பெற்று எழுதவும்.
I. அவலட்சணம் ..... II. வெயில் .....
III. வெப்பம் ..... IV. காய்கள் .....

03. ''பழங்கள் எம் பசி தீர்க்கும்" என்பதன் கருத்தை உமது சொற்களில் எழுதவும்.
.....
.....
.....

04. அழகிற்காக வீட்டினுள் வைக்கப்படும் தாவரங்கள் இரவு வேளைகளில் ஏன் அகற்றப்படுகின்றன?
.....
.....

05. பாடசாலை வளவு ஒன்றிலே 10 மாங்கன்றுகள், 8 கொய்யாக் கன்றுகள், 17 வாழைமரங்கள், 7 தென்னம் பிள்ளைகள் என்பன உள்ளன.

இத்தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் 500 கிராம் பசளை இடப்பட்டால்,

(i) தாவரங்கள் அனைத்துக்குமாக எவ்வளவு பசளை தேவைப்படும்?
..... கிலோ கிராம்

(ii) 1 கிலோகிராம் பசளையின் விலை ரூபா 12ஆயின், பசளைக்குச் செலவிடப்பட்ட தொகை யாது?
ரூபா .....

06. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சமமான தமிழ்ச் சொல்லை எழுதுக.
(i) Tree ..... (ii) Yellow .....
(iii) Flower ..... (iv) Mangoes .....
(v) Fruit .....

அருந்ததி, சுகவீனமுற்றிருந்த தனது பேரனாருக்கு 'சூப்' தயாரிப்பதற்குப் பின்வரும் பொருட்களைப் பயன்படுத்தினாள்.

இலையுடன் கூடிய வல்லாரைத் தண்டு	-5	சோறு - மேசைக்கரண்டி	-1
இலையுடன் கூடிய பொன்னாங்கண்ணித் தண்டு	-5	பருப்பு - மேசைக் கரண்டி	-2
கரட்	-2	உருளைக்கிழங்கு	-1
போஞ்சி	-5	மிளகு	-5
தக்காளிப்பழம்	-1	எலுமிச்சம்பழச்சாறு - தேக்கரண்டி	-1
அவித்த இறைச்சித் துண்டுகள் சில.		தண்ணீர் கப்	-6
		சிறிதளவு உப்பு	

07. ஒரு கப் 200 மில்லிலீற்றர் நீரைக் கொள்ளுமாயின் சூப் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நீரின் அளவை லீற்றர் - மில்லிலீற்றரில் தருக.
லீற்றர் ..... மில்லி லீற்றர் .....

''நாளாந்தம் எவ்வளவுக்கெவ்வளவு தேநீர் பருகுகின்றீரோ அவ்வளவுக்கவ்வளவு உமது தேகம் ஆரோக்கியம் பெறும்" என்பது தேயிலை பற்றி எழுதப்பட்ட பிரசித்தமான வாசகமொன்றின் ஒரு பகுதியாகும்.

08. இலங்கையில் தேயிலை வளரும் பிரதேசங்களில் அமைந்த நான்கு நகரங்களை எழுதுக?
(i)..... (ii).....
(iii)..... (iv).....

09. தேயிலை வளரும் பிரதேசங்களில் தமிழர் தமது சமய வழிபாட்டுக்காகக் கூடும் கோவில்களில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் இரண்டை எழுதுக.
(i)..... (ii).....

10. இலங்கைக்குத் தேயிலையை அறிமுகப்படுத்திய நாட்டவர் யார்? .....
11. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது? .....
12. உலகில் தேயிலையைப் பயிரிடும் வேறு மூன்று நாடுகளின் பெயர்களைத் தருக.
(i)..... (ii).....
(iii).....

13. இலங்கையிலிருந்து தேயிலை வாங்கும் ஒரு நாட்டின் பெயர் தருக்? .....

14. நீங்கள் பருகும் தேநீருக்கு அதிக அளவு சீனியைச் சேர்ப்பதனால் உங்களது பற்களுக்கு ஏற்படக்கூடிய மூன்று சேதங்களை எழுதுக.
(i)..... (ii)..... (iii).....

15. மண் அரிப்பைத் தடுப்பதற்குத் தேயிலைப் பெருந்தோட்டங்களில் கையாளப்படும் இரு உபாயங்களை எழுதுக.
(i)..... (ii).....

16. ''நான் ஒரு கப் தேநீர் பருகினேன்" இதனைப் பன்மை வாக்கியமாக எழுதுக.
.....

17. (i) 5 கிலோகிராம் தேயிலையிலிருந்து ஒவ்வொன்றும் 100 கிராம்களைக் கொண்டதான எத்தனை பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?
(ii) 1 கிலோகிராம் தேயிலையின் விலை ரூபா 120 ஆயின் 100 கிராம் தேயிலையின் விலை யாது?

18. அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

(is, the, Two, Yes, are, you)

(i) Would ..... like a cup of tea? (ii) ..... Please
(iii)How much ..... a cup of tea? (iv).....rupees

ஓரிரு ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் கிராமம் அதிர்ஷ்டம் குறைந்த காலத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மழை உரிய காலத்திற் பெய்யவில்லை. வரட்சி மெல்ல மெல்ல மோசமான நிலையை அடைந்தது. கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றியது. நாட்கள் போக, கிராம வாசிகளுக்குக் குடிப்பதற்குத் தானும் ஒரு துளி நீரும் கிடைக்கவில்லை. காட்டு மரம் செடி கொடிகள் யாவும் கருகிப்போயின. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச் சென்றன. இதனால் மனிதர் தமது உணவையும் பெற்றுக் கொள்ள முடியாது தவித்தனர். மூத்த கிராம வாசிகள் தமது சொந்த இடங்களை விட்டுத் தாமும் போக நேரிடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காலங்கழித்தனர்.

மேலேயுள்ள பந்தியில் பிழையாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள நான்கு சொற்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து அச்சொற்களின் சரியான வடிவத்தைப் புள்ளிக் கோட்டின் கீழ் எழுதுக.

19. (i)..... (ii).....
(iii)..... (iv).....

20. இப் பந்தியில் இரு அடுக்குத் தொடர்கள் உள்ளன. அவற்றைத் தருக.
(i)..... (ii).....

21. இப்பந்தியிலிருந்து இரு பெயர்ச் சொற்களை வர்ணிக்கும் அடைமொழிகளை எழுதுக.
(i)..... (ii).....

22. பந்தியிற் காணப்படும் பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொற்கள் தருக.
(i) ஆண்டு ..... (ii) காடு .....
(iii) நாள் ..... (iv) உணவு .....

23. பின்வரும் தொடர்களின் கருத்தைத் தரும் தனிச் சொல் ஒவ்வொன்றை எழுதுக.
(i) உணவு கிடைத்தல் மிக அரிதாயுள்ள காலம் .....
(ii) மழை பெய்யாத காலம் .....

24. **நாவலர் வித்தியாலயத்தில் ஆண்டு 5 இல் கல்வி பயிலும் மாணவனான அமலன் சேகரித்த தரவுகள் (விபரங்கள்) சில பின்வருமாறு :-**

நேரம் மணித்தியாலம்	வெப்பநிலை பாகை சென்ரி கிறேட்
0800	30
1200	34
1400	31

(i) அதி உயர் வெப்ப நிலைக்கும் மிகக் குறைந்த வெப்ப நிலைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
.....

(ii) மேற்குறித்த வெப்பநிலைகளின் இடை (சராசரி) யாது? .....

25. கீழே தரப்பட்டுள்ள மூன்று வாக்கியங்களிலும் கூறப்பட்டுள்ள கருத்தைத் தனியொரு வாக்கியத்தில் எழுதுக.
உரிய காலத்தில் மழை பெய்யவில்லை.
நாளுக்கு நாள் வரட்சி மிகுந்து வந்தது.
கிராமத்தினூடாகப் பாய்ந்த ஆறும் வற்றியது.
.....
.....

26. உதாரணத்தை அவதானித்து வெற்றிடங்களை நிரப்புக.
உதாரணம் Tree மரம் Trees மரங்கள்
(i) ..... கண் ..... கண்கள்
(ii) ..... ஆண்டு . ..... ஆண்டுகள்.

27. ''காட்டில் வளரும் தாவரங்கள் நாம்" எனும் தலைப்பில் ஏறத்தாழ ஏழு வாக்கியங்களைக் கொண்ட ஒரு பந்தி எழுதுக.
.....
.....

28. இலங்கையில் புகழ்பெற்ற ஓவியங்கள் காணப்படும் இடமொன்றைக் குறிப்பிடுக.
.....

29. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் காணப்படும் மாவட்டம் எது?
.....

30. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?
.....

(வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II க்கான விடைகள் அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னால் நிருபித்துகாட்டும் மலையாள மாந்திரிக சக்தியால்!

(1)தொழில் வெற்றியின்மை, (2)வியாபாரத்தில் விருத்தியின்மை, (3)கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு (4)தாம்பத்தியவாழ்க்கையிலுள்ள பிரச்சனைகளுக்கு (5)திருமணம் தடைப்பட்டுக்கொண்டு இருத்தல், ஸ்த்ரீ, புருஷ வசியம் (6)குழந்தை பாக்கியமின்மை, (7)வெளிநாடு செல்லத்தடை (8)மனக்குழப்பம், (9)பணமிருந்தும் மன நிம்மதியின்மை, (10)கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை, (11)படிப்பு பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை, (12)முயற்சியிருந்தும் முன்னேற்றத்தில் தடை, (13)சூளியக்கோளாறு தீயசெய்வினைகள், (14)அதிஷ்ட வாழ்வு சொத்து சேர, இன்னும் உங்கள் சகல நிறைகுறைகளுக்கும் என்னை சந்திக்கலாம், (15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனனஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, ஜாதக கணிப்புக்கும் மட்டும் கட்டணம் ரூபா 2700/= தபால் கட்டணம் 350/=

வெளிநாட்டவர்களுக்கு விஷேட சலுகை உண்டு

அருள் ஞானசித்தர் தேசபந்து, கௌரவ பேராசிரியர், ஜோதிட கலாநிதி P.K.SAMY(J.D.G.A.N) JP ஐயா
ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13
011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்,
இல 33,கண்டி வீதி,நுவரெலியா 052 2222508.

குறிப்பாக உண்மையை கண்டறிய வாருங்கள். தினந்தோறும் மாதந்தோறும் ஸ்ரீ துர்க்கையின் உச்சாட பீடத்தில் நடக்கும் அக்கினி குண்டல யாக பூஜையில் கலந்து கொள்பவர்களுக்கு தெய்வீக சித்தம் பெறுவது திண்ணம். அன்று அண்ணதானமும் வழங்கப்படும்

காதோடு சொல்லுகிறோம்

* **ஒர்மை** ஆட்டம் போட்டு வந்த சுஜா, சொல்லச் சொல்ல இனிக்கும் படத்தில் ஹீரோயின் ஆகிவிட்டார். பிரமோஷனுக்கு ஏற்ற மாதிரி கிசுகிசு வேண்டாமா? அதற்காகவே அப்படத்தின் நாயகன் நவ்தீப்புடன் சுற்ற ஆரம்பித்திருக்கிறாராம்.

* **தனது** கம்பெனிகளையெல்லாம் அனுஷ்கா கையகப்படுத்தி வருவதை அவுஸ்திரேலியாவில் இருந்தே கேள்விப்படுகிறாராம் த்ரிஷா. பெருமூச்சும், பெருங் கோபமுமாக சென்னைக்கு திரும்பத் திட்டமிட்டிருக்கிறார். வந்ததும் வாய்ப்புக் கொடுத்த ஹீரோக்களுக்கு இருக்கு கச்சேரி!

* **மூன்றெழுத்து** காதல் நடிகர், ஒரே ஒரு படத்தில் மல்லிகை நடிகையுடன் நடித்தார். அன்றிலிருந்து அந்த வாசனைதான் பிடிக்கிறதாம் இவருக்கு. கையில் இருக்கிற ஒன்றிரண்டு படங்களை முடித்துவிட்டு கல்யாணம் கட்டிக் கொள்ளப் பிரியப்படுகிறார் நடிகை. அவரைப் போகவிடாமல் தன்னுடன் ஒரு படத்தில் நடித்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளும்படி கேட்கிறாராம். மல்லிகைக்கு சம்மதம். ஆனால், மூன்றெழுத்து நடிகரின் படங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள்தான் யோசிக்கிறதாம்.

புதிய கூட்டு

விஜயின் 49 ஆவது படமான பாபுசிவன் வேட்டைக்காரனை ஐம்பதாவது படம் இயக்குகிறார். ராஜாவுக்கு. விஜயின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரன் தயாரிப்பு. 49 ஆவது படமே இன்னும் தொடங்காத நிலையில் 51 ஆவது படத்துக்கு கதை கேட்டிருக்கிறார் இளைய தளபதி. லிங்குசாமி. பீமா, பையா படங்கள் ஏற்படுத்திய மெகா இடைவெளியை வீணாக்காமல் புதிய ஸ்கிரிப்டுகள் பல உருவாக்கியிருக்கிறார் லிங்கு. அதில் ஒன்றைத்தான் விஜயிடம் கூறியிருக்கிறார். கதை விஜய்க்குப் பிடித்துப் போனதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆக்கர் - வார்னர் பிரதர்ஸ் நிறுவனங்கள் லிங்குசாமியிடமும் கால்ஷீட் கேட்டுள்ளன. லிங்குசாமியும் தாத் தயார். அனேகமாக அது விஜய் நடிக்கும் படமாக இருக்கலாம்.

ஜீவா - பூனம் பஜ்வா முகப்பில்!

அழைப்புகள். ஷாருக்கானிலிருந்து, சல்மான்கான்வரை ரத்தின கம்பள வரவேற்பு கொடுக்கிறார்கள். ஆனால், இவர்கள் இருவருக்குமே உடனே முருகதாஸ் படத்தில் நடிக்க இயலாதபடி முந்தைய கமிட்மென்டுகள்!

இந்த இடைவெளியில் ஒரு தமிழ் படத்தை இயக்கிவிடலாம் என்று யோசித்த முருகதாஸ், அஜீத்திடம் கதை சொல்லியிருக்கிறாராம். இதில் நடிக்க அஜீத் சம்மதித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் இருவரும் இணைகிற படம் அஜீத்தின் 50 ஆவது படமாக இருக்க வேண்டும் என்பதும் முருகதாஸின் விருப்பம். தினா படத்தின் மூலம் அஜீத்திற்கு "தல" என்கிற அந்தஸ்தை வழங்கிய முருகதாஸ் கேட்டால் முடியாதென்றா சொல்லப் போகிறார் "தல"?

"**அஜீத்தின்** 50 ஆவது படத்தை இயக்க வெங்கட் பிரபு அட்வான்ஸே வாங்கிவிட்டார் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால், "காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் தள்ளிட்டு போன" கதையாக, அஜீத்தின் 50 ஆவது படத்தை இயக்க முருகதாஸ் வந்துவிட்டார்! காத்திருந்த வெங்கட் பிரபு கலகலத்து போயிருக்கிறாராம்.

இந்தி கஜினியும் பெரும் ஹிட் ஆன சந்தோஷத்திலிருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ். இதையடுத்து அவருக்கு பாலிவுட்டிலிருந்தே பலமான

புதிய தளத்தில் காதல்!

காதலன் – காதலிக்கு நடுவில் ஏற்படும் ஈகோ பிரச்சினைதான் படத்தின் மையம். ராஜேஷ் எம் இயக்கியிருக்கும் இந்தப்படத்தில் ஜீவா, அனுயா நாயகன், நாயகியாக நடித்துள்ளனர். சந்தானத்துக்குப் படம் முழுவதும் வருவது போன்ற கதாபாத்திரம். படத்தில் சந்தானத்தின் பெயர் விவேக் என்பது கூடுதல் சுவாரஸியம். காதலி தனது காதலை பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், சிவா மனசுல சக்தி படத்தில் அனுயா தனது காதலை காதலன் ஜீவாவிடம் வெளிப்படுத்தும் இடம், அரசு அங்கீகாரம் பெற்ற டாஸ்மாக் பார். இந்திய சினிமா எதிலும் இதுவரை இடம்பெறாத காட்சி என்று இயக்குனர் கூறுவதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

யுவன்ஷங்கர்ராஜா இசையில் அனைத்துப் பாடல்களையும் நா.முத்துக்குமார் எழுதியுள்ளார். இதில், எம்.ஜி.ஆரும் இல்லீங்க.. நம்பியாரும் இல்லீங்க.. என்ற பாட லுக்கு ஜீவாவும், சந்தானமும் பட்டையை கிளப்பியிருக்கின்றனர்.

படத்துக்கு சக்தி சரவணன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். தயரிப்பு பா. சீனிவாசன். ஒரு அடங்காபிடாரியைத்தான் காதலிச்சேன் என்ற பாடலை மலேசியாவில் எடுத்துள்ளனர். படத்தில் ஒரு காட் சியில் க ்ல ா வு ம் நடித்துள்ளார்.

அ.ஆ.இ.ஈ. திரை விமர்சனம்

ஊரில் பெரிய அந்தஸ்தில் இருக்கும் பிரபு பட்டணத்தில் படித்த தனது மகள் மோனிகாவுக்கு சம அந்தஸ்தில் உள்ள ஹனிபாவின் மகன் அரவிந்தை திருமணம் செய்ய தீர்மானிக்கிறார். இரு குடும்பமும் தட்டு மாற்றிக் கொள்கிறது. இந்நிலையில் அரவிந்தை சந்திக்கும் மோனிகா, பட்டணத்தில் சந்தீப்பிடம் தான் ஏமாந்த கதையைக் கூறி, களங்கப்பட்ட நான் உங்கள் மனைவியாக முடியாது என்கிறார். நிச்சயித்த பெண்ணின் காதலனைத் தேடி பட்டணம் செல்லும் அரவிந்த் கையோடு நவ்தீப்பையும் ஊருக்கு அழைத்து வருகிறார். ஒருபுறம் மோனிகா - அரவிந்த் கல்யாண ஏற்பாடுகள் நடக்க, ஊருக்கு வெளியே மோனிகா - நவ்தீப் ஜோடி காதல் செய்கிறது. கூடவே அரவிந்த் - சரண்யா மோகன் (பிரபுவின் தம்பி மகள்) ஜோடி. இந்த காதல் குழப்பம் எப்படி சுபத்தில் முடிகிறது என்பது கதை.

பிரபுவுக்கு ஆயுர்வேத சிகிச்சை அளிப்பதுதான் வேலை. மகளை பற்றி அவர் பேசும் போதெல்லாம் வெள்ளையும் சொள்ளையுமாக பத்து பேர் பின்னால் நின்று ஆமாம் சாமி போடுகிறார்கள். ஹனிபாவைச் சுற்றி மொட்டையும் பட்டையுமாக பத்து பேர். நண்பர்களாம். இருவர் வீட்டு பெண்களும் தூங்கி எழும்போதும் கழுத்து நெக்லஸும், காஞ்சிபுரம் பட்டுமாக காட்சியளிக்கிறார்கள். தமிழ்நாட்டில் எந்தக் கிராமம் இப்படி இருக்கிறது?

நான்கு இளசுகளும் அடிக்கும் லூட்டிதான் படத்தின் ஒரே ஆறுதல். சரண்யா மோகன் தனது அப்பாவி நடிப்பை இதிலும் ரிப்பீட் செய்திருக்கிறார். இப்படியே போனால் விரைவில் ரிட்டையர்ட் ஆக வேண்டியதுதான். கொடுத்த வேலையை கச்சிதமாக செய்திருக்கும் இன்னொருவர் மனோரமா. நவ்தீப், அரவிந்த், மோனிகா நடிப்பில் முதிர்ச்சி தெரிகிறது. விஜய் ஆண்டனியின் இசையில் அஆஇஈ சொல்லித் தருதே வானம் பாடல் மறுபடியும் கேட்கத் தூண்டும் ரகம். அருள்தாஸின் ஒளிப்பதிவு பரவாயில்லை. இயக்குநர் சபாபதி தட்சணாமூர்த்தி ஒரே நேரத்தில் மூன்று படங்கள் இயக்குகிறாராம். அஆஇஈ பார்த்தால் அப்படி தெரியவில்லை. குறைந்தது முந்நூறு படங்களாவது இருக்கும்போல் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.slt.lk

சுதந்திர உணர்வினை இதயத்தில் விதைத்து
சமாதானம் சமத்துவம் உயர்வாய் மதித்து
தாய் நாட்டின் அரவணைப்பில் ஒன்றிணைந்து
உண்மைச் சமாதானத்தின் முன்னிலையில்

அபிமான உணர்வுடன் 61ஆவது
சுதந்திர தினத்தைக் கொண்டாடுவோம்

Sri Lanka Telecom Mobitel
We Care. Always.
SLT RAINBOW PAGES
Sri Lanka Telecom MANPOWER SOLUTIONS
SLT VisionCom
SKYnetwork
Sri Lanka Telecom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிய புத்திரன்!

முகம் வெட்கம்
சுருட்டி இருட்டுக்குள்
ஒளித்து வைத்தது.
படுக்கைக்கு
காய்ச்சல் வந்து
போர்வைக்குள்
குறண்டிக் கொண்டது.

நிலவு விடியலை எதிர்த்து
வில் யுத்தம் செய்தது.
குச்சி ஐஸ் கட்டிகளாய்
கைகள் இருதயச் சூட்டில்
எங்கெங்கோ
ஊர்வலம் போனது.

கண்கள் நான்கும்
நித்திரைச் சாயலில்
நாடகமாடியது.
என் கால் விரல்கள்
அவள் எதிர்காலத்துக்கான
ஆரூடம் சொன்ன போது
நான் யோசிய புத்திரனாய்
சோதனை செய்தேன்.

என்னுடன்
அத்தனை நெருக்கமானவள் தான்
என்னவோ அவளை
நெருப்புக்கும் பிடித்தது.
என்னை விவாகரத்துச்
செய்து விட்டு
நெருப்புக்குக் கழுத்தை
நீட்டினாள்.

நான் அழவேயில்லை
அவள் இறந்த பின்னும்
காயங்கள் எரியுமோ...?
என்பதால்
நான் அழவேயில்லை.

-செ.மோகன்ராஜ், நெடுந்தீவு-12.

குருட்டு வெளிச்சம்!

கனவுகள் எனக்கு - முன்னே
இறந்து போனதால்
மனசு வெள்ளைப் புடைவை
கட்டி இருக்கிறது....?.....

சலனமில்லாமல்
சிறகடித்த என்னிடம் - யார்
சஞ்சலத்தை
தத்துக் கொடுத்தீர்கள்...?...

பொய்ச் சூலுக்குள் தான்
இதுவரை - என்
இலட்சியக் குழந்தை
கர்ப்பம் தரித்திருந்திருக்கிறது...?....

எலும்புகளாய் எஞ்சி இருந்த
என் எதிர்காலம் - இப்போது
சாம்பலாகி
காற்றோடு போகிறது...?...

விரக்தியின் தாவணியால்
என் தேகம் மூடியபிறகும்
அதன் பீத்தல்கள் - என்னைத்
திரும்பிப் பார்க்க வைக்கிறது...?...

நாளுக்கு நாள் - நாகரிக
நட்சத்திரங்கள் முளைத்து விடுகின்றன -
ஆனால்
என் நிழல் நிலவோடு - துணை
போகக் கூட யாருமே இல்லையே...?...

-வி.முகிலன்,
நெடுந்தீவு- 13.

மயக்குதடி!

உன்
மடி மீது தலை வைத்து
நான் படுத்தால்
என்
மனக்கவலையெல்லாம்
மௌனித்துப் போகுமடி!

உன்
மலர்க் கரத்தால்
என்
சிகையை வருடும்போது
என்
உச்சிமுதல்
உள்ளங்கால் வரையும்
மின்சாரம்
பாய்வது போல்
உன்னினைப்பு
என்னை வந்து மயக்குதடி!

உன்
புன்னகைக்குள்
என்னாவி சரணாகதி!
என்
நினைப்பில்
உன்னைவிட
எவருமில்லையடி!

உன்
கண்ணசைப்பில்
நான்
ஆயுட் கைதியடி
கண்மணியே
காலமெல்லாம்
நான்
உனக்கு அடிமையடி!

-கவிக்குயிலன், சேனையூர் - 06.

எதிர்பார்ப்பு!

மலர்ந்த ஆண்டு; நமக்கு
மகிழ்ச்சி தருமா? இனியும்
புலரும் நல்ல பொழுது (ம்)
புதிய ஆண்டில் வருமா?

இறந்த காலம்; எமக்கு
இன்னல் தந்து போனது!
பிறந்த புதிய ஆண்டு;
பிரயோ சனத்தைத் தருமா?

போர் சூழ்ந்த இந்தப்;
பொல்லா காலத்தை; நன்றாய்
சீர் செய்யுமா? அன்றி
சீரழிவு களையே தருமா?

இன்னல் தன்னைத் தீர்க்குமா
இந்தப் புதிய ஆண்டு?
என்ன தான் செய்யுமோ
எதிர் பார்த்தி ருப்போமே!

போனது எல்லாம் போகட்டும்
பொல்லாமை அதோடு சாகட்டும்!
ஆனது ஆனதுதான்: இனியும்
ஆவது நல்லதாய் ஆகட்டும்!

நல்ல மாற்றம் வருவதை
நாமும் எதிர் பார்த்தோம்!
இல்லையே மாற்றம்; அதனை
இந்த ஆண்டு தரட்டும்!

-வி.எம்.அன்ஸார், கீண்ணியா - 02.

சிகிச்சை



பாலிவுட் நடிகர் ஷாருக்கானுக்குத் தோள்பட்டையில் எலும்புத் தேய்வு ஏற்பட்டுள்ளதால் ஆபரேஷன் செய்யுமாறு டாக்டர்கள் பரிந்துரைத்துள்ளனர். நடிகர் ஷாருக்கான் தற்போது ''துல்ஹா மில் கயா'' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் சூட்டிங்கில் பங்கேற்ற ஷாருக்கானுக்குத் தோள்பட்டையில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகச் சென்றார். அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தோள்பட்டை எலும்பு தேய்ந்து இருப்பதாகவும், உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். இதையடுத்து எப்போது ஆபரேஷன் செய்து கொள்வது என்பது குறித்து ஷாருக் யோசித்து வருகிறார். இதற்கிடையில் தான் தயாரித்து வரும் ''பில்லு பார்பர்'' (தமிழில் வெளியான குசேலன் படத்தின் இந்தி ரீமேக்) படப்பணிகளை முடித்த பின்னர் ஷாருக் ஆபரேஷன் செய்துகொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே இவர் முதுகு வலி மற்றும் மூட்டு வலிக்காக ஆபரேஷன் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

வாய்ப்பு

அமெரிக்க அதிபர் ஓபாமாவுடன் விருந்து சாப்பிட பாலிவுட் நடிகர் சஞ்சய்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அநேகமாக பெப்ரவரி முதல் வாரத்தில் அதிபர் ஓபாமாவை சஞ்சய்தத் சந்திப்பார் என்று கூறப்படுகிறது. சத்துக் குறைவான உணவுகளின் பாதிப்புகளைப் பிரசாரம் செய்யும் ஐ.நா. சபையின் நல்லெண்ணத் தூதுவர் பொறுப்பில் சஞ்சய்தத் இருப்பதால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதாம். சஞ்சய்தத்துடன், பில்க் கிளின்டன், ஹிலாரி கிளின்டன் ஆகியோரும் விருந்தில் கலந்து கொள்ளவிருக்கிறார்களாம். இந்திய அரசியலில் சமீபத்தில் கால் பதித்துள்ள சஞ்சய்கு, அமெரிக்க அதிபருடன் விருந்து சாப்பிட அழைப்பு வந்திருப்பதால் பாலிவுட் திரையுலகம் மட்டுமல்ல... இந்திய அரசியல் புள்ளிகளையும் வியப்புக்குள்ளாக்கியிருக்கிறது.

ஆர்வம்

பாலிவுட் நடிகை சுஷ்மிதா சென், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். பாகிஸ்தான் திரைப்பட நிறுவனம் தயாரிப்பில் பெனாசிர் பூட்டோ என்ற திரைப்படம் உருவாகி வருகிறது. இந்த படத்தில் பெனாசிர் கதாபாத்திரத்தில் நடிக்குமாறு சுஷ்மிதாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பை ஆர்வமுடன் ஏற்றுக்கொண்ட சுஷ்மிதா, பூட்டோ கேரக்டரில் நடிக்கும் நாளை எதிர்பார்த்து காத்திருப்பதாக கூறினார். ஆங்கிலம், உருது மொழிகளில் எடுக்கப்படவுள்ள இப் படத்தின் சூட்டிங், பாகிஸ்தான், பிரிட்டன், துபாய், அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற இருக்கிறது என்று படத்தினை தயாரிக்கும் வொக்ஸ் வெர்சன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி !



சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

மைசூருக்குப் போய்விடுவோம். வேகமாகப் படப்பிடிப்பை நடத்தி முடிக்கலாம்" என்றார். ரஜினி சம்மதித்தார்.

படத்துக்கு திரைக்கதை, வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார். இளையராஜா இசை அமைத்தார்.

கௌதமி அறிமுகம்

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக கௌதமி நடித்தார். தமிழில் அவருக்கு இதுதான் முதல் படம்.

பிரபுவுக்கு ஜோடி சீதா. மற்றும் மனோரமா, ''சோ'', ரவிச்சந்திரன், ராதாரவி, வினுசக்ரவர்த்தி ஆகியோரும் நடித்தனர்.

பிரபு, ஏற்கனவே ரஜினியின் விசிறி. மிகுந்த உற்சாகத்துடன் ரஜினியுடன் நடித்தார்.

பிரபு மீது ரஜினிக்கு மிகுந்த அன்பு. தான் செய்யவேண்டிய ஒரு சண்டைக்காட்சியைப் பிரபுவுக்குச் கொடுக்கும்படி சொன்னார். பிரபு சண்டை செய்வதைப் பார்த்து, ''ஆகா, பிரமாதம்!'' என்று உற்சாகப்படுத்தினார்.

23 நாளில் முடிந்தது

ரஜினி 25 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருந்தாலும், அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் 23 நாட்களிலேயே எடுத்து முடிக்கப்பட்டன. ''நீங்கள் சென்னைக்குத் திரும்பலாம்'' என்று ரஜினியிடம் முத்துராமன் கூற, ''இல்லை. இன்னும் 2 நாட்கள் உங்களுடனேயே தங்கியிருக்கிறேன்'' என்று ரஜினி சொல்லிவிட்டார்.

''அதன்படியே படப்பிடிப்புக் குழுவினருடன் 2 நாள் தங்கி, அவர்களுடன் சாப்பிட்டு, எல்லோருடனும் அன்புடன் பேசி மகிழ்வித்தார், ரஜினி. படப்பிடிப்பின்போது, டிராலியைக் கூடத் தள்ளி அனைவரையும் உற்சாகப்படுத்தினார்'' என்று முத்துராமன் கூறினார்.

13-4-1988-இல் வெளிவந்த ''குரு சிஷ்ய''னில், அருமையான நகைச்சுவை காட்சிகள் நிறைந்திருந்தன. ரஜினி - பிரபு கூட்டணி, ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

படம், 125 நாட்கள் ஓடி வெற்றி வாகை சூடியது.

தர்மத்தின் தலைவன்'' படத்தில் குஷ்பு அறிமுகம்

ரஜினி - பிரபு இணைந்து நடித்த ''தர்மத்தின் தலைவன்'' படத்தில் குஷ்பு அறிமுகம்

சாண்டோ சின்னப்ப தேவர் மறைவுக்குப்பின், அவருடைய ''தேவர் பிலிம்ஸ்'', ''தண்டாயுதபாணி பிலிம்ஸ்'' ஆகியவை பல சோதனைகளைச் சந்திக்க நேரிட்டது. தேவரின் நிறுவனத்தை மீண்டும் தூக்கி நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், அவர்களுக்காக ஒரு படம் பண்ணிக்கொடுக்க முடிவு எடுத்தார், ரஜினி.

அதன்படி உருவான படம்தான் ''தர்மத்தின் தலைவன்''எஸ்.பி.முத்துராமன்

படத்தைக் குறித்த காலத்தில் முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், டைரக்ஷன் பொறுப்பைத் தன் ஆஸ்தான டைரக்டர் எஸ். பி.முத்துராமனிடம் ஒப்படைத்தார்.

படத்தை ''தண்டாயுதபாணி பிலிம்ஸ்'' பேனரில் தேவரின் மகன் சி.தண்டாயுதபாணி தயாரித்தார்.

''கஷ்மே வர்தே'' என்ற இந்திப் படத்தின் கதையைத் தழுவி, திரைக்கதை -வசனம் எழுதினார், பஞ்சு அருணாசலம்.

குஷ்பு அறிமுகம்

இந்தப் படத்தில் ரஜினியும், பிரபுவும் இணைந்து நடித்தனர்.

ரஜினிக்கு ஜோடி சுஹாசினி. பிரபுவுக்கு ஜோடி குஷ்பு.

இந்தப் படத்தின் மூலம்தான், தமிழ்ப்பட உலகில் குஷ்பு அடியெடுத்து வைத்தார்.

''குஷ்புவைத் தேர்வு செய்தது எப்படி?'' என்று கேட்டதற்கு டைரக்டர் எஸ். பி.முத்துராமன் கூறியதாவது:-

''பிரபுவுக்கு ஜோடியாக ஒரு புதுமுகத்தை அறிமுகம் செய்யத் தீர்மானித்தோம்.

அந்தச் சமயத்தில், குஷ்பு தெலுங்குப் படத்தில் நடித்துக்கொண்டிருந்தார். அவரை வரவழைத்துப் பார்த்தோம். எங்கள் கதாபாத்திரத்துக்குப் பொருத்தமாக இருப்பார் என்று தீர்மானித்து, பிரபுவுடன் இணைந்து நடிக்க ஒப்பந்தம் செய்தோம்.

தமிழ் கற்றார்

அந்தச் சமயத்தில், குஷ்புவுக்குத் தமிழ் ஒரு வார்த்தைகூடத் தெரியாது. ஆனால், தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருந்தது.

ஏவி.எம். படங்களில் நடிக்க வருகிறவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்கும் எஸ்.எல்.நாராயணனைக் கொண்டு, குஷ்புவுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தோம். தமிழ் வார்த்தைகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதி வைத்துக்கொண்டு பேசிப் பழகினார்.'' இவ்வாறு முத்துராமன் கூறினார்.

(பயணிக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'லிப்ஸ்டிக்' போடும்போது கவனிக்க வேண்டியவை

பார்ப்பவர்களைச் ''சட்''டென்று கவரும் உதடுகளுக்குத் தேவை லிப்ஸ்டிக். உங்கள் உடை, விருப்பம், அழகு ஆகியவற்றிற்கு ஏற்ப நிறத்தைப் பயன்படுத்தச் சிறந்த இடம் உதடுகள்தான்! இளஞ்சிவப்பு முதல் பிரவுண் வரை, வைலெட் முதல் கறுப்பு வரை எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்!

லிப்ஸ்டிக் வெவ்வேறு வகைகளில் கிடைக்கும். இது பளபளப்பானது, அதே நேரத்தில் மிகக் குறைந்த அளவில் நிறத்தை தரக் கூடியது. லேசான நிறம் மிகச் சிறந்தது. ஆனால் அதிக நேரம் நீடிக்காது.

- **வேகமாக** லிப்ஸ்டிக் போடுவது, அழகுக்குப் பதில் அசிங்கமாகிவிடும்.
- **முகத்தில்** எந்தப் பவுன்டேஷனைப் போடுகிறீர்களோ, அதனை உதடுகளிலும் புரட்டுங்கள்.
- **எந்த** நிறத்தில் 'லிப்ஸ்டிக்' உபயோகப்படுத்துகிறீர்களோ,அதே நிறத்தில் உள்ள லிப் பென்சில் மூலம் முதலில் உதடுகளில் அவுட் லைன் வரையவும்.
- **ஒரு** பிரஷ்ஷில் லிப்ஸ்டிக் தேய்த்தோ, அல்லது லிப்ஸ்டிக் கொண்டோ அவுட் லைன் வரைந்திருக்கும் பகுதியின் உள்பாகத்தில், லிப்ஸ்டிக்கைத் தேய்க்கவும்.
- **லிப்ஸ்டிக்** போட்டு முடிந்த பின்பு ஒரு'டிஷ்யு' பேப்பரை உதடுகளில் அழுத்தி, அதிகமாக இருக்கும் லிப்ஸ்டிக்கை எடுத்து விடவும்.
- **அதிகமான** நிறம் தேவைப்பட்டால், மீண்டும் ஒரு முறை ஒரே அளவில் லிப்ஸ்டிக்கைப் புரட்டுங்கள்.

லிப்ஸ்டிக் பளிச்சென தெரிய, லிப்ஸ்டிக்கின் மேல் சிறிதளவு 'லிப்ஸ்கிளாஸ்' தடவுங்கள்.

- **சிறிய** உதடுகளாக இருந்தால், சற்றுப் பெரிதாகத் தெரியும் அளவுக்கு லிப்ஸ்டிக் போடலாம். 'அவுட் லைன்' போடும் போதே அதற்குத் தக்கபடி போடவும்.
- **பெரிய** உதடுகளைக் கொண்டவர்கள் உதடுகளின் உட்பகுதியை அவுட் லைன் போட்டு லிப்ஸ்டிக் போட வேண்டும். அப்படிச் செய்தால் உதடு சிறியதாகத் தெரியும்.
- **உதடுகள்** கறுத்துப் போனால் சிவப்பாக்கத் தினசரி ஈரல் சூப் வைத்துச் சாப்பிட்டு வரவேண்டும். கறுத்த உதடுகளின் நிறம் மாறத் தொடங்கும்.
- **உதட்டில்** தேங்காய் எண்ணெயைத் தடவி வந்தாலும் 'ஷைனிங்காக' இருக்கும்.
- **உப்புக்** கலக்காத வெண்ணெய் அரை டீஸ்பூன் எடுத்து, அதில்அரை டீஸ்பூன் ஆரஞ்சுப் பழச்சாறு கலந்து, உதட்டில் தடவவும். வெடித்த உதடு மென்மையாகி, கோவைப்பழ உதடு உருவாகும்.

- **'லிப்ஸ்டிக்கை'** விரும்பாதவர்கள், கடையில் கிடைக்கும் 'லிப் கிளாஸ்' உபயோகிக்கலாம். இதனால் உதட்டில் வெடிப்பு வராமல் உதடு பளபளப்பாக இருக்கும்.
- **பாலை** மெதுவாக காய்ச்சினால் பாத்திரத்தின் மேலே பாலோடு மிதந்து வரும். அதை எடுத்து நெல்லிக்காய்ச்சாறு 5சொட்டு கலந்து தினமும் உதடுகளில் பூசி வந்தால் உதட்டின் கருமை மறைந்து சிவந்த நிறம் கிடைக்கும்.
- **வெயிலில்** அலைவதால் உதடுகள் கறுத்துப் போகின்றனவா? இதைப் போக்க நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாலாடையை உதடுகளில் பூசிக் கொள்ளுங்கள். காய்ந்ததும் துகள்களை நீக்கி அப்படியே விட்டு விடுங்கள். கூடிய சீக்கிரமே உங்கள் உதடு நிறமாகிவிடும்.
- **பீட்ரூட்** கிழங்குச் சாற்றைக் கொண்டு, இயற்கையான உதட்டுச் சாயம் தயார் செய்யலாம். பீட்ரூட் கிழங்குச் சாறுடன் சிறிதளவு கிளிசரின் சேர்த்துக் கொண்டால் அற்புதமான உதட்டுச் சாயமாக அது மாறிவிடும். இந்த உதட்டுச் சாயம் உதடுகளை எந்த வகையிலும் கெடுக்காது. உதடுகளை மிருதுவாக ஆக்குவதோடு இயற்கையான சிவப்பு நிறத்தையும் ஊட்டும்.
- **ஒரு** பெண்ணின் உதடு 'S' வடிவில் இருக்க வேண்டும். அதிலும், உதடுகளுக்கும், முகவாய்க்கும் இடையே நான்கு சென்டிமீற்றர் இடைவெளி இருக்க வேண்டும்.

ஓர் செய்தி

மூன்றாவது பால்நிலை அந்தஸ்துக் கோரும் அரவாணிகள்

ஆணாகவோ பெண்ணாகவோ இல்லாதவர்களை எமது நாட்டில் அலிகள் என்கிறோம். தமிழ் நாட்டில் அரவாணி கள் என்று அழைக்கிறார்கள். இந்தியில் இவர்களை 'கின்னார்' என்று அழைக்கிறார்கள். இந்தியாவில் மட்டும் பதினைந்து இலட்சம் அரவாணிகள் இருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்கள் ஓரளவுக்கு ஆண்களைப் போலத் தோற்றமளிப்பார்கள். ஆனால் சேலை போன்ற பெண்களின் ஆடைகளையே அணிவார்கள். இந்திய சமூக அமைப்பில் பெண்களையும் விட மிக மோசமான பாரபட்சங்களைத் தாமும் சந்திப்பதாக அரவாணிகள் கூறுகிறார்கள். தங்களை ஆண்பால்,பெண்பால் என்ற வகைக்குள் அடக்க முடியாததால் மூன்றாவது பால்நிலை வகையைச் சேர்ந்தவர்கள் என்று வகைப்படுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

வேலைவாய்ப்பு,கல்வி,தேசிய ஆணைக்குழுக்களில் தங்களுக்கெல்லாம் இடம் அளிக்கப்படாமையை ஆட்சேபித்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் அண்மையில் வழக்கொன்றினையும் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அஜ்மர் என்ற பகுதியைச் சேர்ந்த சொனாம் சிங் என்ற அரவாணி,பாராளுமன்றத்தில் தமக்கும் இட ஒதுக்கீடுகள் அளிப்பதன் மூலம் தம்மையும் சமத்துவமுடையவர்களாக அரசாங்கம் மதிக்க வேண்டுமென்று கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றினைத் தாக்கல் செய்துள்ளார். ''சமூகத்தில் கௌரவத்துடனும் மதிப்பாகவும் வாழ முடியாமல் நாம் சந்திக்கும் துயரங்களும் கஷ்டங்களும் அரவாணிகளான எங்களுக்குத்தான் தெரியும். நாளாந்த வாழ்வில் நாம் சந்திக்கும் கேலிகளும் ஏளனங்களும் வேதனைக்குரியவை'' என்று கூறும் சொனாம் சிங், தன்னைப் பெண் என்றும் கூறிக் கொள்கிறார்.

இந்தியாவில் மன்னர் ஆட்சிகள் இருந்த காலத்தில் அந்தப்புரங்களில் நல்ல நிலைகளில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அரவாணிகள். இந்தியாவில் பழங்குடி மக்களினதும் தலித்துக்களினதும் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கென அமைக்கப்பட்ட தேசிய ஆணைக்குழுவைப் போன்ற ஒன்றினை தமக்காகவும் அமைக்க வேண்டுமென இப்போது இந்திய அரவாணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 'உங்கள் பிரச்சினை என்ன?' என்ற இந்தப் புதிய பகுதி மூலம் கலந்துரையாடலாம். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள் மட்டுமல்ல, குடும்பத்தில், அலுவலகத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளலாம். இயன்றவரை உங்கள் பிரச்சினை தீர ஆலோசனைகள் தரப்படும்.

உங்கள் பிரச்சினை என்ன?

சந்திரன்,கொழும்பு.

கேள்வி: உண்மையிலேயே நான் பாரிய பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுக்கிறேன். எனது பெற்றோருக்கு நான் ஒரேயொரு பிள்ளை. அது போலவே எனது மனைவியும் அவளது பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளை. எங்களுக்கு நான்கு வயதில் ஒரு மகள் இருக்கிறாள். இனிமேல் எமக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்காதென டாக்டர்கள் உறுதியாகக் கூறிவிட்டனர். நானும் மனைவியும் எங்கள் குடும்பங்களில் தனியொரு பிள்ளையாகப் பிறந்து வளர்ந்ததால் சுயநலம் கொண்டவர்களாகவும், சகலதும் எமக்குத்தான் என்ற நிலைமையிலும் வளர்ந்துவிட்டோம். நான் எனது மகளோடு சேர்ந்து வாழ்வதற்கு பிள்ளையொன்றினைத் தத்தெடுக்க விரும்புகிறேன். எனது மனைவி அதனைக் கடுமையாக எதிர்க்கிறார். எனது மனைவி, மகளையும் இதற்கு எதிராகத் தூண்டி விடுகிறார். மகள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவளை உதவாக்கரையாக மாற்றிக் கொண்டிருக்கிறார். இதனால் மகள் என்னை ஒரு வெளியாளாகப் பார்க்கிறாள். இந்த நிலைமையை எப்படிக் கையாளுவது?

பதில்: உங்கள் மனைவி தனது வெறுப்புணர்வை இப்படி வெளிப்படுத்துகிறார். நான்கு வயது மகளையும் ஓர் எதிர்மறையான உணர்வுக்குத் தூண்டி விடுகிறார். குழந்தைகளின் எண்ணங்களிலும் செயல்களிலும் பாரிய தாக்கங்கள் செலுத்தக் கூடிய இந்த வயதில் கணவன்,மனைவி இருவருமே பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும். உங்கள் மகளோடு அன்பாகவும் நல்ல விதமாகவும் நீங்கள் நடந்து கொண்டால், உங்களை அந்நியனைப் போல அந்தப் பிள்ளை பார்க்காது. குடும்பத்தில் ஒரேயொரு பிள்ளையென்றால், அப்பிள்ளை தன்னோடு தோழமை பூணுவதற்குக் குடும்பத்துக்கு வெளியே பிள்ளைகளைத் தேட வேண்டியேற்படும். நீங்கள் இருவருமே இதில் நல்ல அனுபவம் பெற்றிருப்பீர்கள். பிள்ளைகள் சேர்ந்து வாழ்வதென்பது அவர்களின் உள வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதுதான். ஆனால் கணவன்,மனைவி ஆகிய நீங்கள் இருவருமே ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து வளர்ப்பது குறித்து ஒருமித்து முடிவெடுக்கத் தவறினால், அது பாரிய பிரச்சினைகளைப் பின்னர் குடும்பத்தில் ஏற்படுத்துமென்பதை மறந்துவிடாதீர்கள்.'உதவாக்கரையாக' மகளை வளர்க்கிறார் என்று எதனைக் கூறுகிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது,இது என்று பொருட்களை வாங்கிக் கொடுப்பதைவிட பிள்ளையோடு இருவருமே அன்பாகவும் நெருக்கமாகவும் பழகுவது மிக முக்கியமானது. தத்தெடுத்து வளர்த்தாலென்ன, சொந்தப் பிள்ளையென்றாலென்ன பிள்ளைகள் பிள்ளைகள்தான். ஆரம்ப காலங்களில் எத்தகைய குணாம்சங்களை அவர்களுக்கு ஊட்டுகிறீர்களோ அது அவர்கள் வளர்ந்ததும் பிரதிபலிக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

முரசு வாசகர்களுக்கான போட்டி - 160

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:-

இந்தியப் பாராளுமன்றத்தில் இட ஒதுக்கீடு கேட்ட அரவாணியின் பெயர் என்ன?

பெயர் : .....

முகவரி : .....

.....

.....

தே-அ- அட்டை இல : .....

விடை : .....

கையொப்பம் : .....

160

- சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி -160
தினமுரசு வார மலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 10.02.2009

பரிசுப் போட்டி இல -158
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

எஸ். எம். ஷமீம்,
இல.51, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

விலை குறைந்த தரம் உயர்ந்த முருங்கைக் கீரை

மனித உடலுக்கு ஆரோக்கியத்தையும், தேவையான புரதச் சத்துக்களையும் அளிப்பதில் காய்கறிகளுக்கும், பச்சைக் கீரைகளுக்கும் முக்கிய பங்குண்டு.

எந்தக் கீரையானாலும், அவற்றைக் கழுவிய பின் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிச் சிறிது சர்க்கரையைச் சேர்த்து அதில் கீரையைப் போட்டு அரைமணி நேரம் மூடி வைத்து விடவேண்டும். பின்பு கீரையை எடுத்து உப்பு, சீரகம் மட்டும் சேர்த்து வேகவைத்து மசித்து கடுகு, உளுத்தம்பருப்பு, மிளகாய் ஆகியவற்றைப் போட்டுத் தாளித்துச் சாப்பிடவும்.

பருப்பு வேகவைத்துக் கீரையுடன் சேர்த்து மசித்துக் கொள்ள சுவைகூடும்.

முருங்கைக் கீரையைப் பொரியல் செய்து சாப்பிடலாம். இதில் விற்றமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மெக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

முருங்கைக் கீரையை, வேர்க்கடலையுடன் சேர்த்துச் சாப்பிடக் கர்ப்பப்பை வலுவடையும்.

மாதவிடாய் நேரத்தில் வரும் வயிற்றுவலி குணமடைய, சிறிதளவு முருங்கைக் கீரையுடன் சிறிதளவு சீரகம் சேர்த்து இடித்து ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஏற்படும்போது, ஐந்து நாட்களுக்குச் சாப்பிட்டு வர வயிற்றுவலி குணமாகும்.

முருங்கைக் கீரை உண்பதால், தாதுப் பலம் பெருகுவதுடன், இரத்த அழுத்தமும் குணமாகும்.

கொழுப்புச் சத்து குறைவதுடன், நீரிழிவு நோயும் குணமாகிறது.

முருங்கைக் கீரை சாப்பிடுவதால் காமாலை குறையும். கண்பார்வை தெளிவாகும். ஆனால், மூட்டு வலி உள்ளவர்கள் முருங்கைக்கீரையைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலி எடுப்பும் கொடுப்பும் ஒரு தீர்வாகாது!

இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமெனவும், அங்கு யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் கோரி ஈழத் தமிழருக்கான ஆதரவுப் போராட்டம் எனும் பெயரில் தமிழகத்தில் பல அலைகள் அவ்வப்போது எழுந்து அடங்கிப்போயுள்ளன. அந்த வரிசையில் தற்போது ஈழத் தமிழர் பிரச்சினைக்காக தீக்குளிப்போம் என்றொரு படலம் தொடர்கிறது. அத்துடன் கல்லூரி மாணவர்களின் தொடர் உண்ணாவிரதம், ஹர்த்தால், ஆர்ப்பாட்டப் பேரணிகள் என புலிகளுக்கு ஆதரவான சக்திகளின் தூண்டுதலின் பின்னணியில் தமிழகத்தின் இயல்பு நிலை சீர்குலைக்கப்படுவதுடன், பல அப்பாவிகள் பலியாக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

ஈழத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் தமிழக உறவுகளின் ஆதங்கமும் உணர்வுகளும் என்றுமே மதிப்புக்குரியதும், வரவேற்புக்குரியதும் என்பதில் யாருக்கும் மாற்று அபிப்பிராயம் கிடையாது. ஆனால் அந்த உணர்வலைகள் கபடத்தனமான முறையில் தீய சக்திகளைக் காப்பாற்றும் நோக்கோடு திசை திருப்பப்படுவதை தமிழக உறவுகள் புரிந்து கொண்டு விழிப்படைய வேண்டிய தருணம் இதுவே. கடந்த வியாழக்கிழமை இலங்கை தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி முத்துக்குமார் (26) சென்னையில் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்த நிகழ்வு தமிழர்கள் வாழும் சர்வதேசம் எங்கும் பெரும் பரப்புரை செய்யப்பட்டதுடன், அவருக்கு நினைவுத் தூபி அமைக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. அவரது அஸ்தி சர்வதேசமெங்கும் அஞ்சலிக்காகவும் அனுப்பப்பட்டது. அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை பள்ளப்பட்டியைச் சேர்ந்த ரவி (31) என்பவர் தீக்குளித்து படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை உயிரிழந்தார். குடும்பத் தகராறு காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும், இதனை தமது அரசியல் இலாபத்திற்காக இலங்கைத்

முத்துக்குமார்

தமிழர்களுக்காக தீக்குளித்ததாகப் பிரசாரப்படுத்த சிலர் முனைவதாகத் தமிழக காவல்துறையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதில் எது உண்மை, பொய் என்பதற்கு அப்பால் ஒரு உயிர் கொடூரமாக பலியாகியுள்ளது என்பது சாதாரண விடயமல்ல. இதுபோன்ற வீணான உயிரிழப்புக்கள் மேலும் தொடர்வது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வி.கே. என். கொலனியைச் சேர்ந்த ராஜசேகர் என்பவரும், கடந்த திங்கட்கிழமை நெல்லையைச் சேர்ந்த ஜோதிடரான நடராஜன் கருணாநிதி என்பவரும் ஈழத் தமிழருக்கு ஆதரவாகவும், புலிகளுக்கு ஆதரவாகவும் கோஷங்களை எழுப்பியவாறு உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தபோது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது இலங்கையில் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்ற பெயரில் தமது இருப்பையும், இராஜபோக வாழ்க்கையையும் தக்கவைத்துக் கொள்வதற்காகப் புலிகள் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைப் பலியெடுத்தும், பலிகொடுத்தும் வந்துள்ளனர். அவர்களின் இந்த வஞ்சகத்தனத்தை ஈழத் தமிழர்கள் நன்கு புரிந்துகொண்டதால் இன்று புலிகளின் மாயாஜாலங்களிலிருந்து விடுபட்டு தமது நிம்மதியான வாழ்வையும், உயிரையும் பாதுகாத்துக்கொள்வதற்கான வழியையே எதிர்பார்த்து புலிகளைப் புறந்தள்ளியுள்ளார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள உறவுகளுக்குப் புலிகளின் முகத்திரை பற்றித் தெரியாததால் அங்குள்ள புலிகளின் கையாட்களின் கபடத்தனமான தூண்டுதல்களுக்கு இரையாகி தமது இன்னுயிர்களை இழக்கும் செயலானது கவலைக்குரியது.

தமிழகத்தில் தமது எதிர்கால அரசியலை நோக்கமாகக் கொண்டு தற்போது ஈழத் தமிழர் பிரச்சினையைச் சாட்டாக வைத்து ஏதுமறியாத அப்பாவி மக்களை உசுப்பேத்திவிட்டு அவர்களின் உயிர்களைப் பலிகொடுத்து தமது அரசியலை உறுதிப்படுத்துவதுடன், புலிகளைப் பாதுகாக்கும் தமது நிலைப்பாட்டில் வெற்றி பெறமுடியுமெனவும் அங்குள்ள சில கட்சித் தலைவர்கள் கனவு காண்கிறார்கள்.

உண்மையில் இன்றைய நிலையில் வன்னியில், புலிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர விடாமல் பணயக் கைதிகளாக தடுத்து வைத்திருப்பதனாலேயே பல உயிரிழப்புக்களும், அவலங்களும் இடம்பெறுகின்றன என்பதை தமிழக உறவுகள் சரியான, நியாயமான தரப்பினரின் உதவியோடு தெரிந்துகொண்டு விழிப்படைய வேண்டும்.

உங்கள் உணர்வுகளும், அக்கறையும் என்றுமே ஈழத் தமிழருக்கு அவசியமானது. அதற்கு என்றுமே எமது மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள். அது எமது மக்களுக்குப் பலமானதொரு ஆயுதமும் கூட. ஆனால் அந்த ஆயுதம் தீயவர்களின் கைகளில் சிக்குண்டு தவறான வழியில் பயன்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதே ஈழத் தமிழர்களின் நிலைப்பாடாகும்.

எழுதியது: வெனர்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"சரி, **அதனால்** என்ன?"

"இதுதான் விஷயம்- நீ பிறரிடம் கடன்படுகிற போது, நீ செய்கிற பொருள்களுக்குப் பாதிப் பணத்தைக் கொடுத்து ஏமாற்றுகிறார்கள். எனக்கு அதைப் பார்க்க வேதனையாக இருக்கிறது. இனிமேல் உன் பொருளை என்னிடம் கொண்டுவா. முழு விலை தருகிறேன். அவ்வளவுதான்.

"நன்றி" என்றான் அவன்.

ஒருநாள் மாலை அவனிடம்,"போர்ஸே, உனக்கு நான் இரண்டாயிரம்

∴பிராங்க் தரத் தயார். நான் சொல்கிற ஒரு பொருளை நீ செய்து தரவேண்டும். இரண்டு பேர் போகக் கூடியதான படகை, பகுதி பகுதியாகச் செய்து தரவேண்டும்."

"பட்டாம்பூச்சி, வேறு யாராக இருந்தாலும் நான் அந்த வேலையைச் செய்யமாட்டேன். பிடிபட்டால் இரண்டு வருடம் தனிமைச் சிறையில் தள்ளிவிடுவார்கள். ஆனால் உனக்காக அந்த அபாயத்தை மேற்கொள்ள நான் தயார். ஒரே ஒரு சங்கடம் -இங்கிருந்து ஒரு துண்டு மரம் கூட வெளியே கொண்டுபோக முடியாதே?" என்றான் போர்ஸே.

"அதைச் செய்ய ஆள் இருக்கிறது," என்றேன்.

"யார் இருக்கிறார்கள்?" என்றான் போர்ஸே.

"கை வண்டிக்காரர்கள் இருக்கிறார்களே நாரிக்கும், கீனியரும் அவர்களைத்தான் சொல்லுகிறேன். சரி, நீ எப்படி வேலையை ஆரம்பிக்கப் போகிறாய்?"

"கட்டுமரத்துக்கான அளவு படத்தை முத லில் வரைந்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு பகுதி பகுதியாக, காடி வைத்துச் செய்வோம். முடிவில் எல்லாவற்றையும் கச்சிதமாகப் பொருத்தி விடலாம். ஒரு கஷ்டம் என்னவென்றால், மிதக்கக் கூடிய கட்டைகளாகக் கண்டுபிடிக்க வேண்டும். இங்கே தீவில் உள்ளது எல்லாம் கனமான மரங்கள். தண்ணீரில் முழ்கிவிடும்."

"முடியும் அல்லது முடியாதென்று எப்போது எனக்குத் தகவல் தருவாய்?"

"மூன்று நாளில்."

"நீயும் என்னுடன் வருகிறாயா?"

"ஊஹூம்."

"ஏன்?"

"சுறா மீன்களிடம் எனக்குப் பயம். முழ்கிவிடக்கூடிய ஆபத்தும் இருக்கிறது."

"கடைசிவரையில் என்னைக் காட்டிக்கொடுப்பதில்லை என்று சத்தியம் செய்வாயா?"

"என் குழந்தைகளின் தலை மீது சத்தியம் செய்கிறேன். ஒரே விஷயம்-ரொம்ப நாளாகும் வேலை முடிவதற்கு."

"கவனமாய்க் கேள். ஏதாவது தப்பாய்ப் போய் நீ மாட்டிக்கொள்கிற மாதிரி ஆகிவிடக்கூடாது. ஆகவே உனக்குப் பாதுகாப்பான நடவடிக்கைகளை இன்றைக்கே செய்யத் தொடங்குகிறேன். படகு கட்டுகிற பிளானை நோட்டுப் புத்தகக் காகிதத்தில் என் கையாலேயே நகல் எடுக்கின்றேன். அதன் கீழே, போர்ஸே! மேலே காட்டியிருக்கிற பிளான்படி கட்டுமரம் தயார் செய்து கொடு. இல்லாவிட்டால் உன்னைக் கொலை செய்துவிடுவேன் என்று எழுதி வைக்கிறேன். சரிதானா? பிற்பாடு, ஒவ்வொரு பகுதியையும் செய்வதற்கான கட்டளைகளை நானே எழுத்து மூலமாக உன்னிடம் தருகிறேன். முடிய முடிய ஒவ்வொரு பகுதியாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்க வேண்டும்.

அது அவ்வப்போது எடுத்துக்கொண்டு போகப்படும். யார் எடுத்துப் போகிறார்கள், எப்போது எடுத்துப் போகிறார்கள் என்பதை நீ கண்டறிய முயலக் கூடாது. (இந்தத் திட்டம் போர்ஸேயின் மனச்சுமையை இறக்கியதெனத் தோன்றியது.) இந்த மாதிரிச் செய்வோமானால், நீ பிடிபட்டால்கூட சித்திரவதைக்கு ஆளாகமாட்டாய். நான் பயமுறுத்தியதாகப் பழிபோட்டு விடலாம்."

"பிடிபடுகிற ஆள் நீயாக இருந்தால்?"

"அப்போது விஷயமே வேறுதான். நான்தான் கட்டளைகள் எழுதித் தந்ததாக ஒப்புக்கொள்கிறேன். நீ அவற்றைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். என்ன? ஒப்பந்தம் சரிதானா?"

"சரி."

"உனக்குப் பயமாக இல்லையே?"

"இல்லை. இனிமேல் பயம் கிடையாது. உனக்கு உதவி செய்வது பற்றிச் சந்தோஷம்தான்."

நான் யாரிடமும் சொல்லவில்லை. போர்ஸேயின் நிச்சயமான பதிலுக்காகக் காத்திருந்தேன். முடிவில்லாததாக, சலிப்பேற்படுத்துவதாக ஒரு வாரம் ஊர்ந்து சென்றது. அதன் பின்னரே போர்ஸேயுடன் தனியாகப் பேச முடிந்தது லைப்ரரியில்.

அப்போது அங்கே யாருமில்லை. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வேளை. முற்றத்தில் துணி துவைக்கும் அறைக்கு அருகே, சூதாட்டம் முழு வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏறத்தாழ எண்பது பேர் ஆடிக்கொண்டிருந்தனர். அதை வேடிக்கை பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் அதே.

எடுத்த எடுப்பிலேயே என் உள்ளத்தில் சூரிய ஒளியைப் பாய்ச்சினான் போர்ஸே."லேசான, . உலர்ந்த கட்டை போதுமான அளவு இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதுதான் ரொம்பக் கஷ்டமான காரியமாக இருந்தது. அதற்கும் ஒரு வழி யோசனை பண்ணி வைத்திருக்கிறேன். மரத்திலே சட்டம் மாதிரி ஒன்று செய்து, நெற்றுத் தேங்காய்களைக் கொட்டி நிரப்பி வைக்க வேண்டும். மட்டை உரிக்காமலேதான். அந்த மட்டை லேசானது, தண்ணீர் புக முடியாதது. நாளைக்கு நான் முதல் பகுதியைத் தொடங்கி விடுகிறேன். அதை முடிக்க மூன்று நாள் ஆகும். வியாழக்கிழமைக்குப் பிறகு, என்றைக்கு வேண்டுமானாலும், எல்லோரும் முதல் தூக்கம் தூங்குகிற வேளையாகப் பார்த்து, உன் கை வண்டி ஆட்கள் அதை எடுத்துப் போகலாம். முந்தின பகுதி வெளியே போனாலொ ழிய அடுத்த பகு தியை நான் செய்ய ஆரம்பிக்கமாட்டேன். இதோ நான் தயாரித்திருக்கிற பிளான். இதை நீ நகல் எடு. எனக்கு வாக்களித்தபடி கடிதம் எழுதிக்கொடு. உன் கைவண்டி ஆட்களிடம் இதைப் பற்றிப் பேசிவிட்டாயா?

"இன்னும் இல்லை. உன் பதிலுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன்."

"இப்போதுதான் சொல்லிவிட்டேனே சரியென்று."

"நன்றி, போர்ஸே. உனக்கு எப்படி நன்றி கூறுவதுதென்றே எனக்குத் தெரியவில்லை. இந்தா, இதோ ஐந்நூறு ∴பிராங்."

அவன் நிமிர்ந்து என் கண்களை நோக்கினான்.

"ஊகூம், பணத்தை வைத்துக்கொள். அக்கரை போய்விட்டாயானால், அங்கிருந்து அடுத்த முயற்சி செய்வதற்குப் பணம் தேவைப்படும். இன்று முதற்கொண்டு நீ புறப்படப் போகிற வரையில் நான் சூதாட்டம் ஆடப்போவதில்லை. சிகரெட்டும், இறைச்சியும் வாங்குவதற்குத் தேவையான அளவுக்கு ஏதாவது சில்லறை வேலை செய்து சம்பாதித்துக் கொள்வேன்."

"பணத்தை ஏன் வாங்கிக் கொள்ளமாட்டேன் என்கிறாய்?"

"காரணம், பத்தாயிரம் ∴பிராங்க் கூலி

(பட்டாம் பூச்சி பறக்கும்)

1ஆம் ஆண்டு நினைவு நாள்

அருமை அம்மா
ஆண்டொன்று சென்றாலும்
நேற்றுத்தான் போலுள்ளது
நீங்கள் இருந்த நாட்கள்
பாசத்தின் இருப்பிடமாய்
எங்களுக்காக உமை
உருக்கி உழைத்தீரே
அன்னையே! எமக்காக வாழ்ந்து
நோயின் கொடுமையினால் எமைப்
பிரிந்து சென்றாயே.

மலர்வு
15-11-1953

உதிர்வு
11.02.2008

அமரர் வீரன் வள்ளியம்மை

தகவல் :- பிள்ளைகள், மருமக்கள்.

பிரிவால் துயருறும் :-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

நான்காம் பாகம்

பகுதி -68

எங்களிடம் வசதி இல்லை.

இந்தக் காதல் எப்படி கைகூடும்?

அவளும் என்னை விரும்பினாள். நானும் அவளை விரும்பினேன் என்பதைத் தவிர, மணம் முடிக்கும் வாய்ப்பே இல்லாத ஒரு காதல் என்ன ஆகும்?

குளிப்பதற்காக விழுவதென்றால் குளத்தில் விழ வேண்டும்.

காதலிக்கிறேன் என்றால், கல்யாணத்திற்கு வாய்ப்பு உண்டா என்று பார்த்துத்தான் காதலிக்க வேண்டும்.

குருடன், கையிலுள்ள கோலைத் தரையிலே தட்டிப் பார்க்கிறான்; அது தரையில் படாமல் போனால், பள்ளம் என்று தெரிந்து கொள்கிறான். பிறகு தரையிருக்கும் பக்கம் தட்டிப் பார்த்துத் திரும்பி நடக்கிறான்.

'காதலுக்குக் கண் இல்லை' என்பது உண்மைதான். ஆனால் அந்தக் குருடனுக்கு இருக்கும் விவஸ்தை கூடவா இல்லாமால் போயிற்று?

சூர்ப்பனகை இராமனை விரும்பியதற்குப் பெயரும் காதல்தான் இராவணன் சீதையை விரும்பியதற்குப் பெயரும் காதல்தான்; கோவலன் மாதவியை நாடியதற்குப் பெயரும் காதல்தான்; சீதா- இராம, ராதா-கிருஷ்ண காதலர்களும் காதலர்கள்தான்.

இவற்றில் உன் காதல் எந்த ரகம்?

எந்த ரகமும் இல்லை. கண் போன போக்கிலே மனம் போய்விட்டது. அவ்வளவுதான்!

ஜெயித்து வந்த குதிரை என் குதிரை என்று நினைப்பதுபோல், கல்யாணம் செய்து காதலிப்பதைப் போன்ற வம்பில்லாத வேலை வேறெதுவும் இல்லை.

இல்லையென்றால் இது நிறைவேறும் என்று நன்றாகத் தெரிந்துகொண்டு, காதலைத் தொடங்கினால் தோல்வி இல்லை.

இன்னொன்றும் துணிந்து சொல்வேன்.

ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் தமயந்தியை விரும்பினார்கள். அவள் கையில் ஐம்பத்தாறு மாலைகள் இல்லை. நளனை எதிர்பார்த்தாள்; வந்தான்; மாலையிட்டாள்.

பிருதிவிராஜன்-சம்யுக்தை கதையும் இதுதான்.

அம்பிகாவதியும், அமராவதியும் கொலைக் களத்திற்கே தயாரானார்கள்.

ரோமியோவும், ஜூலியட்டும் மரணத்திற்கே துணிந்தார்கள்.

இந்தத் துணிச்சல் எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டாய்; நீ யாரைக் காதலிக்கிறாயோ அவள் உன் வீடு தேடி வந்துவிட வேண்டும்; இல்லையா?

நீயாக நினைப்பது, நீயாக ஏங்குவது, பிறகு நீயாக அழுவது! என்ன கூத்து இது!

ஆகவே, திட்டம் தெரிந்து காதலி; தோல்வி இல்லை. அப்படியும் தோல்வி வந்தால், கல்யாணம் செய்து காதலி; தோல்வி வராது.

வெறும் கற்பனா வாசகங்களையும், காவியங்களையும் படித்துவிட்டு உடம்பை அலட்டிக்கொள்வதில் என்ன இலாபம்?

ஒரு ஆணுக்கு ஒரு நல்ல பெண்துணை வேண்டும். அதை நீயாகப் பார்ப்பதைவிடத் தாய்-தந்தையர் பார்த்தாலென்ன?

இராமன்-சீதை திருமணத்தை வசிஷ்டரும்,ஜனகரும்தான் பேசி முடித்தார்களே தவிர, அவர்களே பேசி முடிக்கவில்லை.

ஆகவே, காதல் தோல்வி என்பது மறக்கக்கூடிய துன்பம்தான் என்பது என்னுடைய கருத்து, சொல்லப்போனால் அதைத் துன்பக் கணக்கிலேயே நான் சேர்த்ததில்லை.

வேறு பெண்ணே இல்லாத உலகத்தில்தானே, நீ ஒருத்திக்காக ஏங்க வேண்டும்?

மதுரையில் இருந்து திருப்பதிக்குப் போக முடியவில்லையென்றால், அழகர் கோயிலுக்குப் போ. அதை விடுத்துத் திருப்பதியை நினைத்து அழுதால் திருமால் என்ன இறங்கி வரப்போகிறாரா?

காதல் புனிதமானது! வீணாக அதை நீ களங்கப்படுத்தாதே; பேசாமல் கல்யாணம் செய்துகொள்.

ஐந்து

''ஒட்டகம் முட்செடியைத் தின்பதற்கு விரும்புகிறது. ஆனால் முட்களைத் தின்னும்போதும் அதன் வாயிலிருந்து இரத்தம் பீறிட்டு வருகிறது. இருப்பினும் அது முட்களையே தின்னச் செல்கிறது; அதை விடுவதில்லை. சம்சாரிகள் எத்தனையோ துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகிறார்கள். இருப்பினும் சில நாட்களிலேயே அவற்றை மறந்து முன் போலவே ஆகிவிடுகிறார்கள்.

மனைவி இறந்து விடுகிறாள் அல்லது துரோகம் செய்து விடுகிறாள் என்று வைத்துக்கொள்வோம். கணவன் அதோடு சந்நியாசி ஆகிவிடுகிறானா?, இல்லை; அவன் வேறு கல்யாணம் செய்து கொள்கிறான்.

குழந்தை இறந்துவிட்டால் பெற்றோர் அழுகிறார்கள்; அந்தக் கவலையும் சில நாட்களே. பிறகு தாய் தன் அலங்காரங்களைத் தொடங்குகிறாள். ஆசையை வளர்க்கிறாள். அடுத்த குழந்தைக்குத் தாயாகி விடுகிறாள்.

பெற்ற பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதற்காகச் சொத்துக்களையே சிலர் இழந்து விடுகிறார்கள். அதில் நன்றாக அவதிப்பட்டும் கூட, அடுத்தொரு பெண்ணைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

கோர்ட்டில் வழக்காடி சிலர் எல்லாச் சொத்துக்களையும் இழந்துவிடுகிறார்கள். ஆனால், மிச்சமிருக்கும் சொத்தை விற்றாவது இன்னொரு வழக்குப் போடுகிறார்கள்.

பாம்பு, பெருச்சாளியை விழுங்க முயல்கிறது. விழுங்கவும் முடியவில்லை; துப்பவும் விரும்பவில்லை.

''மனித வாழ்க்கை இதுதான்.''

-பகவான் ராமகிருஷ்ணர்

'ஆப்பசைத்தக் குரங்கின் நிலையிலுள்ள கிரகஸ்தர்களை' இப்படி விமர்சிக்கின்றார்.

இதோ,திருமணம் நடக்கப் போகிறது.

நீ குடும்பத்திற்குள் நுழையப் போகிறாய்.

திருமணத்தை நினைக்கும்போது குதூகலமாகத்தான் இருக்கிறது.

பஜ்ஜி சாப்பிடும் போது கடலைமாவின் சுவைதான் தெரியுமே தவிர எதிரொலி தெரியாது; வயிற்றை வலிக்கும் போதுதான் அது புரியும்.

திருமணம் நடக்கும்போது, அந்த உற்சாகத்தில் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை வராது.

ஆனால், எதிர்காலம் திருமண காலத்தைப்போல இருக்காது என்பது உண்மை.

பொறுப்பற்ற நிலையிலே திருமணம்; பொறுப்பைச் சுமந்த நிலையில் குடும்ப வாழ்க்கை.

பெண்ணின் அழகு; வரதட்சணை வரவு; நண்பர்கள் கூட்டம்; வாழ்த்துத் தந்திகள்- இதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?

இரண்டு குழந்தை பிறந்து திக்குமுக்காடும்போது சந்தோஷப் படுவதற்கு என்ன இருக்கிறது?

இன்பமும் துன்பமும்- நேரத்தையும் சூழ்நிலையையும் பொறுத்தவை.

நேரம் இறைவனின் நிர்ணயம்.

'சஞ்சல மிக்க மனதைப் பயிற்சியால் தெளிய வைக்க முடியும்' என்று பகவான் கீதையிலே சொன்னதுபோல் குடும்பத்தில் நுழைந்தவுடனேயே

(தொடர்ந்துவரும்)

சானியா - பூபதி வெற்றி பெடரரின் கனவு தகர்ந்தது!

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில்,கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி,சானியா மிர்சா ஆகியோர் பட்டத்தைக் கைப்பற்றி இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். பூபதி,சானியா ஜோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் நதாலி டெசி (பிரான்ஸ்) - ஆன்டி ராம் (இஸ்ரேல்) ஆகியோரை 6-3, 6-1 என்ற செட் கணக்கில் வென்று கோப்பையைக் கைப்பற்றினர்.



அதேவேளை, அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் 2ஆம் தரவரிசையிலுள்ள சுவிஸ்.வீரர் ரோஜர் ∴பெடரரை, முதலாம் தரவரிசை வீரர் ர.∴பேல் நடால் 5 செட்கள் ஆட்டத்தில் வீழ்த்தி ஆஸி.ஓபன் கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் பட்டம் வென்றார். சுமார் 4 மணி நேரம் 23 நிமிடங்கள் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் ர.∴பேல் நடால் 7- 5, 3- 6, 7- 6, 3- 6, 6- 2 என்ற செட்களில் அயராது போராடி ∴பெடரரை வீழ்த்தினார். இதன் மூலம் அதிக கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் சாம்பியன் பட்டம் வென்ற பீட் சாம்பிராஸை சமன் செய்யும் ∴பெடரரின் கனவை ர.∴பேல் நடால் மீண்டும் முறியடித்தார். ஆரம்பம் முதலே பெரும் பரபரப்புடன் நடைபெற்ற இப்போட்டியில் இருவரும் மாறி மாறி செட்களை கைப்பற்றிக்கொண்டமையினால், ரசிகர்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பு நீடித்துக் கொண்டேயிருந்தது. எனினும் இறுதிச் செட்டில் 6- 3 என்று கைப்பற்றினார்.

கடைசிச் செட்டில் ∴பெடரரின் ஷாட்கள் பல நெட்டில் அடித்தும் வெளியில் சென்றும் அவருக்கு நிலை தடுமாற்றத்தை ஏற்படுத்தின. இதனால் கடைசிச் செட்டை 6- 2 என்று நடால் கைப்பற்றிச் சாம்பியன் பட்டத்தை வென்றார். ∴பெடரரின் சர்வை முறியடித்துக் கடைசியாக ஒரு அபாரமான ∴போர் ஹேன்ட் ஷாட் மூலம் வெற்றி பெற்றார் நடால். ர.∴பேல் நடாலின் 6ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டம் ஆகும் இது. 13 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற ரோஜர் ∴பெடரர் சாம்பிராஸின் சாதனையைச் சமன் செய்ய விடாமல் விம்பிள்டன் மற்றும் தற்போது அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸிலும் ∴பெடரரை வீழ்த்தியுள்ளார் நடால்.

இலங்கையில் சாம்பியன் போட்டிகள்?

பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டிகள் வேறு இடத்தில் நடத்தப்படும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தெரிவித்துள்ளது. சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டிகள் கடந்த ஆண்டே பாகிஸ்தானில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அப்போது போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன. இந்நிலையில் பெர்த்தில் நடைபெற்ற ஐசிசி நிர்வாகக் குழு கூட்டத்தில், சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டிகள் பாகிஸ்தானிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் போட்டிகள் நடத்துவது குறித்து குழு உறுப்பினர்கள் பலரும் அதிருப்தி தெரிவித்ததால் அந்நாட்டிலிருந்து போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்றுவதுதான் உசிதமாக இருக்கும் என ஐசிசி தலைமை நிர்வாகி ஹாரூண் லார்கர் தெரிவித்தார். ஏப்ரலில் நடைபெறும் நிர்வாகக் குழுவின் அடுத்த கூட்டத்தில் சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டிகள் நடத்துவதற்கான இடத்தை ஐசிசி அறிவிக்கும் என்றார் அவர்.

எனினும் இந்தப் போட்டிகள் பெரும்பாலும் இலங்கையில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுவதாகச் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளதுடன், ஏனைய நாட்டு அதிகாரிகளும் இலங்கையில் போட்டிகளை நடாத்துவதற்குப் பச்சைக்கொடி காட்டுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ICC CHAMPIONS TROPHY SRI LANKA 2002

ஏற்கனவே 2002 ஆம் ஆண்டு சாம்பியன் போட்டிகளை இலங்கை கிரிக்கெட் சபை சிறப்பாக ஒழுங்கு படுத்தியிருந்தது. எனினும் குறித்த தொடரின் இறுதிப் போட்டிகள் கடும் மழை காரணமாக கைவிடப்பட்டதைத் தொடர்ந்து பரிசுத் தொகையான இறுதிப் போட்டியில் பங்குபற்றிய இரு அணிகளுக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று 2006 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சாம்பியன் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளைத் தோற்கடித்து அவுஸ்திரேலியா கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா ஆதிக்கம்

நடைபெற்று வரும் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணியினர் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. மகேந்திரசிங் தோனி, இந்திய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதையடுத்து உத்வேகம் பெற்றிருக்கும் இந்திய அணியிடம் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளும் மண்டியிட்டிருந்தன. இந்நிலையில் தற்போது இலங்கை அணியினரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

கடந்த வருடம் பாகிஸ்தானில் நடைபெற்ற ஆசிய கோப்பை போட்டிகளின் போது இந்தியர்களை வீழ்த்திய இலங்கையின் சுழற்பந்து வீச்சு ஜோடிகளான அஜந்த மெண்டிஸ் - முரளி ஆகியோரின் பந்துகளை மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர் கொண்டுவரும் இந்திய வீரர்கள் அவர்களிடம் விக்கெட்டை இழக்காது தற்காப்பு ஆட்டத்தை நடாத்திவிட்டு ஏனைய பந்து வீச்சாளர்கள் மீது தாக்குதல் ஆட்டத்தைத் தொடுத்து ஓட்டங்களைக் குவிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இத்தொடரின் முதல் இரு போட்டிகளின் போதும் 91 ஓட்டங்களைக் கொடுத்த மெண்டிஸ் இரண்டு பின்வரிசை விக்கெட்டுக்களை மட்டுமே கைப்பற்றியிருந்தார். அதேபோன்று 84 ஓட்டங்களைக் கொடுத்த முரளிக்கு ஒரு விக்கெட் மாத்திரமே கிடைத்திருந்தது.

எனவே சுழற்பந்து வீச்சாளர்களை மட்டுமே நம்பியிருக்காது ஏனைய அனைத்து வீரர்களும் தங்களது முழுத் திறனையும் இந்தியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தினால் மட்டுமே எஞ்சியிலுள்ள போட்டிகளில் இந்திய அணியினரைக் கட்டுப்படுத்தி வெற்றி பெற முடியும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

விளையாட்டுத் துளிகள்!

அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டியில் இறுதிப் பந்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது நியூசிலாந்து அணி.

ஐ.பி.எல். போட்டிகளின் இரண்டாவது தொடருக்காகப் புதிதாக 111 சர்வதேச வீரர்கள் ஏலம் விடப்பட்டுள்ளனர்.

சச்சின் தொடர்ந்து பிரகாசித்தால் இந்திய அணி தரவரிசையில் முதல் இடத்தைப் பிடிக்கும் என கூறியுள்ளார் ஷேன்வோர்ன்.

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் இம்முறை அதிக தொகை ஏலம் போகும் வாய்ப்பு கெவின் பீற்றர்சனுக்கு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது

இலங்கையில் மது, சிகரட்டால் வருடாந்தம் 40,000 பேர் பலி

இலங்கையில்
மதுபானப் பாவனையால்
வருடாந்தம் இருபதாயிரம் பேர் இறக்கின்றனர். இதேயளவு எண்ணிக்கையிலான பேர் புகையிலைப் பொருட்களின் பாவனையால் மரணிக்கின்றனர். இவ்வாறு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகவலை மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர், டாக்டர் கார்லோ பொன்சேகா தெரிவித்தார். இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடம் கொழும்பில் நடத்திய மது மற்றும் சிகரட் பாவனையை விளக்கும் கண்காட்சியில் உரையாற்றிய போதே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார். அதாவது அண்ணளவாகக் கூறுவதானால், மாதாந்தம் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணமாகின்றனர். நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை மது மற்றும் சிகரட், பீடி, சுருட்டு, புகையிலை போன்றவை பலியெடுக்கின்றன.

முடாக்குடியர்கள் பெரும்பாலும் ஈரல் அழற்சி போன்ற நோய்களாலேயே இறக்கின்றனர். மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களின் பாவனை இரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு, குடல் புற்று நோய் போன்ற பல்வேறு நோயாளிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை என்றும் டாக்டர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். எமது நாட்டில் பாதுகாப்புக்கு அடுத்தபடியாகக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கே பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்படுகிறது. தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற அடித்தட்டு வர்க்க மக்களே பெரும்பாலும் மது மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களின் பாவனைகளால் பாதிக்கப்படுகின்றனர்.

மதுப் பாவனை குடும்ப வன்செயல்களுக்கும் காரணமாக அமைகின்றன. குடும்பத் தலைவர்களின் சொற்ப உழைப்பில் பெரும் பகுதி மதுவுக்கும், பீடி, சுருட்டுப் போன்றவற்றுக்கும் செலவிடப்படுவதால் அடுப்பங்கரையில் பூனை படுக்கும் நிலையே பல வீடுகளில் காணப்படுகின்றது. குடித்துவிட்டு, சுய நினைவின்றி மனைவி, பிள்ளைகளைப் போட்டு அடிக்கும் நிலைமைகளும் சில குடும்பங்களில் காணப்படுகின்றன. நாட்டில் வன்செயல் அதிகரிப்புக்கும் மதுபானத்துக்கும் நிறையவே தொடர்புகள் இருக்கின்றன. மலையகத்தில் மதுபாவனை வெகுவாக அதிகரித்திருப்பதாக அண்மைய புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது. இந்த நாட்டில் மிகவும் மோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கு உள்ளாகும் மக்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்தான். இங்குதான் சட்டவிரோத மது விற்பனை நிலையங்களும் பெருந்தொகையில் இருக்கின்றன. இங்கே சில தோட்டங்களில் பெண் தொழிலாளிகளும் மதுப்பாவனைக்கு அடிமையாகியிருப்பது வேதனைக்குரியது. இங்கு அரசியல் நடத்தும் தொழிற்சங்க முதலாளிகளின் கைகளிலேயே சட்ட ரீதியான மதுபான விற்பனை நிலையங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அரசாங்கக் கஜானாவுக்கு அதிகளவு வருமானத்தை மதுபானம் மற்றும் சிகரட் போன்றவை ஈட்டித் தருவதால், வருடா வருடம் வரவு - செலவுத் திட்டத்தில் இவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இருந்தாலும் 'பெருங்குடி' மக்களின் எண்ணிக்கையும் புகை மன்னர்களின் தொகையும் குறைந்ததாகத் தெரியவில்லை. சமூகச் சீரழிவுகளுக்கு மதுபானம், போதைவஸ்துப் பாவனை போன்றவை ஓரளவுக்குக் காரணமாக இருந்தாலும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறுகிறது என்றே கூறவேண்டியிருக்கிறது. நாட்டிலுள்ள மது ஒழிப்பு இயக்கங்களும் நீண்ட காலமாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. விற்பனைக்கு விடப்படும் சிகரட் பைக்கெட்டுகளில் "புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும்" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வெறும் வாசகங்களும் வார்த்தைகளும் தீய பழக்க வழக்கங்களை இல்லாமல் செய்வதற்குக் கொஞ்சமேனும் பங்களிக்காது என்பதனை ஏனோ இந்த நாட்டின் கொள்கை வகுப்பாளர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.

சட்ட விரோத மதுபான உற்பத்தி நிலையங்கள் நாட்டில் ஏராளம் தாராளமாக இருக்கின்றன. கலால் அதிகாரிகளைக் கைகளுக்குள் போட்டுக்கொண்டு, பெருமளவு மதுபானத்தைச் சட்டவிரோதமாக உற்பத்தி செய்து, போத்தல்களில் இட்டு நிரப்பி, அசல் போலப் போலி லேபல்களை ஒட்டிச் சந்தைக்கு விடும் திமிங்கிலங்களை எந்த வலை போட்டும் எவராலும் பிடிக்க முடியாமல் இருக்கிறது. இவர்கள் பொலிஸாருக்கும் கலால் அதிகாரிகளுக்கும் மாதாந்தம் வழமையான 'மாமூல்களை' ஒழுங்காக வழங்கி வருகிறார்கள். பெரிய பூச்சிகள் சட்டம் என்னும் சிலந்தி வலையைப் பிய்த்துக்கொண்டு செல்கின்றன. சிறிய பூச்சிகளே வலைக்குள் சிக்கிக்கொள்கின்றன. கசிப்புக் காய்ச்சுவதும், விற்பனை செய்வதும் பிழையானதுதான். கசிப்போடு சம்பந்தப்பட்டவர்களைப் பிடிக்கத் தெரிந்த சட்டத்தின் காவலர்கள், பெரும் முதலைகளை வேண்டுமென்றே தப்பிச் செல்ல விட்டுவிடுகின்றார்கள்.

தேர்தல் காலங்களிலும் அரசியல் கட்சிகளின் கூட்டங்களின்போதும் பெட்டி, பெட்டியாக மதுபானப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுக் கையாட்கள் மூலமாகவும், அடியாட்கள் மூலமாகவும் விநியோகிக்கப்படுவது ஒன்றும் புதுமையானதல்ல. இந்த நடைமுறை ஜனநாயகத்தினதும் பணநாயகத்தினதும் 'ட்ரேட் மார்க்' போலாகி விட்டதுதான் வேதனைக்குரியது.

எமது நாட்டில் பொது இடங்களில் சிகரட் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களைப் புகைக்கக் கூடாது. மதுபானம் அருந்தக் கூடாது என்றெல்லாம் சட்டம் இருக்கின்றது. இந்தத் தடையை மீறுபவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா வரையிலான அபராதம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராதமும், தண்டனையும் ஆகிய இரண்டையும் விதிக்க முடியும்.

மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் 27 ஆவது சட்ட விதிகளுக்கு அமையவே மேற்படி கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. இதே சட்ட விதியின் படி புகையிலை உற்பத்திப் பொருட்கள் மற்றும் மது பானம் தொடர்பாக விளம்பரங்கள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத் தடையை மீறுபவர்களுக்கு இருபது இலட்சம் ரூபாவரை அபராதம் விதிக்கலாமெனச் சட்டம் கூறுகிறது. இதே சட்டவிதிகளின்படி 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரட், சுருட்டு, மதுபானம் போன்வற்றை விற்பனை செய்ய முடியாது. இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு நான்காயிரம் ரூபா அபராதம் அல்லது ஒரு வருட காலத்துக்கு மேற்படாத் சிறைத் தண்டனை அல்லது சிறை, அபராதம் ஆகிய இரண்டினையும் விதிக்க முடியும். இதற்குப் புறம்பாகக் கலால், சட்டமொன்றும் நடைமுறையில் உள்ளது.

பாடசாலைகள், ஆலயங்களுக்கு அண்மித்ததாக மது விற்பனை நிலையங்களை அமைக்க முடியாது. ஆனால் மதுபான நிலையங்களுக்கு அண்மித்ததாக ஆலயங்கள், விகாரைகள், பாடசாலைகள் இருப்பதைப் பல நகரங்களில் காணமுடிகிறது. பாடசாலைகளுக்கு அண்மையில் 'பான்பராக்' என்ற போதை கலந்த ஒருவித வஸ்து கடைகளில் விற்கப்படுகின்றனது. இதனால் மாணவர்கள் பாழாகிறார்கள். பெரும்பாலும் இப்பொருட்கள் பாகிஸ்தானிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவையும் போதைகளுக்கு அடியாமையாகி விட்டதால், அத்துமீறல்கள் தாராளமாகவே இடம்பெறுகின்றன.

மேய்ச்சல் வெளி

"**என்ன** நடக்கப் போகுது?" என்னதான் ஆகப் போகுது? என்று நம்மவர் எல்லோரும் கையில் ஏந்தியபடி திரியும் இந்த மில்லியன் டொலர்க் கேள்விகளை, 'பெரிசு' ஒன்றிடம் ஏதாவது பேசியாக வேண்டும் என்ற இக்கட்டான சூழல் வந்தபோது கேட்டேன்.

பெரிசு என்றது உண்மையிலேயே வயசுபோய்ப் பெரிசான என் சொந்தம் ஒன்றைத்தான். அவர், சிறுசுகளுக்கு நாம்தானே நல்லது கெட்டதுகளைச் சொல்லியாக வேண்டும் என்ற தோரணையோடு, 'எல்லாம் வேலுப்பிள்ளையின்ரை பெடி வளர்ப்புச் சரியில்லாததாலை வந்த வினை' என்று சொல்லி முகத்தை ஆகாயத்தை நோக்கியதாய் வைத்துக்கொண்டார்.

'இவ்வளவு அழிவு, அலைச்சல், ஐம்பதறுபது வருசத்துக்கு மேல பின்தங்கின கல்வி மற்றும் சமூகநிலை, இடிபாட்டுச் சூழல், மனங்களில் ஏறிவிட்ட நிரந்தர வடுக்கள்.... எல்லாத்துக்கும் உப்பிடி ஒரு பதிலைச் சொல்லிப்போட்டு விட்டிடேலுமே?'

அசிரத்தையாய் ஆரம்பித்த என் பேச்சு ஆவேசமாய் மெல்ல மாறுவது வழக்கம்போல நான் விரும்பாமலேயே நடந்தது. வேண்டாம் வேண்டாமென்று பயந்தாலும், பொத்திவைக்க முடியாமல் உள்ளிருக்கும் பூனை வெளியே குதித்துவிடுகிறது.

'பின்னை என்ன சொல்லச் சொல்லுறாய்? ஒண்டும் வேண்டாம் வேண்டாம் எண்டு மறுத்து, சண்டையால எல்லாம் எடுத்துத் தருவம் எண்டுபோட்டு இப்ப மட்டக்களப்பில பின்வாங்கி, மன்னாரில பின்வாங்கி, கிளிநொச்சியில பின்வாங்கி, முல்லைத்தீவிலயும் பின்வாங்கிப் பின்வாங்கிப் போறதெண்டால் உதை அப்பவே விளங்கிக்கொண்டிருக்கவெல்லே வேணும். சிங்களப் படையெல்லாம் எங்கடை கால்தூசுக்குச் சமன் எண்டு மோட்டுத்தனமாய் எங்களையெல்லாம் நம்பப் பண்ணினது ஆற்றை பிழை?'

'அப்ப, அதையெல்லாம் நம்பி உசார்க்கதை கதைச்சுத் திரிஞ்சவையில ஒரு பிழையுமில்லையே?' என்று அவர் முகத்தைப் பார்த்தேன்.

என்னடா தம்பி விசர்க்கதை கதைக்கிறாய். நாலைஞ்சு 'காம்ப்' புகளும் அடிச்சுக் காட்டினவங்கள்தானே? எவ்வளவு ஆயுதங்கள், விமானங்கள், எத்தினை படைப்பிரிவுகள்... எல்லாம் உப்பிடிப் பொசுக்கெண்டு போகும் எண்டு ஆர்கண்டது?

'அப்ப, தமிழீழம்தான் முடிவு... எண்டுதான் திடமாயிருந்திருக்கிறியள்?'

சாச்சாய்... அப்பிடியுமில்லையடா தம்பி, ஏதோ ஒண்டு, ஆருக்கும் நாங்கள் கீழை எண்டில்லாமல் தனிச்சன் மிடுக்கோடை வாழ ஒரு வழி பண்ணுவாங்கள் எண்டு நம்பித்தானே அவங்களுக்குப் பின்னாலை நிண்டது....

சரி, தனிநாடு சரிவராது எண்டு தெரிஞ்சும்.... எங்கட மிடுக்குக்கு எது சரிவரும் எண்டது தெரியாமலும் தானா சும்மா போடிபோக்கில அவைக்குப் பின்னாலை உசார்ப்படுத்திக்கொண்டு நிண்டனீங்கள்?

என்னடாம்பி, நீ இப்பிடி இடக்கு முடக்காய் நிக்கிறாய்? அவங்கடை அடியில அரசாங்கம் தீர்வொண்டுக்கு வரும் எண்டு எல்லாரும் நம்பினதுதானே?

அப்ப வந்த தீர்வுகளை எல்லாம் ஏன் எடுக்கேல்லை எண்டாவது கேட்டியளே?

— சுல்தான் —

அதுகளொண்டும் காணாது எண்டதுதானே எல்லாற்றை அபிப்பிராயமும்...

அப்ப தீர்வொண்டை எடுத்துப் பிறகு அதை விரிவாக்கிறதெல்லாம் சரிப்படாது. தொடர்ந்து அடிச்சுக்கொண்டிருந்தால் நாங்கள் விரும்புறது கிடைச்சிடும் எண்டு நம்பித்தான் நீங்களும் சண்டைக்குப் பின்னால நிண்டிருக்கிறியள்.... தனிநாடு சாத்தியமில்லையடா பெடியள், இந்தியாவோ சந்திரிகாவோ தந்ததொண்டை எடுத்துக்கொண்டு மிச்ச அதிகாரங்களுக்குப் பிறகு போராடுங்கோ எண்டதை இடையில எப்பவும் நீங்கள் அவைக்குச் சாடைமாடையாய்க் கூடச் சொல்லேல்லை....

ம்ம்... சொல்லுற மாதிரியே வைச்சிருந்தவங்கள் என்று முணுமுணுத்தபடி விட்டு விலக எத்தனித்தது பெரிசு.

எப்பவோ இருந்தே உங்களுக்குச் சரியானதை நீங்கள் சொல்லேலாதெண்டு ஆக்கி வைச்சிருந்த பெடியளை, இத்தனை நாளும் பின்னுக்கு நிண்டு உசாரேத்திப் போட்டு, இப்ப ஏன் அவையள்தான் பிழை எண்டு கழரப் பாக்கிறியள்?

இப்பிடித்தான் நாசமத்துப்போய் முடியுமெண்டால் அப்பவே வேற ஆரும் செய்ய விட்டிருக்கலாமே இந்த அழிவாங்கள். எல்லாரையும் அழிச்சுத் துலைச்சு இவங்களை மட்டும்தானே நம்பியிருக்கோணுமெண்டு செய்தாங்கள். இப்ப, திரும்பவும் பதுங்கிப்போட்டுத் திரும்பிவந்து அடிப்பமெண்டு... இடமெல்லாத்தையும் விட்டிட்டு ஓடுகினம். நிண்ட இடத்தை விட்டுப்போட்டுப் பிறகு என்ன அடி அடிக்கிறது? அங்கங்கை சனத்தைச் சாக்காட்டிலேயே வைச்சிருக்கிறதுக்குச் சும்மா சொறிஞ்சுகொண்டிருக்கத்தான் ஏலும்... பழையமாதிரிச் சொறியல்களுக்குப் பயப்பிடுற ஆமியே இப்ப வந்து நிக்குது? எரிச்சலில் தன்னை மறந்து பொழிந்தது பெரிசு.

சரி, மூண்டு தசாப்தமாய் இவ்வளவு அழிவுகள், சமூகச் சீரழிப்பைச் செய்துமுடிச்சதுக்கு ஒரு குழுதான் காரணமெண்டால், அவையைத் தலைமையாய் ஏற்றுப் பின்னால நிண்ட சமூகத்துக்கு எந்தப் பொறுப்புமில்லையா? தலைமையைத் தீர்மானிப்பதில் சமூகத்துக்கு எந்தப் பங்குமில்லையா? அந்தக் குழு அழிஞ்சு போனால் அல்லது கலைஞ்சு போனால் அவ்வுளோதானா? அவர்களை வைச்சு எங்கடை விருப்பங்களைச் சாதிச்சுக் கொள்ளலாம் எண்டு முழுமூச்சாய் நிண்டவர்களெல்லாம் திரும்ப இன்னொரு குழுவைத் தயாரிச்சு மேலும் மேலும் அழிஞ்சுபட சமூகத்தை ஆவேசப்படுத்திக் கொண்டிருக்கலாமா? இதுவரைகாலப் பிழையைச்

ஈழத்தமிழர்களிடம் சிங்களத்தரப்பு, இந்தியத்தரப்பு, தமிழ்நாட்டுத்தரப்பு எல்லாமே மன்னிப்புக் கேட்டாக வேண்டும். இதுமாதிரி தமிழ்த்தரப்பும் மன்னிப்புகளைக் கேட்டாக வேண்டியிருக்கு. குறிப்பாக 1990 ஆம் வருஷம் 'முஸ்லிம்களைத் துரத்தினதுக்குப் பெரிய மன்னிப்பை அவர்களிடம் தமிழ்ச் சமுதாயமே கேட்க வேண்டும். அது ஒரு அமைப்போட தவறு மாத்திரமல்ல. விடுதலைப் புலிகள்ங்கிற அமைப்பு இங்கே பெரிய தவறு செய்திருக்கு. ஆனால் இது தமிழ்ச் சமுதாயம் மன்னிப்புக் கேட்க வேண்டிய விஷயம். அதுமாதிரி நிறையச் சொல்லலாம். அநுராதபுரக் கொலைகள், பொலநறுவைக் கொலைகள் மற்றும் தமிழ்த் தரப்பால் நடந்த கொலைகள் எல்லாவற்றுக்கும் தமிழ்ச்சமூகம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

சமூகம் உணர்ந்துகொண்டதா இல்லையா எண்டது தெரியவேண்டாமா?

பெரிசு கொஞ்சம் முழுசினார். பிறகு, என்ன சொல்ல வாராய் தம்பி! நாங்கள் எல்லாரும் ஒருமிக்க மன்னிப்புக் கேக்கோணுமெண்டு சொல்லுறியே?

ஓமோம் அதுதான் விசயம். நம் சமூகம் முழுமையுமே ஒட்டுமொத்தமாய் நிறைய மன்னிப்புகளைக் கேட்க வேண்டியிருக்கு!

ஆரிட்டைக் கேக்கிறது? என்று வியப்போடு கேட்டது பெரிசு.

சொல்லுறதுக்குப் பெரிய பட்டியலே இருக்கு. எங்கடை பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேக்கிறதன் மூலம்தான், அதுமாதிரியான தவறுகளுக்கு நாம் மீண்டும் போகாமலிருக்க முடியும். அதுமட்டுமல்ல, மற்றவர்களும் தங்கள் பிழைகளைப் பேசும் தளர்வான சூழ்நிலை உருவாகும். அதன்மூலம்தான் ரணங்கள் ஆறும்...

பெரிசு முகத்தில் சிந்தனை ஓடுவதைக் கவனித்து இதையும் சொன்னேன்.

லண்டனில இருக்கிற தமிழ்நாட்டுக்காரர் ஒருத்தர் இந்தப் பிரச்சினை பற்றி இணையத்தில எழுதியிருக்கிறார். அதையும் கேளுங்கோ.

ஈழத்தமிழர்களிடம் சிங்களத்தரப்பு, இந்தியத்தரப்பு, தமிழ்நாட்டுத்தரப்பு எல்லாமே மன்னிப்புக் கேட்டாக வேண்டும். இதுமாதிரி தமிழ்த்தரப்பும் மன்னிப்புகளைக் கேட்டாக வேண்டியிருக்கு. குறிப்பாக 1990 ஆம் வருஷம் முஸ்லிம்களைத் துரத்தினதுக்குப் பெரிய மன்னிப்பை அவர்களிடம் தமிழ்ச் சமுதாயமே கேட்க வேண்டும். அது ஒரு அமைப்போட தவறு மாத்திரமல்ல. விடுதலைப் புலிகள்ங்கிற அமைப்பு இங்கே பெரிய தவறு செய்திருக்கு. ஆனால் இது தமிழ்ச் சமுதாயம் மன்னிப்புக் கேட்க வேண்டிய விஷயம். அதுமாதிரி நிறையச் சொல்லலாம். அநுராதபுரக் கொலைகள், பொலநறுவைக் கொலைகள் மற்றும் தமிழ்த் தரப்பால் நடந்த கொலைகள் எல்லாவற்றுக்கும் தமிழ்ச்சமூகம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

என்று எழுதியிருக்கிறார். இதிலுள்ள தார்மீகமும் மனிதாயமும் நமக்குப் புரியவில்லை என்றால்... நாம் இந்த நூற்றாண்டுக்கே வரப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்கு நிம்மதி

வெற்றியாளனைப் போல் நடந்துகொள்ளுங்கள்

வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடிக்க ஒவ்வொருவருக்கும் இந்தத் தீவிர நம்பிக்கையே துணை செய்திருக்கிறது!

எதை அடைய வேண்டும் அல்லது எந்தத் துறையில் வெற்றி பெற வேண்டும் என்று நீங்கள் தேர்ந்தெடுத்தாலும் சாதிக்க நினைத்ததை நீங்கள் செய்து முடிப்பீர்கள்; எதை அடைய விரும்புகிறீர்களோ, அதை அடைவீர்கள். ஆனால் நீங்கள் கட்டாயம் கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டும்:

1.உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பதைப் பிசிறு இல்லாமல் கச்சிதமாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

2.அதை உங்களால் அடைய முடியும் என்று தீவிரமாக நம்புங்கள்.

3.அதற்கான விலையைக் கொடுக்குமளவுக்கு அதைத் தீவிரமாக விரும்புங்கள்.

4. உத்தரவாதமுள்ள வெற்றி முறைகளைக் கையாளுங்கள். நீங்கள் எதை விரும்பினாலும் அதை உங்களால் அடைய முடியும்!

வெற்றி பெறுவது அவ்வளவு சுலபமாக இருக்குமேயானால், இன்னும் ஏராளமான பேர் அதை அடையலாமே,ஏன் அடையவில்லை?

எப்படி அடைவது என்று தெரியாததால்தான் அவர்கள் அடையவில்லை. கண்டிப்பாக வெற்றி தரும் என்று நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளை அவர்கள்ள கையாளுவதில்லை-தோல்வி முறைகளையே அவர்கள் பின்பற்றுகிறார்கள். கண்டிப்பாக வெற்றிதரும் என்று நிரூபிக்கப்பட்ட முறைகள் எவ்வாறு வெற்றிக்கு உத்தரவாதம் ஆகுமோ, அதுபோல அவர்கள் கடைப்பிடிக்கும் தோல்வி முறைகள் தோல்விக்கு உத்தரவாதம் அளிக்கின்றன!

ஒரு கருத்தாய்வின்போது 600 கல்லூரி மாணவர்களிடம் அவர்களுடைய மிகப் பெரிய பிரச்சினை எது என்று கேட்கப்பட்டது. நான்கில் மூன்று பேர் தந்த பதில்:'தன்னம்பிக்கை இல்லை."

எண்ணிப் பாருங்கள்! கல்லூரி மாணவர்கள் நான்கில் மூன்று பேர் தன்னம்பிக்கை இல்லை என்பதைத் தங்களுடைய மிகப் பெரிய பிரச்சினையாக ஒப்புக்கொள்கிறார்கள். தன்னம்பிக்கை இல்லாவிடில் எவ்வளவுதான் கல்லூரியில் படித்து என்ன பயன்? நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் தலைவரான டாக்ரர் வால்ட்டர் ஸ்காட் என்ற மனோதத்துவ நிபுணர் கூறியது நினைவிருக்கிறதா? வெற்றியோ தோல்வியோ திறமையின் விளைவாக ஏற்படுவது அல்ல. மனத் திண்மையை, அணுகு முறையைப் பொறுத்தது. உங்கள் அணுகு முறை எப்படிப்பட்டது?

உலகத்தில் உள்ள அத்தனை பட்டப் படிப்புப் படித்திருந்தாலும் உங்களால் வெற்றி பெற இயலும் என்ற தீவிர நம்பிக்கை இல்லாவிடில் அவற்றால் ஒரு பயனும் இல்லை.

நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நீங்கள் தீவிரமாக நம்பினீர்களேயானால்- அதற்குத் தேவையான படிப்பறிவு இப்போது உங்களிடத்தில் இல்லாவிடினும்- நீங்கள் முன்னர் கற்பனைகூடச் செய்து பார்த்திராத வகையில், எதிர்பாராத வகையில் தானே வந்து அமையும். தேவையான படிப்பறிவு மட்டுமல்ல, உங்களுடைய வெற்றியில் உங்களுக்குள்ள நம்பிக்கை மேலும் தீவிரமாக ஆக ஆக உங்கள் வெற்றிக்கு என்னென்ன தேவையோ அவை அனைத்தும் படிப்படியாகத் தானாகவே கிடைக்கும்.

இது வாழ்க்கையின் சட்டம்: காரியத்தை செய்யமுடியும் என்ற நம்பிக்கை மட்டும் இருந்துவிட்டால் அதைச் செய்து முடிப்பதற்கான அத்தனை அம்சங்களையும் அந்த நம்பிக்கையே வரவழைத்துக் கொடுத்துவிடும்.

ஆயினும் ஏதோ ஒரு அசட்டுக் காரணத்தின் விளைவாக மனிதர்கள் தங்களிடத்தில் நம்பிக்கை வைக்கத் தவறிவிடுகிறார்கள்.

தன்னம்பிக்கை இன்மையே அமெரிக்காவில் இன்று உள்ள மனோவியாதிகளில் பரவலானது என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். மனோதத்துவ நிபுணர்கள் கணிப்பின்படி மனிதர்கள் தங்களுக்கு நேரும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இயலாமல் இருப்பதற்குக் காரணம் அந்தப் பிரச்சினை மிகச் சிக்கலானது என்பது அல்ல, தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விடுவதுதான்!

இடையூறுகள் ஏற்படத்தான் செய்தன. ஆனால் அவற்றால் அவர்களின் வெற்றிப் பயணத்தைத் தடை செய்ய முடியவில்லை. ஊனமுற்றவராக இருக்கிறோமே என்றும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றோமே என்றும் அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அதிர்ஷ்டம் அடிக்கவில்லையே என்று அவர்கள் புலம்பிக்கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. நீங்கள் பிற்படுத்தப்பட்டவராக இருக்கலாம், ஊனமுற்றவராக இருக்கலாம், அதிர்ஷ்டக் கட்டையாக இருக்கலாம். ஆனால் கஷ்டங்களிடம் நீங்கள் தோல்வியடையத் தேவையில்லை.

கேளுங்கள்: வாழ்க்கை உங்களுக்குக் கடன்பட்டிருக்கவில்லை. நல்லதொரு வாய்ப்பைத் தர வேண்டும் என்று அதற்குக் கட்டாயமில்லை., நீங்கள்தான் வெளியில் புறப்பட்டு வாய்ப்பை உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும். எப்படி? நீங்கள் கையில் வைத்திருக்கிறீர்களே கட்டுரை, அதில் விவரிக்கப்பட்டுள்ள வெற்றிமுறைகளை நீங்கள் கையாளுவதன் மூலம்தான்.

நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை உங்களை நீங்களே கவர வேண்டும். உங்களை உங்களால் கவர முடிந்தாலொழிய, பிறரைக் கவர முடியாது. உங்களுடைய கருத்துக்களை அவர்கள் ஏற்கும்படி செய்யுங்கள்.

கண்ணாடி முன் போய் நின்று கொள்ளுங்கள். உங்களுக்கு உற்சாகம் உண்டாகும் வரையில் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்யுங்கள். உலகில் மிகப் பெரிய வெற்றிகளைச் சாதித்துள்ள சிலர் இதை ஒவ்வொரு நாளும் செய்கிறார்கள்.

உங்களைப் பற்றி வானொலி அல்லது டி.வி. விளம்பரம் எழுதுங்கள். ஒவ்வொரு நாளும் பலமுறை உங்களுக்கு நீங்களே படித்துக் காட்டுங்கள். வெற்றியாளர்களில் பலர் தன்னம்பிக்கையை அதிகப்படுத்திக் கொள்வதற்காகக் கடைப்பிடிக்கும் உத்திகளில் இதுவும் ஒன்று.

அப்போதுதான் ஒரு இலட்சம் ரூபாய் வியாபாரத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு வந்தாற்போன்ற தெம்புடன் எப்போதும் நடந்துகொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கைக் கண்ணோட்டத்தையே இது மாற்றிவிடும். நடையிலும் பேச்சிலும் செயலிலும் பெரிய சாதனையாளரைப் போல் நடந்து கொள்ளுங்கள். உங்களிடத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் குறிப்பிடத்தக்க மாறுதலை உங்களைத் தெரிந்தவர்கள் எல்லோரும் உடனே கவனிப்பார்கள். மிகமிக முக்கியமான இந்த வெற்றிக் கண்ணோட்டத்தை அடையவும் வெளிப்படுத்தவும் இதுதான் மிக வேகமான நிச்சயமான வழி. செய்து பாருங்கள்- இலட்ச ரூபாய் வியாபாரத்தை இப்போது தான் வெற்றிகரமாக முடித்த தெம்புடன் நடவுங்கள், செயல்படுங்கள்.

வெற்றியாளனைப் போல் காட்சி கொடுங்கள்... வெற்றியாளனைப் போல் பேசுங்கள்...வெற்றியாளனைப் போல் நடந்துகொள்ளுங்கள்.... வெற்றியாளனைப் போல் சிந்தியுங்கள். நீங்கள் ஒரு வெற்றியாளர் என்று தீவிரமாக நம்புங்கள். கண்டிப்பாக வெற்றியடைவீர்கள்!

'உலகத்திலேயே மிகப் புத்திசாலியான பெண்மணி' என்று புகழப்பட்ட திருமதி ரெஜினால்ட் ∴ பெல்லோஸ் தந்திருக்கும் அருமையான யோசனைகளைப் பின் பற்றுங்கள். ஒரு பெரிய விருந்துக்கோ கூட்டத்துக்கோ செல்லு முன்பு வாசற்படியில் ஒரு வினாடி நின்று ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். அங்கே கூடியுள்ள ஒவ்வொருவரும் உங்களுக்கு ஏற்கனவே பழக்கமானவர் என்ற பாவனையுடன் நுழையுங்கள். நட்பும் ஊக்கமும் கலந்த அணுகுமுறையுடன் நீங்கள் செல்வீர்கள்.

உங்களுடைய பார்வையில்பட வேண்டும் என்று மற்றவர்கள் ஆவல் கொள்ளும் அளவுக்கு உங்களிடத்தில் ஊக்க ஒளி மிளிரட்டும்.

முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி 307



போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 10.02.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-307
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.305 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

S.டிலக்ஷி, இல.06, ஆனந்தா ஸ்டோர்ஸ், சந்தை வீதி, வவுனியா.

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. செல்வி தனுஜா பத்மநாதன், 5A, வ/சைவப்பிரகாஷா மகளிர் கல்லூரி, வவுனியா.
02. யே.நிஜேரா, இல.145, 3 ஆம் ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை.
03. M.J.பெர்னாண்டோ, 30/3 புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.
04. இரா.விமலநாதன், தேவாலய வீதி, முறக்கொட்டாஞ்சேனை. (கி.மா).
05. சி.தியாகினி, எம்.ஓ.எச்.விடுதி ஒழுங்கை, கல்முனை.
06. சி.மகிஷினி, இளையதம்பி வீதி, அளவெட்டி தெற்கு.
07. திருமதி ஜெயசோதி முகுந்தாதேவி, 93.2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு -06.
08. S. உதயணன், 117, பிரதான வீதி, திருகோணமலை.
09. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் -03.
10. பூ.நிவேதிகா, புனித மரியாள் மகளிர் மகா வித்தியாலயம், ஊர்காவற்துறை.

இடமிருந்து வலம்

01. இந்துக்களின் முக்கிய தினமொன்று.
07. அகம் என்பதன் எதிர்ப்பதம்.
13. சிலர் இது பார்த்தே நற் காரியங்களில் ஈடுபடுவர். (குழம்பியுள்ளது).
20. பாடல் ஒன்றின் பகுதி. (குழம்பியுள்ளது)
27. தானியமொன்று (குழம்பியுள்ளது)
31. இதை நிலை நாட்டுவதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளது.
34. சரம் என்றும் கூறலாம்.

குறுக்கெழுத்துப் போட்டி 305- விடைகள்

மேலிருந்து கீழ்

01. பறப்பதற்கு உதவும்.
02. பூமி என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
03. உலகம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
06. அர்ஜுன் நடித்த திரைப்படமொன்று.
16. பாம்பு. (குழம்பியுள்ளது)
23. சுபாவம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்து)
25. பஞ்சபூதங்களில் ஒன்று. (தலைகீழ்)

பேனாக் கத்தி

இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சியில் பல பழைய பொருட்கள் வழக்கொழிந்து வருகின்றன. சில மட்டுமே நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து புதிய மாற்றங்களைத் தாங்கி வெளிவருவதும், அதனால் சந்தை வாய்ப்பை தக்கவைத்துக்கொள்வதும் நிகழ்வு. அத்தகைய வரிசையில் புதியதாக மாற்றம் பெற்றிருப்பது பலரது அன்றாட பயன்பாட்டில் இருக்கும் பேனாக் கத்தி. இதில் செய்யப்பட்டிருக்கும் புதிய வசதி 32 ஜிபி அளவு நினைவகத்துடன் கூடிய யுஎஸ்பி பிளாஸ் டிரைவ் (கையடக்க தகவல் சேமிப்பகம்), புளூடுத் தொழில்நுட்பம் மற்றும் லேசர் ஸ்கேனர் ஆகியவையும் வழக்கமான கத்திகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் பிளாஷ் டிரைவில் சேகரிக்கப்படும் தகவல்களை பாதுகாக்க பயனரின் கைரேகையைச் சோதித்து அனுமதிக்கும் வசதியும் உள்ளது.

இக்கத்தி கடந்த வாரம் லாஸ் வேகாஸ் நகரில் நடந்த மின்னணு நுகர்வோர் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு துவக்கத்தில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விலை சுமார் 250 யூரோக்கள் இருக்கும் என தெரிகிறது. பேனாக் கத்தியை முதன்முதலில் உருவாக்கிய விக்டோரிநாக்ஸ் நிறுவனமே இதனையும் வெளியிட்டிருக்கிறது. 1884இல் கார்ல் எல்ஸ்னர் என்பவரால் உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் அவரது பேரன் சார்லஸ் எல்ஸ்னரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஆண்டுக்கு 13 மில்லியன் கருவிகளைத் தயாரித்துவரும் விக்டோரிநாக்ஸ், இதில் பெரும்பாலானவற்றைச் சுவிட்சர்லாந்து இராணுவப் பயன்பாட்டிற்கே விற்பனை செய்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதைகள்

பொன் மனம்

சுகந்தி, பிரபல சோப் நிறுவனம் ஒன்றின் மேற்பார்வையாளர். 8.00 மணிக்கெல்லாம் ஆஜராகிவிட வேண்டும். இல்லையென்றால், மேலதிகாரி விஜயன், மைனஸ் கண்ணாடி ஊடாக அவளைப் பார்க்கும் பார்வையில் வெருண்டுதான் போவாள்.

ஆபிஸ் அவனுக்கு கார், வீடு என்று சகல வசதிகளையும் வழங்கியிருந்தது. சொகுசாக காரில் வந்து இறங்கும் விஜயனுக்கு, இரண்டு பஸ் மாறி, நெரிசலில் இடிபட்டு, நொறுங்கி, கசங்கி வரும் சுகந்தியின் நிலை என்னவென்று தெரியும்.

யாரிடமும், யாரும் கதைக்க முடியாதபடி எந்நேரமும், அலுவலகம் களை கட்டியிருக்கும். அவரவர் வேலை அவர்கட்கு. மதிய நேரம் மட்டுமே கலாவைச் சந்திக்க நேரும்.

சுகந்தியுடன் கூடப் படித்த கலாவை தெருவில் சந்திக்க நேரிட்டபோது, தான் முதல் வேலை செய்யும் இடத்தில் ஏதோ பிரச்சினையென்றும், வேறு எங்காவது நல்ல இடத்தில் வேலையொன்று எடுத்துத் தருமாறும் கெஞ்சிக் கேட்டாள் கலா.

2,3 நாட்களுக்குப் பின், மேலதிகாரியைச் சந்திக்க நேரிட்டபோது அவளைப்பற்றி அவரிடம் கூற, அவரும் கலாவைத் தன்னை வந்து பார்க்கும்படி கூறினார். ஏனெனில் சுகந்தியின் மேல் நிறைய நம்பிக்கையும், பாசத்தையும் வைத்திருந்தார். சந்தனப் பொட்டும், கோல்ட் பிறேம் போட்ட கண்ணாடியுமாக வளையவரும் மேலதிகாரி சதாசிவம் ஐயா கண்டிப்பும், அன்புமாக மாறி மாறி இருப்பார். எப்போது அன்பாக இருப்பார், எப்போது பாய்வார் என்பது தெரியாததால் எல்லோரும் தங்கட தங்கட வேலைகளையே கவனிப்பர். வேலைக்குச் சேர்ந்த அன்றே சுகந்தியைக் கவனித்து விட்டார்.

அன்பான, அழகான, அடக்கமான பெண். ஆனால் ஏதோ ஒரு சோகம். என்ன என்பது இதுவரைக்கும் தெரியாது.

ரமேஸ் சுகந்தியின் இருக்கைக்கு அடுத்த ஷீட்டில் இருப்பவன். வசதிக்குக் குறைவில்லை. வீட்டில் பெண் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சுகந்தியைப் பார்த்தது முதல், அவள்மேல் உயிரையே வைத்திருந்தான். ''அடைந்தால் மகாதேவி'' என்பது போல் அவன் நிலையரயிற்று.

ஒரு நாள் வரவில்லை யென்றாலும், என்ன ஏது என்பதை அறிந்து கொண்டான். கலாவிடம் பேச்சுக் கொடுத்து விஷயத்தைக் கறந்துவிடுவான். கலாவுக்கு ஓரளவு தெரியும். ஆனால் சுகந்தியிடம் சொன்னாளில்லை. சுகந்தியின் அருகில் போய் யாரும் கதைக்க முடியாது. தன் வேலையிலேயே முழுக் கவனத்துடன் இருப்பாள்.

ஆனால் சுகந்தி ஏற்கனவே திருமணமாகி, ஒரு குழந்தைக்குத் தாய் என்பது அந்த இடத்தில் யாருக்கும் தெரியாது.

நாட்கள் நகர்ந்தன. ரமேஸ் ஏதோ ஒரு பிரச்சினை அவனை வாட்டுவதை அவனது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டின.

வீட்டில் உள்ளவர்களும் கேட்டுக் கேட்டுப் பார்த்து விட்டுவிட்டார்கள். ஒரே மகன் வேதனையில் உழல்வதை எந்த தாய்தான் பார்த்துக் கொண்டிருப்பாள்.

ரமேஸின் தாய் ஒரு நாள் கோயிலுக்குப் போய் வந்துகொண்டிருந்த போது, தற்செயலாக ரமேஸின் நண்பன் கோபியைக் கண்டு உரையாடியபோதுதான் சுகந்தியின் மேல் உள்ள காதலால் ரமேஸ் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிப்பதைக் கோபி விபரமாகக் கூறினான்.

வீட்டுக்கு வந்த தாய், தந்தையிடம் கூறி, சுகந்தியின் வீட்டு விலாசத்தைப் பெற்று லீவு நாளான ஒரு நாளைப் பார்த்து சுகந்தியின் வீட்டை அடைந்தனர்.

வீட்டை அடைந்த தாயும், தந்தையும் சுகந்தியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர் என்றே கூறவேண்டும். அம்மன் சிலையொன்று தம் அருகே வந்ததோ என நினைத்து எழுந்து வணங்கினர்.

சுகந்தியையே உரித்து வைத்தாற்போல அவளுடன் ஒட்டி நின்ற சிறுமியைச் சகோதரி என்றே நினைத்தனர். ரமேஸின் தாய், தந்தை என்பதை அறிந்த சுகந்தி வரவேற்று உபசரித்தாள்.

இவர்களும், இவளைப் பற்றிய முழு விபரத்தையும் அறியாததால் தாம் வந்த விடயத்தைக் கூறினர். அதிர்ந்துதான் போனாள். ''தேடி வந்த செல்வம்''

என்பதனை அறியமாட்டாள்.

அம்மா நான் சொல்வதைக் கேளுங்கள். நான் ஏற்கனவே திருமணமானவள். இது என்னுடைய பிள்ளை. என் கணவர் விபத்தொன்றில் இறந்துவிட்டார். அவள் கண்கள் கலங்கி விட்டன. இவர்களுக்கும் என்ன சொல்வது, செய்வது என்று தெரியவில்லை.

ரமேஸ் ஏன் தெரியாமல் நடந்தான். சுகந்தியும் குழம்பித்தான் போனாள்.

முன்பே நிறுவனத்தில் தன் கதையைச் சொல்லியிருக்கலாமோ என நினைத்தாள். மறுமணம் என்பதில் அவளுக்கு இஷ்டமில்லை. அதைவிடத் தன் பிள்ளை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தாள்.

அடுத்து வந்த சில தினங்களில் ரமேஸ் மிகுந்த வேதனையுடன் காணப்பட்டான். பார்க்கும் போதெல்லாம் தான் ஏதோ குற்றம் செய்தவன் போலானான்.

சுகந்தி அன்று மதிய வேளையில் கலாவிடம் நடந்ததைக் கூறினாள். கலாவும் தன்னால் இயன்றளவு கூறிப் பார்த்தாள். சின்ன வயது பிற்காலம் ரமேஸ் உன்னை வைத்து நன்றாகப் பார்ப்பான். சுகந்திக்கு எங்கோ படித்த கவிதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

''மனசைப் பூட்டி
முந்தானையில் சாவிக்
கொத்தை முடிந்த பின் - திரும்பவும்
கையில் ஏன் எடுக்கிறாய். ''
கண்ணில் நீர் கோர்த்தது.

கலாவுக்குத் தெரியாமல் மெல்லத் துடைத்தாள். வருடங்கள் கடந்தன. எத்தனையோ மாற்றங்கள். கலாவுக்கும் திருமணமாகிவிட்டது. தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. ஒரு பகுதிக்கு மேலதிகாரியாகச் சுகந்தி நியமிக்கப்பட்டுவிட்டாள்.

வீடு, கார் என நிர்வாகம் கவனித்தது. மாதத்தில் ஒரு முறையாவது ரமேஸை சுகந்தி காண்பாள். திக்கென்று இருக்கும். ரமேஸ் வீட்டில் எவ்வளவோ கூறிப் பார்த்தனர். அவன் மனம் மாறுவதாக இல்லை.

ஒரு நாள் காலையில் சதாசிவம் ஐயா, தலைதெறிக்க ஓடி வந்தவர், ரமேஸுக்குக் காய்ச்சலாம். வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம் என்று கலவரத்துடன் கூறினார்.

திக்கென்றது சுகந்திக்கு.

இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்த கலா, சதாசிவம் ஐயாவிடம் சுகந்தி - ரமேஸ் கதையைக் கூறி, ஐயா ரமேஸ் சுகமடைந்து வந்த பின், இவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதே நமது முதல் வேலை என்றாள். எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் குதித்தனர்.

ஆனால் அன்று பகலே யாரையும் நோகாது யாரையும் ஸ்ரீஎதிர்பார்க்காது யாரிடமும் விடைபெறாது, அவன் உயிர் பிரிந்தது. சுகந்தி மௌனமாகத் தன் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினாள்.

(யாவும் கற்பனை)

எந்தன் கனவில் இன்று...

"நித்தி உங்கடை போனை ஒருக்காத் தாறியளே கொஞ்ச நேரத்திலை கொண்டு வந்து தரலாம்" பக்கத்து வீட்டுக்காரரிடம் கெஞ்சினாள் வைதேகி. "என்னடி போன் கேட்கிறாய்.. ஆரோடை கதைக்கப் போறாய்?" "அந்த ஊதாரியோடை தான்" "இந்தா கொண்டு போ. கதைச்சுப் போட்டுக் கவனமாக் கொண்டு வா? உங்கை வேறை ஒண்டேயும் போடாதேங்கோ"

அமத்திப் "ஓமக் கா ஓடினாள்.

கான்போனை ரமேஷிடம் கொடுத்தவள், அவள் காலைப் பிடித்தபடி கீழே இருந்தாள். நீண்ட நேர முயற்சியின் பின் "ஹலோ" "ஓம் சொல்லுங்கோ. யார் நீங்கள்" "டேய் குரலிலை விளங்கலையேடா. நான் தான்ரா உன்ரை ரமேஷ் கதைக்கிறன்" "ஆர் ரமேஷா? எந்த ரமேஷ். எனக்குங்களைத் தெரியலை. ப்ளீஸ் இங்கிலிஸிலை கதையுங்கோ. எனக்குத் தமிழிலை கதைக்கக் கஷ்டமாய்க் கிடக்கு" "டேய் சுதன் நான் உன்ரை... உன்னை..." இதற்கு மேல் அவனால் முடியவில்லை. "ரமேஷ் இஞ்சை பார் அழுகிறதை எல்லாம் நிப்பாட்டு. நான் இஞ்சை வந்து ரெண்டு வருஷம் தானாகுது. எனக்கும் சரியான கஷ்டம். இஞ்சை வேலையொண்டும் செய்யேலாது. தயவு செய்து காசு மட்டும் கேட்காமல் வேறை ஏதும் கேள்" வெளிநாட்டிலை நிக்கிறவனிடம் காசைத் தவிர வேறை எதைக் கேட்க முடியும்" தன்னைத்தானே கேட்டுவிட்டு "சரி சுதன் எப்பிடிச் சுகமா இருக்கிறியே? நானுன்னட்டைக் காசு கேட்கேலை. உன்னுடைய நலத்தையெண்டாலும் சொல்லனடா அப்பா" "இஞ்சை பார் ரமேஷ் என்ரை நலத்தை விசாரிக்க ஆயிரம் பேர் இருக்கினம். இனிமேலும் என்னை டிஸ்ரப் பண்ணாதை. போனை வை" அதிர்ந்து விட்டான் ரமேஷ். "யாரோ பக்கத்தில இருக்கிறவர்களிடம் கடன் வாங்கி கிற்காட்டுப் போட்டு அவனிடம் கதைத்தால் சீ... இவனும் சராசரி மனிசனாப் போனான்..." ரமேஷின் சலிப்புக்கு ஆறுதல் வைதேகி மட்டும்தான்.

ரமேஷின் நினைவு நரம்பு ஞாபக நரம்பிடம் சென்றது. ஞாபக நரம்பு தன் தொழிலைத் தொடங்கியது.

சிறுவயதிலே தாய் தந்தையை இழந்து தனியாய் வாழ்ந்த ரமேஷிடம் கைக் குழந்தையுடன் வந்து சேர்ந்தவன் தான் சுதன்.

அன்றிலிருந்து ரமேஷ் வைதேகியின் அன்னையாகி விட்டான். குழந்தையாய் இருந்தவள் பெரியவளாகியும் சுதனை ரமேஷின் சினேகிதன் என்றும் தான் ரமேஷின் தங்கையெனவுமே வாழ்ந்தாள். தங்கையிடம் சிறிதும் அன்பில்லாத சுதன் ஊரைச் சுற்றிக் கொண்டு திரிந்தான்.

ஒருநாள் அழுதபடி ரமேஷிடம் வந்த வைதேகி" அண்ணா உன் பிரண்ட் சுதனை வீட்டாலை கலைச்சுவிடு" என்றாள். ரமேஷ் ஆடிப்போய் விட்டான். "ஏனடா செல்லம்" அவன் என்னைத் தன்னுடைய நண்பர்களோடை கதைச்சு சினேகிதம் பிடிக்கட்டாம். அவங்களெல்லாம் வெளிநாட்டுக் காறராம். என்ரை சினேகிதத்திலை காசு தருவாங்களாம். கொஞ்ச நாளாய் எனக்குக் கரைச்சல் குடுக்கிறான்" 'சரி வைதேகி நீ உள்ளுக்கை போ. அவன் வாறான் நான் கேட்கிறன்"

வீடுவந்த சுதனிடம் விசாரித்தான். அவனும் அதனை ஒப்புக்கொண்டான். "டேய் ஏன்ரா உனக்குந்தக் குறுக்குப் புத்தி. இனி உன்னை இஞ்சை வச்சிருக்கேலாது. கெதியா கிளியரன்ஸ் அலுவலைப் பார். வைதேகீன்ரை கல்யாணத்துக்கெண்டு பாங்கிலை போட்ட காசு கொஞ்சம் கிடக்கு. நீ வெளிநாட்டுக்குப் போ" நான் நினைச்சதை அப்பிடியே சொல்லிப் போட்டாய். ரொம்பத் தாங்ஸ்டா. வைதேகீன்ரை விஷயத்தைப் பற்றி நீ யோசிக்காதை. அவள் என்ர ரத்தமடா. நான் செய்யாமல் அவளுக்கு ஆர் செய்யிறது. அங்க போன உடன உன்ரை தொழிலுக்கும் நான் உதவி செய்வன்" சுதனின் வார்த்தைகளில் ரமேஷும் வைதேகியும் மகிழ்ந்தனர். அன்றுதான் அவளுக்கு சுதன் அண்ணன் என்பதும் தெரிய வந்தது.

அன்று சுதனைக் கப்பலேற்றிவிட வைதேகியும் ரமேஷும் அவனுடன் சென்றனர். திரும்பி வரும் வழியில் பெரிய விபத்து. ரமேஷின் உயிர் தப்பி விட்டது.

கொழும்பில் சுதன் நிற்கும்போது அடிக்கடி ரமேஷையும் தங்கையையும் நலம் விசாரிப்பான். என்று வெளிநாட்டில் காலடி வைத்தானோ அன்றிலிருந்து அவன் தொடர்பேயில்லை. ரமேஷின் பணம் சுதனோட முடிந்துவிட்டதால் இன்று அவன் அன்றாடம் உணவுக்கே அல்லாடுகிறான். நிறம் மாறிய சட்டையுடன் வைதேகி திரியும் போதெல்லாம் அவன் மௌனமாய் அழுவான். "கலர் கலராய்ப் போட்டவள் இண்டைக்கு..." அவன் ஏக்கங்களுக்கு ஆறுதல் வைதேகியின் அன்பு மட்டும் தான்" அண்ணா நீ கவலைப்படாதை. உன்ரை நல்ல மனசுக்குக் கடவுள் நிச்சயமாய் ஒரு வழி விடுவார். நீ எதைப்பற்றியும் யோசிக்காதை என்ன" அருகில் வந்து அவன் தலைகளைக் கோதி விடுவாள்.

வாசலில் வாகனச் சத்தம் கேட்டது. ரமேஷின் ஞாபக நரம்பு ஸ்ரைக் பண்ணி விட்டது. அந்தக் ஹையஸில் இருந்து ரமேஷின் மாமன் மகன் கோபு இறங்கி வந்தான். "இவன் வெளிநாட்டாலை எப்ப வந்தவன்" நினைத்தபடி மெல்ல எழுந்தவன் அப்படியே விழுந்துவிட்டான். சுதன் கொடுத்த பரிசு விபத்தில் உயிர் தப்பிக் கால் போய் விட்டது ரமேஷுக்கு. ஓடி வந்து ரமேஷை நிலத்திலிருந்து தூக்கிவிட்ட கோபு அவனை வாழ்க்கைப் பள்ளத்திலிருந்தும் தூக்கிவிட வந்ததைச் சொன்னபோது ரமேஷும் வைதேகியும் இறைவனுக்கு நன்றி சொன்னார்கள்.

"டும்... டும்... டும்..." மேளச் சத்தத்தோடு வைதேகி கழுத்திலே தாலி ஏறியது. பணக்கார மருமகளான தங்கையின் அதிர்ஷ்டத்தை எண்ணி ரமேஷ் மகிழ்ந்திருந்த வேளை "சுதனைத் திருப்பி அனுப்பி விட்டார்களாம்" சுதனது காதலியின் மூலம் மண்டபத்தில் உலவிய வார்த்தை ரமேஷின் காதுகளிலும் விழுந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சிந்தித்துப் பார்க்க...

குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

உலகம் மாறிவிட்டது என்றோ கெட்டுவிட்டது எனச் சொல்பவர்களைப் பார்த்தால் அழுவதா, சிரிப்பதா? என்று எதுவுமே தோன்றவில்லை.

''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்பது பாடம். ஆகவே உயர்ந்தவர்கள் காலப்போக்குக்கு அடிபட்டுப் போகாமலிருப்பதால்தான் உயர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். தாழ்ந்த சிந்தனை உடையவர்களே உயர்ந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாமலும், சிந்திக்கும் தன்மை அற்றவர்களாகவும் சமூகத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூற வந்த வள்ளுவப் பெருந்தகை.

''பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது''

(823)

பல நல்ல நூல்களைக் கற்றபோதிலும் அவற்றின் பயனாக நல்ல மனமுடையவராகப் பழகுதல் உள்ளன்பினால் மாட்சியடையாதார்க்கு இல்லை என்பதாம்.

✉ சிந்தியா, வன்னி மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?

-எஸ்.பத்மா, லண்டன்.

அந்த மக்களைப் பாதுகாக்கும் படியும் - அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதையும் பலரும் கூறுகின்றனர். இந்தக் கோரிக்கைகள் அரசாங்கத்திடம் மட்டுமே முன்வைக்கப் படுகின்றது. உண்மையில் மக்கள் அகப் பட்டிருப்பது புலிகளிடம்தான். எனவே புலிகளை நோக்கி கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டால் அந்த மக்களுக்கு விடு தலை கிடைக்குமா என்று பார்க்கலாம்.

✉ ஆனந்தசங்கரி ஐயா மீண்டும் தமது சொந்தத் தாயகமான கிளிநொச்சிக்குப் போவாரா?

-என்.வரதன், வவுனியா.

போகவேண்டும் என்றுதான் தனது சிங்கள அரசியல் நண்பர்களிடம் கூறுகின்றார். புலிகள் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். அதே நேரம், தபால் சேவையும் சீர் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் தனது கிளிநொச்சி விஜயம் சாத்தியமாகும் என்றும் கூறுகின்றார்.

✉ சிந்தியா, அமெரிக்காவின் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நடவடிக்கையில் உங்களைக் கவர்ந்த விடயம் எது?

-எஸ்.பரஞ்சோதி, இரத்தினபுரி.

ஒபாமாவுக்கும் - புஷ்ஷ¨க்கும் வேறுபாடில்லை என்று சிலர் கூறுகின்றனர். எனக்கென்னவோ ஒபாமா பதவியேற்று முழுமையாக ஒரு மாதமும் கடந்துவிடாத நிலையில் அப்படியொரு ஒப்பீடு சரியாகப் படவில்லை.

குவண்டனாமோ சிறைக் கைதிகள் தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்தும் அறிவிப்பு, ஈராக்கில் அமெரிக்கப் படைகள் தங்கியிருக்கும் விடயம், பாகிஸ்தானில் பயங்கரவாதம் இருந்தால் நடவடிக்கை எடுப்பேன் என்ற முன்னறிவிப்பு, அமெரிக்கா வின் பொருளாதாரத்தின் சரிவை மக்களிடம் வெளிப்படையாகக் கூறியமை என பல விடயங்கள் வித்தியாசமாகத்தான் தெரிகிறது.

எதையும் ஆரம்பத்தில் முடிவு செய்யாமல், கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம்...

✉ புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஆங்காங்கே கிளம்பும் பேரினவாதக் கூச்சலை ஜனாதிபதி சமாளிப்பாரா?

-என்.சிவநாயகம், மட்டக்களப்பு.

பயங்கரவாதத்தை எதிர் கொண்டவருக்குப் பேரினவாதத்தை எதிர் கொள்வது பெரிய விடயமாக இருக்காது என்று பலரும் நம்புகின்றனர்.

ஆனாலும் தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை உண்டு. அதற்கு கௌரவமான தீர்வு காணப்பட வேண்டுமென்று ஓங்கிக் குரல் கொடுக்கும் அறிவுஜீவிகள் மிக அதிகமாக தங்களது பங்களிப்பைச் செய்ய வேண்டிய காலம் வந்துகொண்டிருக்கிறது.

அத்தகையவர்களின் பங்களிப்புக்கள் மட்டும்தான் பேரினவாத அழுத்தங்களைக் கடந்துவர ஜனாதிபதிக்கு உதவுமென நம்பலாம்.

✉ சிந்தியா, நீதிக்குக் கட்டுப்பட்டு பஸ் நடத்துநர்கள் சீருடை அணிவார்களா?

-ஆர்.சிவயோகம், மட்டக்குளி.

நீதிக்கும், சட்டத்துக்கும் கட்டுப்பட்டு ஒவ்வொருவரும் வாழ்ந்தால் நல்லதுதான். ஆனாலும் அது சாத்தியமாகவில்லையே. 24 மணி நேரமும் காவல் நிலையங்கள்

திறந்து வைக்கப்பட்டு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கவனித்தும் பிரச்சினை தீர்ந்தபாடில்லையே. நடத்துநர்களின் சீருடை விவகாரம் இருக்கட்டும், சாரதிகள் சட்டத்துக்கு அமைய நடந்தால் விபத்துக்கள் இருக்காதே சிந்தித்தீரா...

✉ சிந்தியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்திய ஹர்த்தால் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

-எம்.மாயவன், யாழ்ப்பாணம்.

அப்படி ஒரு முயற்சியை அவர்களை எடுக்க வைப்பதில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டது. பிடி கொடுக்காமல் நழுவிய கூட்டமைப்பினர் கடைசியில் பொறியில் அகப்பட்டுவிட்டனர். ஹர்த்தால் என்றனர். அப்படி எதுவும் தெரியவில்லை. மக்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. கூட்டமைப்புக்கு என்ன செல்வாக்கு தமிழ் மக்களிடம் உண்டு என்பதை அவர்களைக் கொண்டே தெரிந்துகொள்ள நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. கூட்டமைப்பினர் ஹர்த்தாலுக்காக ஒரு பொதுமகனைக் கூட சந்தித்து விளக்கமளிக்கவில்லை. அறிக்கை விட்டால் தமிழ் மக்கள் தாளம் போடுவார்கள் என்ற காலம் மலையேறிவிட்டது.

✉ சிந்தியா, எமது நாட்டின் சுதந்திரக் கொண்டாட்டங்களை நாமும் கண்டுகளிக்க முடியுமா?

-எம்.கயல்வழி, வெள்ளவத்தை.

மாலை மயக்கமோ மஞ்சள் முலாம் பூசியதுபோல் வான் பரப்பைப் பொன் மயமாக்கியிருந்தது. மனதைக் கவர்ந்து சென்ற அந்த மதிமுகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது அவன் கண்கள்.

வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த மாருதனின் மனதில் தோன்றி மறைகின்ற கற்பனையில்தான் எத்தனை மாயா ஜாலங்கள். கடந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதும், அவன் மனதிலுள்ள தாபத்தை மென்மேலும் வளர்ப்பதாகவே இருந்தன.

அந்தி வெய்யிலின் கதிர்கள் பட்டு அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் மின்னுகின்றபோது, கடற்கரையின் மணற்பரப்பில் முத்துக்கட்டிய சப்பறமொன்று

புரியாத உள்ளம்

அசைந்து வருவது மாருதனின் கண்ணில் பட்டதும், நிச்சயம் அது தேரல்ல மனதைக் கவர்ந்து சென்ற அந்த மங்கைதான் என்பது தெளிவானபோது அவன் உள்ளம் துள்ளிக் குதித்தது. 'நேற்று மாலை அவள் கை நழுவிச் சென்றபோது செய்வதறியாது நின்றுவிட்டேனே' என்று தன்னையே நொந்து கொண்டவனுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமாயின், அது என் அதிர்ஷ்டம்தான் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான். மனதுக்குள் ஒரு உற்சாகம் கரை புரண்டது. காத்திருக்க நேரமில்லை ஓடிச் சென்று அவளைக் கட்டியணைக்கத் துடித்தது கைகள். ஆனாலும், அந்த நினைவலைகள் மாறுமுன்னமே அவனருகில் வந்தபோதும் மண்பார்த்து நிற்கிறாளே! ஏனென்று புரிந்து கொள்ள முடியவில்லை அவனால்.

சில நிமிட மௌனத்திற்குப் பின் ''வெகு நேரமாகக் காக்க வைத்து விட்டேனோ''? அவள் கேள்வியிலிருந்த நளினம் முதல் நாள் நடந்தவைகளை ஞாபகப்படுத்துவது போலிருந்தது. ''தொட்டதுதான் தாமதம் சிட்டாகப் பறந்து விட்டாயே,'' ''என் பட்டான உடல் கட்டிழந்துவிட்டால் என்ன செய்வது? முட்டாள்களோடு என்னையும் சேர்த்து விட்டாயே! மலரைக் கசக்கி நுகரும் மடையனல்ல நான்'' அவன் வார்த்தையில் ஒரு கர்வமும் கம்பீரமும் தொனித்ததை அவதானித்தாள் கயற்கண்ணி. ''மங்கையர் உள்ளத்தை அளப்பதில் வல்லவர்தான் போங்கள்'' இன்னுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லை நீ'' என்றவன் அவள் கைகளைப் பற்றினான். பதிலேதும் சொல்லவில்லையவள். பஞ்சணைக்குப் பதிலாக அவள் நெஞ்சணையில் சாய்ந்திருந்தானவன். மஞ்சமாக அமைந்திருந்த புன்னை மலர்க்குவியலில் அன்னச் சிறகுகள் அடுக்கியிருந்தாலும், அத்தகையதொரு மென்மை கிடைத்திருக்காது போல் தோன்றியது அந்த மலர்ப்படுக்கை. கயற்கண்ணியின் கட்டழகில் மயங்கிக் கிடந்தானவன். அவள் முகத்தையே பார்த்தபடி அசைவற்று இருந்தவனின் முகத்தை உற்று நோக்கியவள், ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள் ''ஒன்றுமில்லை உன் கண்களில் தோன்றுகின்ற நீலம்தான் கடலில் பிரதிபலிக்கிறதோ? என்று பார்த்தேன்'' என்றவன், அதோபார் என்று அங்கே வெண்பட்டு மணற்பரப்பில் வளை தோண்டிக் கொண்டிருந்த சிறு நண்டுகளைக் காட்டினான் மாருதன். ''புரிகிறது! அவைகளிரண்டும் வளை அமைத்து வாழ்கிறதெல்லாம் மனம் ஒன்றிவிட்டதால்தான் என்றவள் மெல்லக் கண்ணசைத்தாள். உங்களுக்கும் அப்படியொரு ஆசை வந்துவிட்டால் என்பாடு?'' அவள் கூறி முடிக்கவில்லை நீண்டதோர் பெருமூச்சு வெளியானதைக் கவனித்தவள், ஏன் என்பதுபோல் புருவத்தை உயர்த்தினாள். நண்டுகளுக்காவது இத்தனை சுதந்திரம் இருக்கிறதே! அதை நினைத்தேன் என்றவன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் இழையோடி இருந்த விரக்தி தென்பட்டதும் அவள் கலங்கிப் போனாள். மலர்களையெல்லாம் தென்றல் தொட்டுத் தாலாட்டும்போது எங்களுக்குள் இடைவெளி இன்னும் நீடித்துக்கொண்டுதானே இருக்கிறது. காவலில்லாத மலர்த் தோட்டமானாலும் கண்ணியம் என்று ஒன்றிருக்கிறதே; அவள் சற்று நிதானமாகவே கூறினாள். ''நான் உன்னை ஏமாற்றிவிடமாட்டேன்'' அவன் அவளது இரு கைகளையும் இறுகப் பற்றிக்கொண்டு கூறினான். ''உங்களை நான் சந்தேகிக்கவில்லை'' என்றவள் அவனிடமிருந்த கைகளை விலக்கிக்கொண்டு மெல்ல எழுந்தாள் கயற்கண்ணி. திடீரென்று அவள் எழுந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனாலும், அதுவரை அவள் உள்ளக் கிடக்கை என்னவென்று

தருவது கற்பகன்

புரிந்துகொள்ள முடியவில்லை. கதிரவன் கடலில் மூழ்கியபோது அவள் அங்கு இருக்கவில்லை ஏன் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல யாருமில்லை. கடற்கரை சூனியமாகக் காட்சியளித்தது.

அணங்குடைப் பனித்துறைத் தொண்டி
-யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கினள்
-நுணங்கிழை
பொங்கரி பரந்த உண்கண்
அம் கலிழ் மேனி அசைஇய எமக்கே!

(ஐங்குறுநூறு174)

இலங்கையின் பிரஜைகள் ஒவ்வொருவரும் சுதந்திர தினக் கொண் டாட்டப் பங்காளிகள் என்பதை மறந்து விடாதீர்கள். பிரதான நிகழ்வுகளில் பங்கு கொள்பவர்கள் மட்டுமே சுதந்திர தினத் தைக் கொண்டாடுகிறார்கள் என்பது தவறு. பாதுகாப்பு நெருக்கடிக்குள் அகப்பட்டு தமது சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கு வதை விடவும், தொலைக் காட்சியில் சுதந்திரமான சுதந்திர தின நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதுதான் தற்போதைய நாட்டுச் சூழலில் நமக்குச் சுதந்திரமானது என்று நினைக்கிறேன்.

✉ நம்மையெல்லாம் சிரிக்க வைத்த நாகேஷ் அழ வைத்துப் பிரிந்துவிட்டது தாங்க முடியாத கவலையாக இருக்கிறது. என் அஞ்சலிகளை அவரது குடும்பத்தினரிடம் சேர்த்து விடுவீர்களா?

-மு.கௌரிதாசன், திருகோணமலை.

நகைச்சுவை மன்னன் நாகேஷ் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு கவலைதான். அவர் நகைச்சுவையோடு நின்றுவிடவில்லை. 'டிஸ்கோ' எனும் நடன வடிவத்தை சினிமாவில் அறிமுகப்படுத்திய நல்ல நடனமாடக்கூடியவர். அவரது வாரிசு ஆனந்தபாபு ஆடிய ''டிஸ்கோ'' நடனங்களுக்குச் சொந்தக்காரர். அதேபோல் குணச்சித்திர நடிகர், எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஆகிய நடிப்பு மேதைகளின் காலத்திலேயே கதர்நாயகனாகவும் தனது நடிப்பை



நாகேஷ்

வெளிக்காட்டியவர். இறுதிக் காலம் வரை சினிமாவில் யாருடனும் பகையை வளர்க்காதவர், நடன இயக்குனராக, நகைச்சுவை நடிகனாக, கதாநாயகனாக, வில்லனாக, குணச்சித்திர நடிகராக சினிமாவில் தனக்கென்று தனி இடம் பிடித்தவர். கமலஹாசனோடு நடிப்பதென்றால் அவருக்கு அலாதிப் பிரியமாக நடிப்பார். மறக்கமுடியாத கலைஞர்களில் நாகேஷ¨க்கும் ஒரு தனியிடம் நிச்சயம் உண்டு. நமது உள்ளங்களில் இருப்பதைப்போல்.

✉ இலங்கை அணியின் விடயத்தில் அடிக்கடி சுனாமி வந்து போகிறதே எப்படித் தடுக்கலாம்?

-எம்.எச்.பாரூக், மருதானை.

நீங்கள் எந்த அணியைப் பற்றி கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை. அநேகமாக கிரிக்கெட் அணியைப் பற்றித்தான் கேட்டிருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். இந்தியாவுடனான ஐந்து ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி தடுமாறுவதை சுனாமி என்று முடிவு செய்ய வேண்டாம். வெற்றி வரும்போது ஏற்றுக் கொள்கின்றோம். தோல்வி வரும்போது ஏற்க மறுக்கின்றோம். இந்திய அணியின் வெற்றி, இலங்கை அணியின் ஏதோ ஒரு பிழையை நமக்குப் புலப்படுகின்றது என்று ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது.

✉ சிந்தியா, உங்களைப் போல இரத்தம் வராமல் கடிக்க என்னாலும் முடியுமா?

-எஸ்.கலைவாணி, கண்டி.

என் கடிகளின் தொழில்நுட்பம் வேறு. நீங்கள் சொல்வது போல் கடிக்க இன்னும் கொஞ்சக் காலம் பொறுமை அவசியம். (அதாவது பல் செட்டை கழற்றி வைக்கும் வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி இயக்க முக்கியஸ்தர்கள் இருவர் பற்றி ஸ்கொட்லாண்ட்யார்ட் பொலிஸாரிடம் தகவல்கள் கோரப்படுகின்றன

இலங்கையில் படுகொலைக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இரண்டு தமிழ் இளைஞர்களைப் பற்றிய மேலதிக தகவல்களை இலங்கைப் பொலிஸார், லண்டன் ஸ்கொட்லாண்ட்யார்ட் பொலிஸாரைக் கோரவுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த இருவரும் புலி இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட முக்கியஸ்தர்களென்றும் தற்போது இங்கிலாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனரென்றும் தெரிய வருகிறது. இதற்கிடையில் பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்காக ஆயுதங்கள் கொள்வனவு செய்ய முயற்சி செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற வழக்குகளைப் பிரிட்டனில் எதிர்நோக்கியிருக்கும் சாந்தன் என்றழைக்கப்படும் அருணாசலம் கிறிசாந்தகுமார் என்பவரோடு இந்த இருவரும் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்றும் தெரிய வருகிறது. இதே குற்றச்சாட்டின் பேரில் மேலும் மூன்று இலங்கைத் தமிழர்களும் பிரிட்டனில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொலை புரிந்தவர்கள் அல்லது கொலைச் சந்தேக நபர்களென்று கருதப்படுபவர்களைத் தத்தம் நாடுகளுக்குக் கடத்துமாறு கடந்த இரண்டு வருடங்களுக்குள் 160 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் ஸ்கொட்லாண்ட்யார்ட் பொலிஸாருக்கு விடுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் 75 விண்ணப்பங்களும் 2007 ஆம் ஆண்டு 87 விண்ணப்பங்களும் பல்வேறு நாட்டுப் பொலிஸாரால் விடுக்கப்பட்டுள்ளன. தத்தம் நாடுகளில் பல்வேறு குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு பிரிட்டனுக்குத் தப்பிச் சென்றனரெனக் கருதப்படுபவர்கள் பற்றிய விபரங்கள் கோரி 2006 ஆம் ஆண்டு 538 விண்ணப்பங்கள் ஸ்கொட்லாண்ட் பொலிஸாருக்கு விடுக்கப்பட்டிருந்தன. கடந்த வருடம் இந்தத் தொகை 1067 ஆக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

தீக்குளித்து இறப்பதன் மூலம் வறுமையைப் போக்க முயன்ற சம்பவங்களும் உண்டு

-தமிழகப் பத்திரிகை 'தினமணி' சாடுகிறது

எல்லா திராவிட பாரம்பரியக் கட்சிகளுமே வெவ்வேறு காலகட்டங்களில் இதுபோன்ற தீக்குளிப்புக்களை ஆதரித்தன என்பதுதான் கசப்பான உண்மை. இப்படித் தீக்குளித்து இறப்பவர்களின் குடும்பங்களுக்கு பல லட்ச ரூபா நஷ்டஈடு கொடுப்பதென்ற கலாசாரமும் தொடங்கப்பட்ட பிறகு, பல்வேறு சந்தர்ப்பங்களில் சம்பந்தா சம்பந்தம் இல்லாதவர்கள் தீக்குளிப்பதன் மூலம் தாங்களும் குடும்பத்தின் வறுமையைப் போக்க முயன்ற சம்பவங்களும் உண்டு" என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளேடு வெளியிட்ட ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் முத்துக்குமார் என்ற இளைஞர் தீக்குளித்து இறந்ததையடுத்து எழுதியுள்ள நீண்ட ஆசிரியர் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறும் குறிப்பிட்டுள்ளது.

''அதைவிட உண்மை நமது தலைவர்களும் சரி, தங்களுக்காக இன்னின்னார் தீக்குளித்தார்கள் என்கிற செய்தி வெளியாவதை விரும்புகிறார்கள் என்பதுதான். தீக்குளித்து இறப்பவர்களிடம் எங்களுக்கு அனுதாபம் கிடையாது என்று மனதைக் கல்லாக்கிக்கொண்டு நமது அரசியல்வாதிகளும் ஆட்சியார்களும் திட்டவட்டமாகச் சொன்னால் ஒழிய இந்த முட்டாள்தனமான கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படமாட்டாது" என்றும் காட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த ஆசிரியர் தலையங்கம்.

வன்னி மக்கள் சுதந்திரமாக வெளியேற புலித் தலைமை அனுமதிக்க வேண்டும்

-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

''வன்னி வாழ் எம் உறவுகள் சுதந்திரமாக வெளியேற புலித் தலைமை அனுமதிக்க வேண்டும். அதற்கு இந்தியா உட்பட சர்வதேச சமூகம் புலித் தலைமை மீது அழுத்தம் செலுத்த வேண்டும்" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையின் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் சுதந்திரமாக வெளியேறிச் செல்வது என்பது அவர்கள் கொண்டிருக்க வேண்டிய ஜனநாயக உரிமை. மனிதர்களின் விருப்பங்களுக்கு விரோதமாகவும், மனச்சாட்சிக்கு மாறாகவும் வன்னியில் வாழும் எமது உறவுகளை புலித் தலைமை சுயலாப இருப்புக்காகத் தமது பலாத்காரப் பிடிக்குள் தொடர்ந்தும் சிறை வைத்திருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வன்னியில் புலித் தலைமையின் பலாத்காரச் சிறைக்குள் சிக்கியிருக்கும் எமது மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்காக 48 மணி நேர அவகாசத்தினை வழங்கியிருந்தார். இதன் மூலம் தமது நல்லெண்ண சமிக்ஞையை ஜனாதிபதி காட்டியிருந்தமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் பொதுமக்களின் பாதுகாப்பும், சுதந்திரமும், அமைதியான வாழ்வும், உரிமைகளும் உறுதி செய்யப்படும் என நம்பிக்கை கொடுத்து, ஜனாதிபதி விடுத்திருந்த கால அவகாசத்தை இந்தியாவும் வரவேற்றிருந்தது.

ஆனாலும், மக்களின் உயிர்களைவிடவும் தமது சுயலாப இருப்பையும், தமது சொந்த உயிர்ப் பாதுகாப்பையும் முதன்மைப்படுத்தும் புலித் தலைமை இந்த 48 மணி நேர கால அவகாசத்தை எமது மக்களுக்காகப் பயன்படுத்தியிருக்கவில்லை. இதனால் எமது மக்கள் மிகவும் மனத்துயரங்களோடு கலங்கி நிற்கின்றார்கள். வன்னியில் தமது உறவுகளுக்கு என்ன ஆகுமோ என்ற ஏக்கங்களோடு வன்னிக்கு வெளியிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் எமது மக்கள் ஊண், உறக்கமின்றி தேய்ந்து கொண்டிருக்கின்றார்கள். எமது மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத புலித் தலைமை தொடர்ந்தும் வன்னி வாழ் எமது உறவுகளை மனிதக் கேடயங்களாகவே பயன்படுத்தி வருகின்றது. அது மட்டுமன்றி வன்னி மக்களின் மன விருப்பங்களுக்கு மாறாக அவர்களைத் தாம் தடுத்து வைத்திருக்கவில்லை என்ற பொய்யான பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

1995 இல் யாழ்.குடாநாட்டை விட்டு ஓடிப்போன புலித் தலைமை தமது சொந்தப் பாதுகாப்பிற்காக யாழ்.குடாநாட்டு மக்களையும் தம்மோடு வருமாறு வற்புறுத்தி, அச்சுறுத்தியிருந்த வரலாற்றை யாரும் மறந்துவிடப் போவதில்லை. மீண்டும் வன்னியில் இருந்து யாழ்.குடாநாடு நோக்கி திரும்பி வரவிருந்த மக்களின் சுதந்திரமான வெளியேற்றத்தை புலித் தலைமை தடுத்து நிறுத்தியிருந்தமையும் மறக்க முடிந்த வரலாறல்ல. கிழக்கிலும் இதையே புலித் தலைமை செய்து முடித்திருந்ததை உலகம் அறியும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்மினி எம்.பி.யின் வாகனம் தமிழினியின் பெயரில்!

யாழ்.மாவட்ட எம்.பி.பத்மினி சிதம்பரநாதனின் வாகனத்தை இரகசியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த வாகனம் புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவி தமிழினியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலொன்றினையடுத்து இது குறித்து அண்மையில் எம்.பி.க்களின் தங்குமிட விடுதிக்குச் சென்ற இரகசிய பொலிஸார் இது தொடர்பாக அவரை விசாரணைக்கு உட்படுத்தினர். கடந்த நான்கு வருடங்களாக இந்த வாகனத்தைத் தான் பயன்படுத்தி வருவதாகவும் எவரும் தன்னிடம் இதுபற்றிக் கேள்வி எழுப்பவில்லையென்றும் பத்மினி இரகசிய பொலிஸாரிடம் தெரிவித்தார். பத்மினி எம்.பி. தற்போது லண்டனில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்டுக்களால் கலங்குகிறது.. (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்குத் துதி பாடி வந்த தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களில் பத்துப் பேர் வெளிநாடுகளில் தஞ்சமடையவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ''புலிகள் இயக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. அதன் வெற்றி, தோல்வி குறித்து நாம் கவலைப்படப் போவதில்லை. எமக்கு அந்த இயக்கத்தோடு எவ்வித தொடர்பும் இல்லை" என்று தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த 24 ஆம் திகதி 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகையின் ஞாயிறு இதழுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இதுகாலவரை புலிகளுக்காக வக்காலத்து வாங்கிவந்த தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று சுருதியை மாற்றித் தாளம் போடத் தொடங்கி விட்டனர்.

முல்லைத்தீவில் புலிகள் மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்திருக்கும் இலட்சக்கணக்கான அப்பாவி மக்களை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் கடந்த முதலாம் திகதி மாபெரும் மக்கள் பேரணியொன்று நடைபெற்றிருக்கிறது. புலிகளின் அடாவடித்தனங்களைக் கண்டித்து நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் சுமார் 25,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனரென யாழ்.செய்திகள் தெரிவிக்கின்றன. தேசிய, சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதிரான நிலைகள் வலுப்பெற்று வருகின்றன. இனிமேல் புலிகளுக்கு மங்குசனிதான்.

வன்னி மக்களை... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும், தங்களது சுயலாபம் கருதி இது குறித்து சற்றேனும் சிந்திக்காத புலிகள், எமது உறவுகளின் மத்தியிலிருந்துகொண்டு பாதுகாப்புப் படையினர் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். இதனால் வன்னியில் வாழும் எமது உறவுகளே பேரவலங்களைச் சந்திக்க வேண்டிய கொடுமைகள் நடந்துவருகின்றன. ஜனாதிபதி அவர்கள் கொடுத்திருந்த 48 மணி நேர கால அவகாசத்தைப் பயன்படுத்தி புலிகள் வன்னி வாழ் எமது உறவுகளை வெளியேறுவதற்கு அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. கடந்த காலங்களிலும் புலிகள் இதுபோன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தார்கள்.

எமது மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத புலிகளின் இருப்புக்காக வன்னி வாழ் எமது அப்பாவி உறவுகள் பலியாவதை நாம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. இதனால் அழிவுகள் மட்டும்தான் மிஞ்சப் போகின்றன. ஆகவே, அழிவுகளிலிருந்து வன்னி வாழ் எமது உறவுகளை மீட்டெடுப்பதற்காக புலிகளின் பலாத்காரப் பிடிக்குள் இருந்து சுதந்திரமாக அவர்கள் வெளியேறி வருவதற்காக, யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரள்வோம். பேரணியாக எழுவோம். எமது உணர்வுகளை ஏகக் குரலில் வெளிப்படுத்துவோம். மனச்சாட்சியுடன் இந்த மனிதாபிமானக் கோரிக்கைக்காக யாழ்.குடாநாட்டில் வாழும் அனைத்து மக்களும் அணி திரள்வோம்! எமது உணர்வுகளை உலகத்தின் கண் முன்னால் ஒன்றுபட்டு வெளிப்படுத்துவதன் மூலம் எமது உறவுகளை நாம் காப்போம்.

இந்தியப் பிரதமர்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான குணாம்சத்தைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளனர். எமது மக்களின் பெறுமதி மிக்க உயிர்களைப் புலிகள் ஆபத்தான நிலைக்குள் வைத்திருப்பதை இனிமேலும் அனுமதிக்க முடியாது. எமது மக்கள் மீது கை வைக்காதே, தனிநபர்களின் உரிமைகளுக்கு மதிப்பளி, அவர்களைச் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதி என்று ஐக்கியப்பட்ட குரலில் நாம் புலிகள் இயக்கத்தைக் குறிப்பாகப் பிரபாகரனைக் கோருகிறோம். வன்னிக் காட்டுக்குள் தமது விருப்புகளுக்கு எதிராகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த மக்கள் பாதுகாப்பான பிரதேசத்துக்குள் வருவதற்குப் புலிகள் இயக்கம் அனுமதிப்பதற்குத் தேவையான அழுத்தங்களை நீங்கள் கொடுக்க வேண்டும்.

மக்கள் எழுச்சி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளின்றி நடைபெற்ற அந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு தமது ஆதங்கத்தையும், எழுச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார்கள். நல்லூர், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வன்னி மக்களைத் துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற தமது உணர்வை மக்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். சர்வதேசப் பத்திரிகையாளர் எமது மக்களின் உணர்வைப் புரிந்துகொண்ட அளவு, ஏன் எமது குடாநாட்டுப் பத்திரிகைகள் புரிந்துகொள்ளவில்லை? தனியாரால் வியாபார நோக்கத்திற்காக பத்திரிகைகள் நடத்தப்பட்டாலும் மக்கள் நலனுக்கு மாறாக செயற்படுவது பத்திரிகா தர்மம் அல்ல என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மக்களை யுத்தக் கொடுமைகளிலிருந்து விடுவிப்பதற்கும் அவர்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான மக்கள் எழுச்சிகளுக்குத் தமது முற்று முழுதான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது ஊடகங்களின் தார்மீகக் கடமை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே எடுத்துள்ளீர்கள். கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தியமையும், வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படும் வரை அப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக விஷேட செயலணிக் குழுவொன்றினை அமைத்தமையும் அந்த நோக்கத்துக்கான சாதகமான சமிக்ஞைகளாகும். நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வொன்றினை ஏற்படுத்தி, எமது நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கான விதைகளை நீங்கள் தூவுவீர்கள் என்பது மனப்பூர்வமான எதிர்பார்ப்பாகும்.

வன்னியில் தடுத்து வைத்திருக்கும்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, நல்லூர், தீவகம் ஆகிய ஐந்து வலயங்களிலிருந்தும் புறப்பட்ட சனக் கூட்டம் யாழ். செயலகத்துக்கு முன்பாகச் சங்கமித்து, நல்லூர் கந்தசுவாமி கோவில் வரை சென்றது. மக்கள் வெள்ளம் போலக் காட்சியளித்த நல்லூர் கோவில் வளாகப் பகுதியிலும் வன்னி மக்களை விடுவிக்கக் கோரியும், புலிகளின் அடாவடித்தனங்களை நிறுத்தக் கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. காலை பதினொரு மணியளவில் யாழ்.செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி பிற்பகல் இரண்டு மணியளவிலேயே நல்லூர் ஆலய வளாகத்தை வந்தடைந்தது. செய்தி சேகரிக்க வந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களைச் சேர்ந்த செய்தியாளர்களும் பேரணியில் நடந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வீடியோ கமராக்கள் மூலம் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்ததோடு, ஆங்காங்கே மக்கள் சிலரின் அபிப்பிராயங்களையும் ஒலிவாங்கிகள் மூலம் பதிவு செய்து கொண்டனர். சில பெண்கள் வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது கண்ணீர் விட்டழுததைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணம், சஞ்சிமான் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த இராஜேஸ்வரி என்ற 48 வயதுப் பெண்மணி, தனது அவல நிலையை விளக்கும்போது விம்மி விம்மி அழுதார். தனது மூன்று பிள்ளைகளில் இருவர் முல்லைத்தீவில் இருந்ததாகவும், அவர்களைப் புலிகள் யுத்தத்துக்கென சில மாதங்களுக்கு முன்னர் பிடித்துச் சென்றதாகவும் சொல்லி அழுதார். ஒரு மகன் இறந்து விட்டாரென்று கேள்விப்பட்டதாகவும் மற்றவருக்கு என்ன நடந்ததென்று தெரியாதென்றும் கண்ணீர் விட்டபடி கூறினார். ''எங்கள் தேசம் - எங்கள் அரசு", ''இது மக்கள் சக்தி - இது மக்கள் எழுச்சி", ''உறவுக்குக் கரம் கொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம்", ''புலிகளின் தேவை மனிதப் பலி - மக்களின் தேவை உயிர் வாழ வழி", ''சமாதானம் - சம உரிமை - சகவாழ்வு எமதாகும்", ''மக்கள் வெளியேறுவதைத் தடுக்காதே தடுக்காதே - புலியே புலியே மக்களை வெளியே விடு" போன்ற கோஷங்கள் பேரணியில் சென்றவர்களால் எழுப்பட்டன. பேரணியில் சென்றவர்கள் சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் எடுத்துச் சென்றனர்.

பேரணி நல்லூர் கந்தசுவாமி கோவிலடியை அடைந்ததும் அங்குள்ள மக்கள் வெள்ளத்தின் மத்தியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்தினார். யாழ்.மாவட்டத் தேச மக்கள் எழுச்சிப் பேரவையின் வேண்டுகோளை ஏற்று இயல்பாகவே இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு புலிகளால் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான எமது உறவுகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளமை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் பெரும் திருப்புமுனையாகும்.

இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்களுக்கு அவலங்களையே பெற்றுத் தந்த புலித் தலைமை, தற்போது தமிழ் மக்களையே பணயம் வைத்துத் தம்மைத் தற்காத்துக் கொள்ள முயற்சிக்கிறது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தெரிவித்தார். மக்களின் நலன்களை முன்வைத்து மக்களுக்காகப் போராடுவதற்குப் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தோடு இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கான அழைப்பினை விடுத்த யாழ்.மாவட்டத் தேச மக்கள் எழுச்சிப் பேரவைக்கும் அமைச்சர் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாரம் உங்கள் பலன்

(05.02.2009 தொடக்கம் 11.02.2009 வரை)

ஞானயோகி.
டாக்டர். ப.இசக்கி

மேஷம்:– மேஷராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். உற்றார் உறவினர்களின் வரவால் மன மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மன நிம்மதியும் அடைவீர்கள், மற்றவர்களின் காரியங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மன நிம்மதியை இழக்காதீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் ஒன்று சேர வாய்ப்பு உள்ள காலமாகும்.

இராசியான எண்:- 9
இராசியான நிறம்:- சிவப்பு
இராசியான திசை:- தெற்கு
பரிகாரம்:- செவ்வாய்க்கிழமைகளில் முருகன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

ரிஷபம்:– ரிஷபராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். வங்கிகளில் இருந்து நீண்ட காலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கைவந்து சேரும். கணவன் மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குல தெய்வ ஆலய வழிபாடு செய்து வரப் போட்ட எண்ணங்கள் நிறைவேறும் காலமாகும். பூர்வீகச் சொத்து விசயமான பிரச்சினைகள் தீர் இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம்.

இராசியான எண்:- 6
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:- தென்கிழக்கு
பரிகாரம்:- வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி வழிபாடு செய்து வரவும்.

மிதுனம்:– மிதுனராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் சனி நன்மை தரும் கிரகமாகும். தந்தைக்கு ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைய வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடை பெறலாம். தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்று வருவது நல்லது. உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணி ஆற்றுதல் நல்லது கண்களில் கவனமுடன் இருக்கவும்.

இராசியான எண்:- 8
இராசியான நிறம்:- நீலம்
இராசியான திசை:- தென்மேற்கு
பரிகாரம்:- சனிக்கிழமைகளில் சனீஸ்வர வழிபாடு செய்து வரவும்.

கடகம்:– கடகராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். தேவையற்ற மனசஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும். உத்தியோகத்தில் வெகு காலமாக எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக் கூடிய காலமாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. பிள்ளைகளால் பொருட் செலவுகளும் மன நிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நலம்.

இராசியான எண்:- 3
இராசியான நிறம்:- மஞ்சள்
இராசியான திசை:- வடகிழக்கு
பரிகாரம்:- வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

சிம்மம்:– சிம்மராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். செய்யாத குற்றங்களுக்காகப் பழிச்சொல் ஏற்பட இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல் படுவது நல்லது. தேவையற்ற நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது நல்லது. விட்டுப்போன கணவன் மனைவி உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.

இராசியான எண்:– 9
இராசியான நிறம்:– சிவப்பு
இராசியான திசை:– தெற்கு
பரிகாரம்:– செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை வழிபாடு செய்து வரவும்.

கன்னி:– கன்னிராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு சூரியன் நன்மை தரும் கிரகமாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம். கணவன் மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வீடுகளைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். புதிய வீடு வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும்.

இராசியான எண்:- 1
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:- கிழக்கு
பரிகாரம்:- ஞாயிற்றுக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

துலாம்:– துலா ராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு புதன் நன்மை தரும் கிரகமாகும். பணப் புழக்கம் சுமாராகக் காணப்படும். மகான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மன மகிழ்ச்சி அடைவீர்கள். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் காரணமற்ற மனக் குழப்பங்களும் மற்றும் கடன் தொல்லைகளும் ஏற்படலாம்.

இராசியான எண்:- 5
இராசியான நிறம்:- பச்சை
இராசியான திசை:- வடக்கு
பரிகாரம்:- புதன்கிழமைகளில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

விருச்சிகம்:– விருச்சிகராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குக் கேது நன்மை தரும் கிரகமாகும். வங்கிகள் மூலம் எதிர் பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். கணவன்-மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். உற்றார் உறவினர்களின் வரவால் மன மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சில தடைகள் வந்து விலகும்.

இராசியான எண்:- 7
இராசியான நிறம்:- கருஞ்சிவப்பு
இராசியான திசை:- வடமேற்கு
பரிகாரம்:- திங்கட்கிழமைகளில் கணபதி ஆலய வழிபாடு செய்து வரவும்.

தனுசு:– தனுசுராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு ராகு நன்மை தரும் கிரகமாகும். வெகு காலமாகக் கா[illegible]ாமற் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். தந்தை மகன் உறவில் சுமூகமான சூழல் உருவாகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும்.

இராசியான எண்:- 4
இராசியான நிறம்:- கறுப்பு
இராசியான திசை:- வடமேற்கு
பரிகாரம்:- ஞாயிற்றுக்கிழமைகளில் பிதுர் வழிபாடு செய்து வரவும்.

மகரம்:– மகரராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குப் புதன் நன்மை தரும் கிரகமாகும். கணவன் மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்து விலகும். நண்பர்களால் எதிர்பாராத பொருட் செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். நீண்ட காலமாக வர வேண்டிய பணம் கைவந்து சேரும் காலமாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை.

இராசியான எண்:- 5
இராசியான நிறம்:- பச்சை
இராசியான திசை:- வடக்கு
பரிகாரம்:- புதன்கிழமைகளில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

கும்பம்:– கும்பராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் சனி நன்மை தரும் கிரகமாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களையும் பெறுவார்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். வெகு நாட்களாகத் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும்.

இராசியான எண்:- 8
இராசியான நிறம்:- நீலம்
இராசியான திசை:- தென்மேற்கு
பரிகாரம்:- சனிக்கிழமைகளில் ஐயப்பன் வழிபாடு செய்து அன்னதானம் செய்து வரவும்.

மீனம்:– மீனராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்குச் சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். குல தெய்வ வழிபாடு செய்து வருவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் சற்று எச்சரிக்கையுடன் முன் கோபத்தைத் தவிர்த்து இருப்பது நல்லதாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும்.

இராசியான எண்:- 2
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:- மேற்கு
பரிகாரம்:- திங்கட்கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

உ
ஓம் சக்தி சிவமயம்
ஓம் அகத்தீஸ்வராய நமஹ

ஓம் ஆதி அகஸ்திய மஹாரியின் திருவருளாலும் அநுக்கிரகத் தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழி யில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அனுகவும்.

Contact:
Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi , Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390 Email:Paramasivan_esakki@yahoo.com
Website;- www.gnanayohi.com Consultation by appointment only.

காதிலை பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக வன்னியில் நடைபெற்ற போர் சுருங்கி புதுக்குடியிருப்பின் ஓர் பகுதிக்குள் முடங்கிப்போய் கிடக்கின்றது. தனது சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கான இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் போராட்ட ஏக தலைவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டு இந்த நாட்டின் மக்களுக்கு சுயவிளக்க உரை ஒன்றை நிகழ்த்துவார் எனின் அது எவ்வாறு இருக்கும் எனச் சிந்தித்தபோது கந்தசாமியின் எண்ணத்தில் தட்டிய பொறிகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

ஏக தலைவனின் விளக்கவுரை!

அன்பார்ந்த தமிழ் மக்களே; நான் பிரபா பேசுகிறேன். எனது இந்த உரையானது, ஆயிரமாயிரம் ஆண்டு கால வரலாறுகளைக் கொண்ட எம் திருநாட்டிற்கும் அதில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற மனிதாபிமானத்திற்கும் மரியாதை செய்கின்ற அனைத்து மக்களின் வாழ்வியலுக்கும் ஓர் திருப்பத்தை ஏற்படுத்துமென நம்புகின்றேன். கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழீழம் என்கிற எட்டாத கனியை இலக்காக உங்களுக்குக் காட்டிக்கொண்டு என்னுடையதும், எனது சகபாடிகளினதும் சுயலாபங்களை நிறைவு செய்துகொண்டிருந்த எனக்கு, அவற்றிற்கான பிராயச்சித்தங்களை எதிர்கொள்வதற்கான கால கட்டங்கள் ஆரம்பித்து ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. தற்போது அதன் இறுதிக் கட்டத்தில் எனது துன்பியல் வாழ்வு சென்றுகொண்டிருப்பதாகவே உணர்கின்றேன். இந்நிலையிலேயே எனது இந்தப் போராட்டத்திற்கு அடித்தளமிட்ட சில விடயங்களை உங்களுக்கு வெளிப்படையாகக் கூறவிரும்புகின்றேன்.

என் அன்பான மக்களே; எனது சிறு வயதில் பிரபல கடத்தல் காரரான சுட்டி என்பவருடன் இணைந்து நான் மேற்கொண்ட கடத்தல் வேலைகள் என்னிடம் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியது. எனக்குச் சொந்தமாகவும் கப்பல், ஆயுதக் கடத்தல் பண்ணி பொருள் குவிக்க வேண்டும் என்கிற தீராத வேட்கையை உண்டுபண்ணியது. எனது இந்தக் கனவிற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான வழிமுறைகளையும், சந்தர்ப்பங்களையும் தேடி அலைய ஆரம்பித்தேன். அந்தக் காலகட்டத்திலேயே பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்குத் தரப்படுத்தல் என்ற முறையில் அநீதி இழைக்கப்படுவதாகவும், அதற்கு எதிராக இளம் மாணவர்கள் கொதிப்படைந்திருப்பதாகவும் வாசிக்கத் தெரிந்த எனது நண்பன் மூலமும் அறிந்து கொண்டேன். கொட்டும் மழைக்குக் கூட பாடசாலைத் தாழ்வாரத்தில் ஒதுங்கி அறியாத எனக்குத் தரப்படுத்தல் என்பதும், அதற்கு மாணவர்கள் கொதிக்கிறார்கள் என்பதும் புரியாத புதிராகவே இருந்தது.

ஆனாலும் மாணவர்களின் உணர்வுகளைச் சாதுரியமாகவும், கபடத்தனமாகவும் பயன்படுத்துவோமாயின், எனது இலட்சியக் கனவான சர்வதேச ரீதியிலான கப்பல் போக்குவரத்து, ஆயுதக் கடத்தல் போன்றவற்றின் உச்சத்தை எட்ட முடியுமென்ற யதார்த்தத்தினை உணர்ந்து கொண்டேன்.

இந்த எண்ணக்கருவின் அடிப்படையிலேயே எனது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் தென்னிலங்கையில் வாழ்ந்து வந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில பேரினவாதிகளினால் அரங்கேற்றப்பட்ட அசிங்கங்கள் எனது வேட்கையை நிறைவேற்றிக்கொள்வதற்கு உரமாகவும் அமைந்து கொண்டன. அத்தோடு ஆரம்ப காலத்தில் எனது வசீகரத்தினாலும், இறுக்கமான கட்டுக்கோப்பினாலும், கபடமான பிரசாரத்தினாலும் ஈர்க்கப்பட்ட மக்களாகிய உங்களுக்கு எனது போராட்டத்தின் மீது ஓர் நம்பிக்கை ஏற்பட்டமையானது, எனது இலட்சிய இலக்கினை எட்டுவதற்கான கால இடைவெளியை மிகவும் குறைத்திருந்தது.

என் அன்பான மக்களே! கள்ளக் கடத்தலில் வல்லவனாக வரவேண்டுமென விரும்பிய நான் விடுதலைப் போராட்டமென உங்களை ஏமாற்றி எனது இலக்கை அடைந்தவுடன் ஓடி ஒளிந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது என்னை உயர வைத்த அப்பாவி மக்களாகிய உங்களையே அடிமைகளாக ஆட்சி புரியவேண்டுமென்று எனக்கு ஏற்பட்ட அபரிமிதமான இச்சையே எனது இன்றைய நிலைக்குக் காரணமென உணர்கின்றேன். இதற்கு நான் மட்டுமன்றி கூட இருந்து குழி பறித்த எனது தத்துவ ஆசிரியன் மற்றும் கூட நின்று என்னைத் தூண்டிவிட்ட எனது சகபாடிகள் ஆகியோரும் பங்காளிகளாகவே இருக்கின்றனர்.

அன்பான தமிழ் மக்களே; அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். எனது அளவுக்கு மீறிய ஆசை எனது முடிவை எழுதிக்கொண்டிருக்கின்றது. அதன் மூலம் உங்கள் மீது என்னால் போடப்பட்டிருந்த அடிமை விலங்கும் உடைக்கப்படுகின்றது. எனவே உருவாகப்போகின்ற சமாதானத் தீவில் சாந்தி சுபிட்சத்துடன் நீங்கள் வாழ வேண்டுமென நான் எதிர்பார்ப்பதோடு, எதிர்காலத்தில் என்னைப்போன்ற சுயநலக்காரன் உருவாவதற்கு இடமளிக்காது புத்திசாதுரியமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

எனது தாகம் தண்ணியும் சாப்பாடும்..

யாவும் கலப்படமற்ற கற்பனை

ஆயிரமாம் லிங்கன்



வேதனையும் கொண்டார் அபி. அவருடைய இந்த மனி தாபிமானம் பல சம்பவங்கள் மூலம் வெளியிடப்பட்டன.

ஒரு இளம் போர் வீரன், இரவில் காவல் காக்கும் பணியில் தவறிவிட்டதற்காக மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்வதற்காக லிங்கனிடம் வந்தது. அந்த வாலிபனுக்கு மரண தண்டனை அளிக்க மறுத்துவிட்டார் லிங்கன். அதற்கு அவர் கூறிய விளக்கம் - ''அந்த வாலிபன் படையில் சேருமுன் விவசாயத்தில் ஈடுபட்டவனாக இருந்திருக்கலாம். பகல் மறைந்து இரவு தொடங்கும் வேளையில் தூங்கச் செல்லும் பழக்கமுடையவனாயிருக்கலாம். எனவே போர்க் களத்தில் அவனைக் காவல் வேலை யில் நிறுத்தியபோது, அவன் தூங்கி விட்டதில் ஆச்சரியமில்லை. இந்த சகஜமான விஷயத்துக்காக, அந்த இளைஞனின் உயிரைப் பறித்து, அந்தப் பாவத்தை ஏற்க விரும்பவில்லை!'' அந்த வாலிபன் மரண தண்டனையிலிருந்து விடுதலை பெற்றான்.

பின்னர் சிறிது காலத்துக்குப் பின், ஒரு போரில் அவன் மாண்டான். அவன் உடலைச் சோதித்த போது, அவனது கழுத்தில் ஜனாதிபதியின் உருவப் படத்தை ஒரு கயிற்றில் இணைத்து அணிந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்படத்தின் கீழே ''நம் ஜனாதிபதிக்கு கடவுள் அருள்புரிவாராக!'' என்று எழுதப்பட்டிருந்தது.

மற்றொரு சமயம், இராணுவத்திலிருந்து தப்பியோடிய இருபத்திநான்கு பேருக்கு இராணுவக் கோர்ட் விசாரணை செய்து மரண தண்டனை விதித்தது. இதற்கும் லிங்கன் தம் அங்கீகாரத்தை அளிக்க மறுத்துவிட்டார். ''அமெரிக்க நாட்டில் கணவரை இழந்தவர்கள் கலங்கித் தவிக்கும் கைம் பெண்களின் எண்ணிக்கை இப்போதே ஏராளமாகிக் கொண்டிருக்கிறது. இதை மேலும் அதிகரிக்கச் செய்ய என்னால் முடியாது- முடியவே முடியாது!'' என்றார். கணவனை இழந்து, தன் மூன்று மகன்களைப் போர் முனைக்கு அனுப்பிய தாய், கந்தலாடையுடன் ஒரு சமயம் ஜனாதிபதியைக் காண வந்தாள். தனக்கு வேறு நாதியாருமில்லாததினால் இராணுவத்தில் உள்ள தன் மகன்களில் மூத்தவனை விடுவித்துத் தனக்கு உதவியாக அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். லிங்கனும் அவள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். ஆனால் அவள் மகனை அவர் இராணுவத்திலிருந்து விடுவிப்பதற்கான உத்தரவை அனுப்புமுன், அவன் போரில் குண்டடிபட்டு இறந்து போனான். ஆனாலும் லிங்கன் அந்த அநாதரவாகிப் போன தாயின் துயர் துடைக்க, அவளுடைய இரண்டாவது மகனை இராணுவத்திலிருந்து விடுவித்து அவளிடம் அனுப்பி, ''எஞ்சியுள்ள உன் இரு மகன்களில் ஒருவன் உனக்கு, மற்றவன் நாட்டுக்கு(எனக்கு) -இது நியாயம்தானே?'' என்றார். மகனையும் கணவனையும் இழந்த அந்தத் தாய், ''ஜனாதிபதி அவர்களே! கடவுள் உங்களுக்கு அருள்புரிவாராக, நீங்கள் நாட்டின் தலைவராக ஆயிரமாண்டு திகழ வேண்டும்'' என்று வாழ்த்திவிட்டுப் போனாள். இப்படி மனிதாபிமானத்துடன் லிங்கன் செயற்பட்டதுக்குப் பல சம்பவங்கள் உள்ளன.

அடிமை வர்த்தகம் பற்றிய பிரச்சினை ஒரு முடிவுக்கு வரவில்லை. உள்நாட்டுப் போரும் நிற்கவில்லை. அடிமை வர்த்தகப் பிரச்சினை பற்றி நம் கருத்துக்களைப் பட்டவர்த்தனமாக வெளியிட்டால் இன்னும் மோசமான விளைவுகள் வரும் என்று, வடபகுதி படைத் தலைவர் ஜெனரல் மெக்கலன் எச்சரித்தார். ஆனாலும் லிங்கன் 1862-ஆம் ஆண்டு பனிக்காலத்தில் தீவிரமான

வியப்புக்கள் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தை வளமாக்கும் வெகுமதி

ஒவ்வொரு பிரஜைக்கும் வாழ்க்கையில் ஏராளமான விஷேட நிகழ்வுகளுண்டு. ஒவ்வொரு பெற்றோருக்கும் புதிய உலகைக் காண்பதற்காய் இம் மண்ணில் உதிக்கும் தங்கள் மழலைச் செல்வத்தின் பிஞ்சுக் கரம் பற்றி, அதைக் கன்னத்துடன் வைத்து ஸ்பரிசிக்கும் அந்தக் கணப் பொழுதுகூட வாழ்க்கையில் மறக்கவே முடியாத, நெஞ்சத்தை நெகிழ வைக்கும் பொக்கிஷமான நிகழ்வு தான். ஒரு குழந்தையின் எதிர்காலத்தை சிறப்பாகவும், செழிப்பாகவும் அமைத்துத் தருவதே பெற்றோரின் எதிர்பார்ப்பும், கனவுமாகும்.

உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும், உங்கள் செல்வத்துக்கு செல்வம் சேர்க்கவும், அரிய சந்தர்ப்பம் ஒன்றை வழங்கிட நாம் தயாராகவுள்ளோம்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, மக்கள் வங்கியான நாம், ∴பெப்ரவரி 1ம் திகதி தொடக்கம் 7ம் திகதிக்குள் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும், ரூபா 500 பெறுமதியான "இசுறு உதான" சான்றிதழ் ஒன்றைப் பரிசளிக்கவுள்ளோம்.

மக்கள் வங்கியின் "இசுறு உதான" சான்றிதழ், குழந்தைக்கு வழங்கக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு. எனவே அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் இச் சான்றிதழைக் கையளித்து, "இசுறு உதான" கணக்கொன்றை ஆரம்பியுங்கள். உங்கள் குழந்தையின் எதிர்காலத்துக்கு செல்வத்தைச் சேர்த்திடுங்கள்.

மக்கள் வங்கியின்
இசுறு உதான

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk

புதிய டிக்கட் மூலம் செல்வயோகம்

இரட்டிப்புப் பரிசுகள்

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உங்களை வெற்றியாளர்களாக்கும் செல்வயோகம்

பரிசுத் தொகையை இரட்டிப்பாக்கி...

உங்கள் கைகளில் புதிய டிக்கட்டுகள்

1 இலக்கத்திற்கு 20/- ரூபா
2 இலக்கங்களுக்கு 40/- ரூபா
3 இலக்கங்களுக்கு 1,000/- ரூபா
4 இலக்கங்களுக்கு 200,000/- ரூபா
1 இலக்கத்துடன் லக்கினத்திற்கு 60/- ரூபா
2 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 200/- ரூபா
3 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 10,000/- ரூபா
4 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 2,000,000/- ரூபா
அல்லது அன்றைய தினத்தின் ஜக்பொட் பரிசு

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமணல கிராபிக்ஸ் அச்சகத்தில் பெப். 05 திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

19 வருட இடம்பெயர் வாழ்வுக்கு விரைவில் முடிவு

காங்கேசன்துறையிலிருந்து மீண்டும் யாழ்தேவி

பாரம்பரிய பூமியிலிருந்து வெளியேறி வாழ்வது என்பது எவ்வளவு துயரகரமான விடயம் என்பதை நான் நன்கறிவேன். 19 வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நீங்கள் மீளக்குடியேறும் நாள் வெகுதொலைவில் இல்லை. அத்துடன் உங்கள் தாய்மண்ணாம் காங்கேசன் துறையிலிருந்து மீண்டும் யாழ் தேவி சேவை ஆரம்பமாகும். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தொடர்பான விரிவான கலந்துரையாடல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் பிரதேச ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வலி வடக்கு பொது அமைப்புகளுடன் அமைச்சர் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது...

அன்று காலை சமூகசேவைகள் அமைச்சரின் யாழ். பணிமனையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட சகல பொது அமைப்புக்களான மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், விவசாய தென்னை பனை வள அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் ஏனைய சங்கங்கள், சம்மேளனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளும் இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம் அங்கத்த வர்களுமாக நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்டனர். அவர்கள் மத்தியில் உரை யாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 'வன்னி வெளிக்கின்றது; ஒளிமயமான எதிர் காலம் தெரிகின்றது இந்நிலையில் அதிக நிலப்பரப்பினை உயர் பாதுகாப்பு வலயமாகக் கொண்ட வலிகாமம் வடக்கில் பொது மக்கள் மீளவும் தமது சொந்த காணி பூமியில் குடியேறவும் பொன்விளையும் பூமியாம் அம்மண்ணில் விவசாயம் செய்வதற்குரிய காலம் நெருங்கி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் ஏறக்குறைய 2 தசாப்த காலமாக பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் காணிகள் அனைத்தும் எல்லை கள் மீளவும் புதுப்பிக்கப்பட வேண்டும். எனவே மீளக்குடியேறுவதற்கு முன்னர் காணிக் கச்சேரி ஒன்று நடாத்தப்பட்டு பொதுமக்களின் சொந்தக் காணிகளை அடையாளம் காண நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதியளித்தார்.

மேலும் யாழ். தேச எழுச்சிப் பேரவை யினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய பிரதமருக் கான மனுவை கையளிப்பது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிக ருடன் கலந்துரையாடினேன். அச்சமயம் காங்கேசன்துறை - வவுனியா புகையிரதப் பாதையினை மீளமைக்க இந்திய அரசின் உதவி குறித்தும் தான் தெரியப்படுத்தியதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அங்கு மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வலிகாமம் வடக்குப் பிரதேச அரச செயலகங்கள், நிறு வனங்கள் திணைக்களங்கள் சார்பில் வலி காமம் வடக்கு பிரதேச செயலாளர், முரளி தரனும் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் சுகாதார மின்சார போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகள் திணைக்களங் களின் அதிகாரிகளுடன் வலிகாமம் வடக்குப் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் சமூர்த்தி உத்தியோகத்தர்களும் பங்குகொண்டனர்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் போக்குவரத்து, சுகாதாரம் உள்ளூராட்சி உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும் தயக்க மின்றியும் தெரியப்படுத்தும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து பெருமள விலானோர் தமது கோரிக்கைகளையும் கருத்துக்களையும் முன்வைத்தனர்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையா டலின் தொடர்ச்சியாக பிரதேச சுகாதார, மின்சார, போக்குவரத்து, வீதி திருத்தம், நீர் விநியோகம் மற்றும் ஏனைய விடயங் கள் தொடர்பாக பல கருத்துக்கள் அப்பி பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு அங்கு சமுகமளித்திருந்த அந்தந்தப் பிரிவு உயரதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக்கலந்துரையாடலின் இறுதியில் கருத்து தெரிவித்த அமைச்சர் அவர்கள் நாம் பத்தோடு பதினொன்றாகக் கட்சி அரசியல் நடாத்தவில்லை. மக்களின் தற்போதைய இக்கட்டான நிலைமைக்கு ஆரம்பகால ஆயுதமேந்திய போராளி என்ற வகையில் நானும் பொறுப்பேற்கின்றேன். பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை முடிவிற்குக் கொண்டுவரப்ப வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். மிக விரைவில் உங்களது மீளக் குடியேற்றமும் ஏனைய கோரிக்கைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும் இவ்வாறு அமைச்சரவர்கள் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வலிகாமம் வடக்குப் பிரதேச அபிவிருத்தி அதன் தேவைகள், பிரச்சினைகள் தொடர் பான மேற்படி கலந்துரையாடல் மிகவும் பிரயோசனமானதாகவும் ஆக்கபூர்வ மாகவும் இடம்பெற்றதாக பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் திருப்தியுடன் தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுச் சென்றனர்.

பொது அமைப்புக்கள் - அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் பொது அமைப்புக்களின் தேவைகள், கோரிக்கைகள் தொடர்பில் பிரதேச ரீதியாக ஆரம் பிக்கப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருவதன் வரிசையில் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக வாரியாகத் தொடர்ந்து இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இதன்பிரகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை 3ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ள நிலையில் 5ஆம் திகதி வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான கலந்துரையாடலும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான கலந்துரையாடலும் 7ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான கலந்துரையாடலும் முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த பிரதேச பொது அமைப்புக்கள் சங்கங்கள் சமாசங்களின் பிரதிநிதிகள் வருகை தரும்போது தத்தமது கோரிக்கைகளை எழுத்தில் கொண்டுவருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாதர்களுக்கு உதவிகள்

தையல் இயந்திரத்தை ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உதயன் வழங்கியபோது...

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு சுயதொழில் திட்டம் மற்றும் உதவித்திட்டத்தின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களில் பெண்களைத் தலைவியாகக் கொண்ட குடும்ப பெண்களுக்கு தையல் இயந்திரமும் உதவி தேவைப்படும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் எஸ்.ஏ. உதயன் மற்றும் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தரும் முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தலைவருமான குணசிங்கம், வசந்தன் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சார்பில் தையல் இயந்திரங்களையும் துவிச்சக்கர வண்டிகளையும் தெரிவுசெய்யப்பட்டோருக்கு வழங்கி வைத்தனர்.

நாவற்குழி பிரதேச மக்களின் கோரிக்கை நிறைவேற்ற உறுதி

தமது தேவைகள் கோரிக்கைகளுடன் தென்மாரட்சி மேற்கு கைதடி நாவற்குழி வாழ் மக்கள் கடந்த புதன்கிழமை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர். அப்பிரதேசத்தில் பெரும்பாலும் தமது பூர்வீக நிலங்களில் வசித்துவரும் கைதடி நாவற்குழி வாழ் மக்கள் தாம் பொருளா தார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள நிலையில் இருப்பதாக தெரிவித்ததுடன் வீடமைப்புத்திட்டம் மற்றும் வேலை வாய்ப்புக்களில் தமக்கு உதவிபுரியுமாறு கேட்டுக் கொண்டனர். அம்மக்களின் பொதுவான கோரிக்கைகளுடன் அவர்களது தனிப்பட்ட வேண்டுகோள்கள் தனித்தனியாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் விரைவில் அப்பிரதேச மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கைதடி நாவற்குழி மக்களுக்கு உறுதியளித்தார். இச்சந்திப்பினை ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி மேற்கு மக்கள் தொடர்பாளர் ஜெகதீஸ்வரன் கஸ்ரோ ஒருங்கிணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் அபிவிருத்திக்கும் நிதிகளை வாரி வழங்குங்கள்"

-ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர் கிபி-

வலிகாமம் மேற்கு பொன்னாலை பிரதேச மக்களுடன் கடந்த புதன்கிழமை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் முக்கிய சந்திப்பு ஒன்றினை நடாத்தியுள்ளனர். பொன்னாலை ஸ்ரீகண்ணன் கடற்றொழில் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப் பாளர் பசுபதி சீவரத்தினம் (கிபி), ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் மேற்கு அமைப்பாளர் வள்ளுவன் மகேந்திரன், கட்சியின் மக்கள் தொடர்பாளர் கோமகன் ஆகியோர் மக்களுடனான சந்திப்பில் பங்குகொண்டனர்.

பொன்னாலை பொது மண்டபத்தில் இன்று முற்பகல் இடம்பெற்ற இந்நிகழ்வில் விஷேட உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப் பாளர் பசுபதி சீவரத்தினம் கிபி, நீங்கள் பொன்னாலையிலிருந்து பொன்னாலையின் மற்றோர் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள நிலையில் புலம் பெயந்துள்ள எமது உறவுகளுக்கு ஓர் வேண்டுகோளை விடுக்கின்றோம். மீண்டும் வன்முறை கலாசாரத்தை வளர்ப்பதற்கும் விதைப்பதற்கும் உங்கள் நிதிகளை வழங்குவதைவிட இம்மண்ணில் வறிய மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் உங்கள் நிதிகளை வழங்கு ங்கள் என கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார். இச்சந்திப்பின் இறுதி யில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு கையளிப்பதற்காக அப்பகுதி மக்களினால் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் விரைவில் உரிய தீர்வுகளைப் பெற்றுத்தருவதாக பொன்னாலை மக்களுக்கு உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.



சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர் கிபி மங்கள விளக்கேற்றியபோது...

யாழ். பத்திரிகைகள் இருட்டடிப்பு; பொதுமக்கள் விசனம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேச மக்கள் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் மக்கள் பேரணி குறித்து மறுநாள் குடா நாட்டு பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் குறித்து யாழ். பொதுமக்கள் மிகவும் கொதிப்படைந்த நிலையில் காணப் படுகின்றமையினை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. கண்ணுக்கு முன்னால் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்ட செய்தியை இருட்டடிப்பு செய்யும் நோக்கில் ஏனோதானோ என வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் அவர்களின் சுயரூபம் அம்பலமாகி இருப்பதாக பொதுமக்கள் பலரும் தெரிவித் துள்ளனர். இதுகுறித்து கருத்து தெரிவித்த பலரும் உலகெங்கிலும் உள்ள செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் நேற்றைய யாழ். பேரணி குறித்து முக்கியத்துவப்படுத்தப்பட்ட செய்திகளை வெளியிட்டவேளை எம்கண்ணின் முன்னால் நடந்ததையே சொல்ல முடியாதவர்கள் எப்படிப்பட்ட ஊடக தர்மம் கொண்டிருப்பார்கள் என விசனத்துடன் கேள்வி எழுப்பி உள்ளனர்.

முன்னர் பூநகரியில் மீன்பிடிக்கச் சென்ற குருநகர் கடற்றொழிலாளர்கள்மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடாத்தியவேளை அதனை மூடிமறைக்க முற்பட்ட குடா நாட்டில் பத்திரிகை ஒன்றின் மீது குருநகர் மக்கள் திரண்டு வந்து ஆவேசமாக ஆர்ப் பாட்டம் நடாத்தியதைப் பலரும் நினைவு கூர்ந்துள்ளனர். புலிகள் ஊருக்குள் இருக்கும்போதே பத்திரிகை நிறுவனத்தை முற்றுகையிட்ட மக்கள், துண்டைக் காணோம் துணியைக்காணோம் என புலிகள் ஓடிக்கொண்டிருக்கும்போது புலிகளுக்காக வக்காலத்து வாங்கினால் மக்கள் இப்போது என்ன செய்வார்கள்? என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கொஞ்சம் நினைத்துப்பார்ப்பது சிறந்தது என பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

சனசமூக நிலையங்களுக்கான நூல்கள்

யாழ். குடாநாட்டில் செயற்பட்டு வரும் சனசமூக நிலையங்களின் பயன்பாட்டுக்கென பல்துறை சார்ந்த நூல்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களால் வழங்கப்படவுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் வழங்கப்படவுள்ள இந் நூல்களைப் பெறவிரும்பும் சனசமூக நிலையங்கள், உரிய கோரிக்கைகளுடன் அமைச்சர் அவர்களது யாழ். அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறனர்.

மேற்படி பதிவுகள் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாப் திட்ட உயரதிகாரிகள் - அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிப்பு

வடக்கு கிழக்கு நீப்பாசன விவசாய அபிவிருத்தி திட்டமான நியாப் அமைப்பின் உயரதிகாரிகள் கடந்த வியாழக் கிழமை மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து விரிவாக கலந்துரையாடி உள்ளனர்.

நியாப் மீள் எழுச்சித் திட்டத்தின் பணிப்பாளர் ரி.எச்.சுகததாச, வடமாகாண மேலதிக பணிப்பாளர் விநோதராஜா, யாழ். மாவட்ட பணிப்பாளர் விஸ்வ லிங்கம் ஆகியோரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடனான சந்திப் பினை மேற்கொண்டவர்களாவார்.

இச்சந்திப்பின்போது மீள் எழுச்சித் திட்டமூடாக வடபகுதியில் மேற் கொள்ளப்படவேண்டிய பூர்வாங்க அபிவி ருத்தி திட்டங்கள் குறித்து அங்கு கலந்து ரையாடப்பட்டுள்ளது. பிரதானமாக வழுக்கி ஆறு அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுத்தல் குறித்து ஆராயப்பட்ட துடன், அபிவிருத்திக்காக 25 கிராமங்க ளைத் தெரிவுசெய்து விவசாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், சமூக ஊக்குவிப்பாளர் ஆகியோரின் பங்களிப் புடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நியாப் உயரதிகாரிகள்...

தல் என்பன முக்கியமாக கலந்துரையாடப் பட்டன.

மேலும் மீள் எழுச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை உச்ச பயன் பெறும் வகையில் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் பழப்பயிர்ச் செய்கையில் பழைய முறைகளையும் கைவிட்டு புதிய முறைகளையும் புதிய இனங்களையும் அறிமுகப்படுத்துவது குறித்தும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நன்றாக விளைச்சலைத் தரும் திராட்சைப்பழ உற்பத்தியினை நவீன முறைக்கு மாற்றி விதைகளற்ற ருசியான திராட்சை செய்கையினை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த நியாப் உயரதிகாரிகள் கூட்டு றவுத் துறையில் இலங்கையில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருக்கும் நிலையில் கூட்டுறவு அமைப்பினூடாக விவசாய அபிவிருத்தியை மேற்கொள்ளவும் உற்பத்திப் பொருட்களை பதனிடுதல் மற்றும் கொழும் பிற்கும் வெளிநாடுகளிற்கும் ஏற்றுமதி மேற்கொள்ளவும் சிறந்த வேலைத் திட்டங் களை முன்னெடுக்க முடியும் என தெரிவித்த துடன் அதற்கு தமது பங்களிப்பினை வழங்கவும் தயாராக இருப்பதாக தெரிவித் தனர். நியாப் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழான சம்பந்தப்பட்டவர்களுடனான சந்திப் பினை எதிர்வரும் 3ஆம் திகதியும் செயற்றிட்டம் தொடர்பான விரிவான மாநாட்டினை எதிர்வரும் 5ஆம் திகதியும் நடாத்துவதென்றும் இன்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது. மேற்படி மாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் தலா ஆறு பிரதிநிதிகளும் அத்துடன் விவசாய திணைக்கள பிரதிநிதிகள், வழுக்கி ஆற்றுத்திட்ட ஒப்பந்தகாரர் உள்ளிட்ட சகலரும் பங்குகொள்வார்கள் எனவும் சந்திப்பின் இறுதியில் முடிவு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் அமைச்சர் டக்ளஸ் கவனம்

யாழ்ப்பாணம் தென்மராட்சி மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மாணவர் களின் கற்றல் நடவடிக்கைகளை மேம் படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தியுள்ளார். இந்த மாணவர்கள் வடமராட்சி கிழக்கு மற்றும் பளை பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளார்கள். அமைச்சரின் பணிப்புரைக்கமைய மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வ ரத்தினம் தலைமையிலான குழுவினர் அங்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே மாணவர்களின் நலன்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. நலன்புரி நிலை யத்தில் தங்கியுள்ள 48 க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஆர்வம் கொண்டிருப்பதாக குழுவினர் தெரிவித் துள்ளனர்.

அத்துடன் அங்கு தங்கியுள்ள ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்க ளின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப் பதற்கு திட்டமிடப்பட்டுள்ள அதேவேளை, தென்மராட்சி நாவலடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பிறிதொரு நலன் புரி முகாம் அமைக்கப்பட்டு 30 குடும்பங்கள் வரை குடியமர்த்தப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கல்லூரி பிரச்சினைகளின் தீர்வுக்கு உறுதி!

யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரி நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை கடந்த புதன் கிழமை சந்தித்து விரிவாக கலந்துரை யாடி உள்ளனர்.

முன்னர் திருநெல்வேலியில் வேறு வளாகப் பிரதேசத்தில் இயங்கிய யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரியானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்க ளது முழுமுயற்சியினால் தற்போது யாழ். குருநகரில் சொந்தக் காணியில் புதிய கட்டடத்தில் சிறப்பாக இயங்கி வருகின் றது. இப்புதிய கட்டடம் அமைப்பதற்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 400 மில்லியன் ரூபா நிதியினை திறைசேரியிலிருந்து விடுவித்திருந்தார். இவை அனைத்திற்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரி பணிப்பாளர் கதிரமலை அவர்கள் தமது தற்போதைய கோரிக்கை களையும் முன்வைத்தார்.

குறிப்பாக விரிவுரையாளர்களின் நிரந்தர நியமனம், உயர் தேசிய டிப்ளோமாவில் புதிய கற்கை நெறிகளை இணைத்துக் கொள்ளுதல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை நிர்வாகத்தினர் முன்வைத்தனர். இக்கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், உயர் கல்வி அமைச்சருடன் இவ்விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி உரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதாக அவர்களுக்கு உறுதியளித்தார்.

ஊடகவியலாளர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான ஊடகவியலாளர்கள் சந்திப்பு...

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்த தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் ஆங்கில சிங்கள பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களும் ரூபவாஹினி, சுவர்ணவாஹினி ஐ.ரி.என். தெரண உள்ளிட்ட தொலைக்காட்சி மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்களும் மேலும் பிபிசி, சிஎன்என், ஸ்கை, பிரிஐ, ஏஐஆர் போன்ற சர்வதேச ஊடகவியலாளர்களுமே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்தவர்களாவர்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விரிவாக பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், வன்னி வெளிக்கும் நிலையில் எமது மக்களுக்குப் புதியதோர் வளமான எதிர்காலம் தென்படுகின்றது எனத் தெரிவித்தார். புலிகள் தோற்கடிக்கப்படமுடியாத ஓர் சக்தி என பரவலான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டபோது ஆரம்பத்திலிருந்தே அதனை ஆணித்தரமாக தான் மறுத்துவந்ததை நினைவுகூர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமது பலத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்காக புலிகள் என்னத்தை சாதித்தார்கள்? அழிவுகளை மட்டுமே அவர்கள் விட்டுச் செல்வதாகத் தெரிவித்தார்.

அமைச்சரவர்களைக்கண்டு கலந்துரையாடி அளவளாவிய தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் யாழ். மாவட்ட தேச மக்கள் எழுச்சிப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'வன்னி மக்களைப் புலிகள் விடுவிக்க வேண்டும்' என நடாத்தப்பட்ட பிரமாண்டமான பேரணியை நேரடியாக அவதானித்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு வெகுமதி

பாடசாலைகளுக்கிடையில் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற தேசிய விளை யாட்டுப் போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றுக்கொண்ட வடபகுதி மாணவ மாண விகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடந்த புதன்கிழமை ஊக்குவிப்பு வெகுமதிகளை வழங்கினார்.

கடந்த வருட இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற மெய்வல்லுநர் மற்றும் சகல துறை விளையாட்டுக்களில் வெற்றியீட்டி யதன் மூலம் யாழ். மாவட்டத்திற்கும் வடபகுதிக்குமான பெருமையினை சுமார் 74 மாணவ மாணவியர்கள் பெற்றுக்கொடுத்தி ருந்தனர். அவர்களை கௌரவிக்கும் முகமாக ஊக்குவிப்பு வெகுமதி வழங்கும் நிகழ்வு யாழ். நகரிலுள்ள சமூகசேவைகள் அமைச்சரின் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை யாற்றிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி அவர்கள் விளையாட்டுத் துறை ஊக்குவிப்புக்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற் கொண்டுவரும் நடவடிக்கைகளை எடுத்துக் கூறியதுடன் அவரது காலத்திலேயே யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையானது தேசிய ரீதியில் பிரகாசிக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஊக்குவிப்பு வெகுமதி வழங்கும் நிகழ்வில் பங்குகொண்டு வடபிராந்திய மேலதிக கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் மாஸ்டர் அவர்கள் உரையாற்றுகையில் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப் பட்டு மாகாண மட்டத்திற்கும் அதிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கும் சென்ற நூற்றுக்கணக்கான எமது மாணவ மாணவிகளுக்குப் போக்கு வரத்து தங்குமிட உணவு வசதிகளை ஏற் படுத்திக்கொடுத்து, அவர்களை சகலதுறை விளையாட்டுக்களிலும் பங்குபற்ற வைத்த வடமாகாண விஷேட செயலணித் தலைவரும் எமது அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு என்றும் நன்றியுடைய வர்களாக இருப்போம். விளையாட்டுத் துறையில் மட்டுமன்றி அவர் இறுதியாக யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குத் தேவை யான இரசாயன ஆய்வுகூட உபகரணங் களைக் கூட யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் எடுப்பித்து தந்துள்ளார். ஒருபோதும் எமக்கு கிடைக்காது என எண்ணியிருந்த பல ஆய்வுகூட உபகரணங்களை இப்போது யாழ். பாடசாலை சமூகம் பெற்றுக் கொண்டுள்ளது. இதனை யாழ். பாடசாலை கல்விச் சமூகம் நன்றியோடு நினைவு கூருகின்றது என வடபிராந்திய மேலதிக கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் மாஸ்டர் அவர்கள் தெரித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தேசியமட்டத்தில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டதோடு தற்போது வன்னி வெளித்துவரும் நிலையில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளுக்கு இருந்த அனைத்து தடைகளும் நீக்கப்பட்டு வருகின்றன. விரைவில் தரைப்பாதை திறக்கப்படவுள்ள நிலையில் எமது மாண வர்கள் இன்னுமின்னும் பிரகாசிப்பார்கள் என்ற நம்பிக்கையினை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து தேசிய விளை யாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அவர்கள் ஊக்குவிப்பு வெகுமதி காசோலைகளை வழங்கி வைத்தார். அத்துடன் மட்டுமல்லாது மாணவர்களின் வெற்றிகளுக்குக் காரணமாக இருந்த பயிற்றுவிப்பாளர்களுக்கும் ஊக்குவிப்பு வெகுமதி பரிசில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் வழங்கப் பட்டமை விஷேட அம்சமாகும்.

தாதியர் நியமனம்

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங் களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 125 தாதிமார்களை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடபகுதியிலுள்ள வைத்திய சாலைகளுக்கு 80 தாதியர்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், அவர்களில் பெரும்பாலானவர்களை யாழ்.குடா நாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் சேவையில் ஈடுபடுத்தவுள்ள தாகவும் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைக்கு உறுதி!

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து தமது தேவைகள், வேண்டுகோள்கள் குறித்து விரிவாக கலந்துரையாடி உள்ளனர்.கடந்த 21 ஆம் திகதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவ பிரதிநிதிகள் அமைச்சருடன் சந்தித்ததன் தொடர்ச்சியாகவே கடந்த வியாழக்கிழமை மாணவர்கள் அனைவருடனான இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சமூகசேவைகள் அமைச்சரின் யாழ். பணிமனைக்குத் திரண்டுவந்திருந்த அம்மாணவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவும் பௌதீக வளங்கள் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை தொடர்பாக எடுத்துக்கூறியதுடன் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமக்கு பொருத்தமான நிதியுதவிகளை, பெற்றுத்தருமாறும் அத்துடன் பட்டம் பெற்றபின்னர் உரிய வேலைவாய்ப்பினை பெறுவதற்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகளை அவதானத்தில் எடுத்துக்கொண்ட அமைச்சரவர்கள் அம்மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்ததுடன் தொழிநுட்பக் கல்லூரியின் தரத்தை உயர்த்தவும் காலத்தின் தேவைக்கேற்றவாறு புதிய பாடநெறிகளை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் மாணவர்கள் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற வகையில் தமது கல்வியையும் முயற்சிகளையும் எமது மக்களின் முன்னேற்றத்திற்கு முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

விரைவில் தொண்டராசிரியர்களின் கோரிக்கை நிவர்த்திசெய்யப்படும்

-அமைச்சர் டக்ளஸ் உறுதி-

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களின் கஷ்டங்களையும் அதன்காரணமாக அவர்களின் தற்போதைய நிலைமைகளையும் நான் நன்கறிவேன். மிக விரைவில் உங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறு தம்மை சந்தித்த தொண்டரா சியர்களின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

சமூகசேவைகள் அமைச்சரின் யாழ். பணிமனைக்கு நூற்றுக்கணக்கான தொண்டராசிரியர்கள் திரண்டுவந்த நிலையில் அவர்களின் பிரதிநிதிகள் அமைச்சருடன் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் பங்குகொண்டனர்.

அவர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 90ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தேவை கருதி நெடுந்தீவிலும் பின்னர் முழு தீவகத்திலும் தொண்டராசிரியர் நியமனம் வழங்க நாமே காரணமாக இருந்தோம். இது பின்னர் யாழ். மாவட்டம் வடக்கு கிழக்கு மாகாணம் என தொடர்ந்து இறுதியில் முழு நாட்டிலும் தொண்டராசிரியர்களின் நியமனத்திற்கு வழிவகுத்தது எனத் தெரிவித்தார்.

அங்கு தமது ஆதங்கங்களை தொண்டராசிரிய பிரதிநிதிகள் வெளியிட்டனர். தொண்டராசிரியை ஒருவர் கருத்து தெரிவிக்கை யில், தம்மிடம் கல்வி பயின்ற மாணவர்கள் சிலர் பட்டதாரி நியமனம் பெற்றுவிட்டார்கள் என்றும் தெரிவித்தார். அவர்களது ஆதங்கங்களையும் கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சிறிது காலம் பொறுத் திருக்கும்படியும் அவர்களது நிரந்தர நியமனத்திற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் தொண்டராசிரிய பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org